www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

மே - 2004
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



ஆட்டோகிராஃப்
கழிவிரக்கத்தின்
கவிதை



பதின்மூன்று தேர்தல்களாய்
பாலைவனப் பயணம்
ஜன நாயகம் வாழ்வதற்கு
மக்கள் தந்த விலை...

# மரணம்!

படிப்பகம்

www.padippakam.com




# வாசகர் கடிதம்

● தலையங்கம் ('மகாமகம்: குஜராத்திற்கொரு முன்னோட்டம்') எதிர்வரும் மாபெரும் அபாயத்தை ஆழமாக சுட்டிக் காட்டுவதாக இருந்தது. மீண்டும் பெருமளவு பகுத்தறிவு, சுயமரியாதை, நாத்திகப் பிரச்சாரம் நடத்தப்பட வேண்டும் என அறிவித்திருப்பது நூறுசதம் சரியான கருத்து. அந்த அடிப்படையில்தான் சென்ற இதழில் பெரியாரின் கட்டுரை இடம்பெற்றுள்ளது எனக்கருதுகிறேன்.

இசைவிழாவில் தோழர் மருதையன் ஆற்றிய உரை ஆழமான சிந்தனையைத் தூண்டும் விதமாக அமைந்தது. அதையே சுருக்கமான வடிவில் படித்தபோது மேலும் ஆழமாகப் புரிந்தது. 'மன்மதராசா' பாடலைக் கேட்கும்போதும் பார்க்கும்போதும் என்னுள் கடுமையான எரிச்சல் தோன்றும்; அதை ரசிப்பவர்கள் மீது கோபம் வரும். பொதுவாக, ஆபாசம் என்ற வகையில் எதிர்த்தேன். அந்த இசை தோற்றுவிக்கும் உணர்வு என்ன, இசைக்கும் - உணர்வுக்கும் - அரசியலுக்குமான தொடர்பைப் புரிந்து கொண்டபோதுதான் எனக்கு முழுமையாகப்புரிந்தது.

தென்றல் பட விமர்சனம்: படைப்பை சமூக இயக்கத்தின் நடைமுறையில் இணைத்துப் பார்க்காமல் நுகர்வுக் கண்ணோட்டத்தில் பார்க்க வைப்பதும், படைப்பாளனை ரசிகர்கள் உருகி, வழிபட்டு, தெய்வமாகக் கருதி வரும் அடிமைப் புத்தியை விதைக்கும் கருத்தை ஆணித்தரமாகப் புரிந்து கொண்டேன். ரசிகர் சங்கங்களின் மறுபிறப்புதான் தாமரை.

தன்னுடைய படைப்பை அனைவரும் மதிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒருகலைஞனுக்கு இருக்கலாம். ஆனால் அந்தப் படைப்பாளியையே வழிபாட்டுக்குரியவனாக மாற்றுவது, அடிமைப்புத்தியை வளர்ப்பது ஒரு ஆண்டையின் பெருமிதக் கண்ணோட்டமே. இதில் பொதிந்திருந்த பாசிசக்கண்ணோட்டத்தைப் புரிய வைத்தது கட்டுரையின் சிறப்பு. தன்னுடைய அபத்தமான கருத்துகளுக்கு முற்போக்கான முலாம்பூசி மழுங்கடிப்பதை தங்கர் பச்சான் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

— புரட்சித்தூயன், தருமபுரி.

● 'வாழ்க்கை: நாமறியாத டைடல் பார்க்': ஒருசிறுகதைக்கான நீரோட்டத்துடன் நடுத்தரவர்க்கத்தின் போலி மதிப்பீடுகளையும், அற்பத்தனங்களையும் அம்பலப்படுத்தியது. 17,18-ஆம் நூற்றாண்டுகளில், ஆப்பிரிக்கக் கருப்பின மக்களை அடிமைப்படுத்திக் கொண்டு அமெரிக்காவை உருவாக்கிய ஆங்கிலேயர்கள், அவர்கள் மீதான பண்பாட்டுத் துறை ஒடுக்குமுறையாக, கருப்பினமக்களின் கலாச்சாரப் பாரம்பரியம் கொண்ட பெயர்களை மாற்றினர். இங்கே, கால் சென்டர்களில் பணிபுரிகின்ற 'ஒளிரும் இந்தியர்கள்', அமெரிக்க, ஐரோப்பிய முதலாளிகளின் வாயில் நுழைவதற்கேற்ற பெயர்களைச் சூட்டிக் கொண்டிருக்கும் அடிமை விசுவாசம் நம்மைத் தலைகுனியச்செய்கிறது.

— இளந்தீபன், சென்னை.

● தென்றல் திரைப்பட விமர்சனம்: காவிரிக்காக பத்மஸ்ரீ மறுப்பு, தமிழில் குடமுழுக்கு, தப்பாட்டம் இவையெல்லாம் கேவலமான நாயகனுடன் முரண்படுவது என் மனத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி இருந்தது. தங்களது விமர்சனம் அந்தக் கேவலமான நாயகனின் ஆளுமை பாசிசத்தோடு தொடர்புடையது என்பதைத் தெளிவாக்கிவிட்டது. இது தெளிவான மார்க்சிய - லெனினியப் பார்வை.

— கே. சுந்தரமூர்த்தி, திருப்பூர்.

● 'இந்தியா பழிவாங்கும்': கிண்டல் வடிவத்தில் வெளிவந்திருக்கின்ற ஒரு காட்டமான சாடல். மக்களின் நம்பிக்கைகளை வெறும் நக்கல்கள் ஆக்கி விடுகின்ற அரசியல்காரர்களைச் சரியாக சாடியிருக்கிறார் துரை. சண்முகம். நெஞ்சில் நெருப்பு இல்லாமல் இப்படி ஒரு புகை மண்டலம் எழுத்தில் கவிந்து இருக்கமுடியாது.

"இந்தியா டுடே, தினமணி, தினமலர்.... எல்லாம் சேர்ந்து ஒளிர்கின்றன" என்று அச்சாகி இருக்கவேண்டாமா?

— சோதிப்பிரகாசம், சென்னை.

● ஆவணப்படங்களின் தணிக்கைப் பற்றிய கட்டுரை முழுவதுமே சிறப்பு. குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை.

"தோற்றுத் துவண்டது தமிழகம்..." கட்டுரை சீரான நடையில் இல்லை, என்ன சொல்ல வருகிறார் என தெளிவாக சொன்னால் சிறப்பாக இருக்கும். அல்லது பேச்சை சுருக்கி எழுதியவர் குறையா? அங்கொன்றும் இங்கொன்றுமாக கருத்துக்கள் அள்ளித் தெளிக்கப்பட்டுள்ளன.

'தென்றல்' பட விமர்சனம், குறிப்பாக தமிழ்தேசியர்கள் ஆணாதிக்கவாதிகளாக உள்ளனர். அந்த உண்மையை படத்தில் காட்டியுள்ளார். இதற்கு பச்சான் பதில் சொல்வதை விட, தமிழ்தேசியர்கள் பதிலிறுப்பதுதான் பொருத்தமாக அமையும். துரை. சண்முகத்தின் கதை எதார்த்தமான நிலையைக் காட்டுகிறது. அவர் சுட்டும் நிகழ்வுகள் கண்முன்னே நிகழ்வது போன்றே உள்ளன. உண்மைகள் உறைக்கின்றன.

காதலர் தினம் இந்துத்துவாவாதிகளால் எங்ஙனம் பார்க்கப்படுகிறது? அதனை அவர்கள் எங்ஙனம் அணுகுகிறார்கள்? யோசியுங்கள். அதற்கு எதிர் நடவடிக்கையாக நாம் செய்ய வேண்டியவை என்ன - என அணுக வேண்டும். அதை விடுத்து இதையும் பொருளாதார நோக்கில் வலிந்து பார்க்கவேண்டுமா?

டைடல் பார்க் போன்றவை கலாச்சார சீரழிவு என்ற பார்வையை விடுத்து உலகமயமாக்கலின் போட்டியில் ஒரு அங்கம் எனப் பார்க்கக் கூடாதா? உலகமயக் கூறுகளை எதிர்க்க வேண்டியதுதான். ஆனால் நாட்டின் வளர்ச்சிக் கூறுகளை கணக்கில் கொண்டு எதிர்ப்பு அமையலாம் அல்லவா?

— பூ. மணிமாறன்,
தமிழ்பல்கலைக்கழகம், தஞ்சை.

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (மே'04) முடியும் சந்தா எண்கள்**

**231, 420, 849, 850, 854, 867, 868, 870, 871, 877**

**அடுத்த இதழுடன் (ஜூன்'04) முடியும் சந்தா எண்கள்**

**74,140, 357, 561, 607**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிதாகச் சந்தா செலுத்துவோர், புதிய சந்தா என எழுதி தங்களது முழு முகவரியை அ.கு. எண் (Pin Code) உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.


படிப்பகம்

www.padippakam.com

# உயிர்-மானம்-அரசியல்!

இரந்துண்டு வாழ்வது மானமிழந்த வாழ்க்கை. இடுப்பில் துணியின்றியிருப்பதும் இன்னொரு வகையில் மானமிழந்த நிலைதான். இலவச சேலைக்காக லக்னோவில் இடிபட்டு, மிதிபட்டு, நசுங்கி, மூச்சுமுட்டி இறந்த இருபத்தியிரண்டு பெண்களை ***மானம் காக்க உயிர்நீத்தவர்கள்*** என்று அழைப்பதா, அல்லது மானமிழந்து கையேந்தச் சென்றவர்கள் என்பதா? இந்தச் சம்பவத்தில் குற்றவாளிகள் யார்? தர்மப்பிரபு லால்ஜி டாண்டனுக்கு அவப்பெயர் தேடித்தந்த 22 பெண்களா, அல்லது ஒரு கைத்தறிச் சேலைக்காக உயிரைப் பணயம் வைக்கும் நிலைக்கு அந்த ஏழைப் பெண்களைத் தள்ளிய இந்த அரசு அமைப்பா?

''குற்றவாளி பாரதிய ஜனதாக் கட்சிதான்'' என்று அடித்துச் சொல்கிறது காங்கிரசு. ''போலீசிடம் முன் அனுமதி பெறாமல் இத்தகையதொரு கூட்டத்தைக் கூட்டியது கிரிமினல் குற்றம்; பிரதமரின் தொகுதியிலேயே இலவசசேலை விநியோகம் நடந்திருப்பது இலஞ்சம் கொடுத்து ஓட்டு வாங்கும் தேர்தல் முறைகேடு'' - இவைதான் காங்கிரசு கண்டறிந்த குற்றங்கள். அன்றாடம் நடக்கும் பேருந்து, ரயில் விபத்துகளைப் போன்றதொரு விபத்தை அரசியலாக்கக் கூடாது என்கிறார் டாண்டன். 'சமூகநீதிக் காவலர்' முலாயமின் கருத்தும் அதுதான்.

ஒருவேளை, இந்த 22 பேர் இங்கே மிதிபட்டுச் செத்திருக்கவில்லையென்றால் ஏதேனும் ஒரு கஞ்சித் தொட்டியில் மோதிச் செத்திருக்கலாம்; அல்லது பட்டினியால், நோயால், குளிரால்... மெல்ல மெல்ல 'இயற்கையாகவே' செத்துப் போயிருக்கலாம் என்பது எல்லாக் கட்சிகளும் கூற விரும்பும், கூறத் தயங்கும் கருத்து. நடிகை சௌந்தர்யாவைப் போல, இழப்பதற்கு ஒரு வண்ணமயமான வாழ்க்கையோ, கண்ணீர் நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதற்குப் பிரபலங்களோ வாய்க்கப் பெறாத இந்தக் 'கும்பல்' அரசு நிவாரணத்துடன் நிறைவடைய வேண்டியதுதான். எனவே, இது 22 குடும்பங்களின் தனிப்பட்ட விவகாரமாகி விட்டது. அரசியல் தகுதியோ அவலச் சுவையோ இல்லாத, காய்ந்துபோன இந்தச் செய்தி பத்திரிகைகளிலிருந்தும் உதிர்ந்து மறைந்தே விட்டது.

இதே காலகட்டத்தில் வேறொரு நபரின் தனிப்பட்ட விவகாரம், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகச் சித்தரிக்கப்படுவதை நாம் கண்முன்னே காண்கிறோம். தனக்கு ஏற்பட்ட அற்பமான தொழில் நட்டத்தையே ஒரு பொதுப்பிரச்சினையாகச் சித்தரிக்கும் கழிசடை நாயகன் ரஜினியின் முன்னால் 300 பத்திரிகையாளர்கள் முண்டியடிக்கிறார்கள். ரஜினியின் மீது ராமதாஸ் தொடுத்த 'தாக்குதல்' அரசியல், பண்பாட்டு ரீதியான கேள்விகளை உள்ளடக்கியதுதானெனினும், 'பாபா'வுக்கு நேர்ந்தது தொழில் நட்டம்தான். 'பாட்ஷா'வுக்கு நேர்ந்ததோ 'அவமானம்'! ''அவனவன் சொந்தப் பொழப்பப் பாரு'' என்ற கேடுகெட்ட சுயநலவாதத்தையே மாபெரும் தத்துவமாகத் தனது திரைப்படங்களில் உதிர்த்து வரும் இந்தக் காரியக் கிறுக்கனுக்கு, தனது சொந்தப் பொழப்பு பற்றிய விவகாரம், பொதுப்பிரச்சினையாகத் தெரிகிறது. தனது சொந்த நலனுக்காகக் கூடச் செயலில் இறங்கும் துணிவு இல்லாத ஒரு கோழையை, மாபெரும் வீரனாகவும், அறிஞனாகவும், ராஜதந்திரியாகவும் சித்தரித்த ஊடகங்கள், தாங்களே உருவாக்கிய பலூனின் முன்னே முண்டியடிக்கிறார்கள்.

ரஜனியின் ஆன்மீகச் சாயத்தின் நிறம் காவிதான் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிந்த பின்னரும், மவுசிழந்த இந்த நடிகனை எதிர்க்கவோ, ''உன்னுடைய தனிப்பட்ட பிரச்சினைக்கு ஏன் அரசியல் சாயம் பூசுகிறாய்?'' என்று கேட்கவோ எந்தக் கட்சிக்கும் துணிவில்லை. ஏனென்றால், குண்டடிபட்ட எம்.ஜி.ஆர்., உடன்கட்டை ஜெயலலிதா, பண்ணையாரின் மனைவி என 'மேன்'மக்களின் துயரத்திற்கு அரசியல் நிவாரணம் கோரும் ஒரு நீண்ட மரபு இங்கே தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

எனினும், மறுகாலனியாக்கத்தின் விளைவாக, உழைத்து வாழும் மக்கள் இரந்துண்டு வாழும் நிலைக்கு மென்மேலும் தள்ளப்படும் இன்றைய சூழ்நிலையில், இத்தகைய மேன்மக்களின் அவலம் அரசியல் முக்கியத்துவம் பெறுவதும் மென்மேலும் அதிகரிக்கிறது. உயிர் வாழ்தலுக்கு இன்றியமையாத உணவு, தண்ணீர், உடை, மருத்துவம் போன்றனவற்றை மக்களுக்கு வழங்கும் பொறுப்பிலிருந்து அரசு தன்னைக் கழற்றிக் கொள்ளும் அதேநேரத்தில் வள்ளல்கள் அவதரிக்கிறார்கள், இலவச வேட்டி, சேலை, அன்னதானம் போன்ற 'அரசியல் நடவடிக்கைகளில்' ஈடுபடுகிறார்கள். மக்கள் அங்கே கையேந்தி நிற்பது முதலாளித்துவச் சந்தை மற்றும் பொருளாதாரத்தின் மாற்றவியலாத 'விதி'யாகவும், அங்கே மோதிச் சாவது மக்களுடைய தனிப்பட்ட துயரமாகவும் ஆகிவிடுகிறது. 'மேன்'மக்களின் தனிப்பட்ட விவகாரங்களோ அரசியல் அரங்கில் அங்கீகாரத்தையும் அந்தஸ்தையும் கைப்பற்றி விடுகின்றன. இந்தப் போலி ஜனநாயகத்தின் அரசியல் கலாச்சாரத்தில் பாசிசம் பதிக்கும் இந்தியாவுக்கேயுரிய முத்திரை இது.


கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 21
• குரல்: 11-12
• ஏப்ரல்-மே 2004

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்:



இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-ஆவது நிழற்சாலை,
15-ஆவது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

தொலைபேசி: 044-23718706
மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com



அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

அட்டை ஓவியம்:
முகிலன்

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்


படிப்பகம்

www.padippakam.com

# ஜனநாயகம் என்பது இலட்சியமா, வழிமுறையா?

***"ஒடுக்கப்பட்ட வர்க்கம் தன்னுடைய விடுதலையைத் தானே நிறைவேற்றுவதற்குப் பக்குவம் பெறாதிருக்கின்ற வரையில், இன்றுள்ள சமூக அமைப்பு ஒன்றுதான் சாத்தியமானது என்று அதன் பெரும்பான்மையினர் கருதிக்கொண்டிருப்பார்கள்."***

*- எங்கெல்ஸ்: குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்.*

"தேர்தலைப் புறக்கணியுங்கள்" என்று நாம் கூறும்போது "தேர்தலையா புறக்கணிக்கச்சொல்கிறாய்?" என்று மக்கள் யாரும் கொதித்தெழுவதில்லை. இந்த் தேர்தல் ஜனநாயகம் தங்களுக்கு எதையும் வழங்கவில்லை என்பதை மக்கள் தம் சொந்த அனுபவத்தில் உணர்ந்தேயிருக்கிறார்கள். அதனால்தான் "தேர்தலைப் புறக்கணித்து விட்டு வேறென்ன செய்வது?" என்று விழிக்கிறார்கள். எங்கெல்ஸின் வார்த்தைகளில் சொன்னால் "இன்றுள்ள சமூக அமைப்புதான் சாத்தியமானது" என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆளும் வர்க்கமோ இந்த 'ஜனநாயக' அமைப்புதான் மனிதகுலம் கண்டறிந்த அதி உன்னத சமூக அமைப்பு என்றும், இதற்கு வேறு மாற்றே இல்லை என்றும் சாதிக்கிறது.

"வேறென்ன மாற்று" என்று ஏக்கத்துடன் கேட்கும் மக்களின் அவலத்திற்கும், "வேறு மாற்றே இல்லை" என்று சவால் விடும் ஆளும் வர்க்கத்தின் ஆணவத்திற்கும் இடைப்பட்ட சந்தில் சிக்கி மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது இந்தியாவின் தேர்தல் ஜனநாயகம்.

ஜனநாயகம் என்பது வேறு ஏதோவொரு ஒரு உன்னதமான இலட்சியத்தை அடைவதற்கான வழிமுறையா, அல்லது ஜனநாயகம்தான் அந்த லட்சியமா? இது 'வழிமுறை' என்றால் அந்த உன்னத லட்சியம் என்பது என்ன என்ற கேள்விக்கு நாம் விடை காண வேண்டும். அல்லது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதுதான் ஜனநாயகத்தின் லட்சியம் என்றால், அந்த லட்சியத்தின் லட்சணம் என்ன என்பதையும் நாம் பிரித்து ஆராய வேண்டியுள்ளது.

இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே பகவான் எடுத்துள்ள பதினொன்றாவது அவதாரமான 'மார்க்சிஸ்டு' கட்சியின் தலைவர் சீதாராம் யெச்சூரி (இந்து நாளேடு - 25.3.2004) தனது கட்டுரையொன்றில் ரத்தக்கண்ணீர் வடிக்கிறார்.

"தேர்தலில் பணம் ஆறாக ஓடுகிறது; அரசியல் கட்சிகள் முதலாளிகளுடன் நேரடியாகத் தங்களை அடையாளம் காட்டிக்கொள்கிறார்கள்; அரசின் கொள்கைகளோ மேலும் மேலும் பணக்காரர்களுக்கு ஆதரவாகவே சென்று கொண்டிருக்கின்றன. ஜனநாயகத்தின் அர்த்தம் களவாடப்படுகிறது... தேர்தல் ஜனநாயகத்தின் வெளியலங்காரம் பாதுகாக்கப்படுகிறது; ஆனால் ஜனநாயகத்தின் சாரமோ புறந்தள்ளப்படுகிறது" என்கிறார் யெச்சூரி.

தேர்தல் அரசியலின் சீரழிவுகளை இன்னமும் அடுக்கலாம். 13-வது நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் கிரிமினல் குற்ற வழக்குகளில் சிக்கிய அயோக்கியர்கள்; இந்தத் தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களில் ஆகப் பெரும்பான்மையானவர்கள் கோடீசுவரர்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றங்கள் நாடாளுமன்றங்களின் நிலை இதுவென்றால், நிர்வாக எந்திரமும் போலீசும் ஆளும் வர்க்கத்தின் கையாட்படையாகவும் கிரிமினல்களின் கூடாரமுமாகவே செயல்படுகின்றன. சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்காகவே இறக்கப்பட்டிருக்கும் நங்கூரமான நீதிமன்றமோ மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் கட்டைப் பஞ்சாயத்து மன்றமாக இருக்கிறது.

***இந்தச் சீரழிவுகளின் மரபணுக்களைத் தன்னகத்தே கொண்டிராத, தூய்மையான, தெளிந்த, கன்னிமை குலையாத அந்த ஜனநாயகத்தின் சாரம் என்ன? யெச்சூரியும், தினமணியின் நடுப்பக்கக் கட்டுரையாளர்களான காரியக் குருடர்களும், அசடுகளும் மீட்க விரும்பும் அந்த 'தேவனுடைய சாம்ராச்சியம்' எங்கே இருக்கிறது? பைபிளைப போலவே இதுவும் காகிதத்தில் தான் இருக்கிறது.***

யெச்சூரியின் கண்ணீருக்கு வலுச் சேர்க்கும் ஆதாரங்களை நாம் இன்னமும் அடுக்கலாம். ஆனால், "ஜனநாயகத்தின் அர்த்தம் களவாடப்படுகிறது, அதன் சாரம் புறந்தள்ளப்படுகிறது" என்று அவர் கூறுகிறாரே அந்த சாரம் என்ன என்பதே நம்முன் உள்ள கேள்வி.

இந்தச் சீரழிவுகளின் மரபணுக்களைத் தன்னகத்தே கொண்டிராத, தூய்மையான, தெளிந்த, கன்னிமை குலையாத அந்த ஜனநாயகத்தின் சாரம் என்ன? யெச்சூரியும், தினமணியின் நடுப்பக்கக் கட்டுரையாளர்களான காரியக் குருடர்களும், அசடுகளும் மீட்க விரும்பும் அந்த 'தேவனுடைய சாம்ராச்சியம்' எங்கே இருக்கிறது? பைபிளைப் போலவே இதுவும் காகிதத்தில்தான் இருக்கிறது - அரசியல் சட்டக் காகிதத்தில்!

இந்திய அரசியல் சட்டத்தின் ஜனநாயக 'அஸ்திவாரம்' கீழ்க்கண்ட அடிப்படை உரிமைகளை நமக்கு வழங்குகிறது. "சட்டத்தின் முன் அனைவரும் சமம்; மத, இன, சாதி, பால் வேறுபாடுகளின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படாமை; பேச்சுரிமை; வழிபாட்டுரிமை; தனிநபர் சுதந்திரம் மற்றும் வாழ்வுக்குப் பாதுகாப்பு."

அரசியல் சட்டத்தின் வழிகாட்டும் கோட்பாடோ ஒரு பொற்காலத்தை நமக்குப் படமாகக் காட்டுகிறது.

"எல்லோருக்கும் சமநீதி, பசியும் வறுமையும் அற்ற வாழ்க்கை, கவுரவமாக வாழும் சுதந்திரம், கவுரவமான ஊதியம் பெறும் உரிமை, பாலின சமத்துவம், தீண்டாமை ஒழிப்பு, கட்டாய அடிப்படைக் கல்வி, பொதுச்சுகாதாரம், சத்துணவுக்கு அனைவருக்கும் சம வாய்ப்பு, தேசிய சொத்துக்கள், வளங்களைப் பாதுகாத்தல்..." என்று ரீல் ரீலாக ஓடுகிறது இந்தப் படம்.

நடப்போ, கற்காலத்தை நோக்கித் திரும்பிச் செல்வதாக இருக்கிறது. "ஒரு வர்க்கத்துக்கு ஒரு நீதி, உணவுக் கிடங்கின் வாசலிலேயே மக்கள் பட்டினியால் செத்தாலும் 6 கோடி டன் உணவுத் தானியத்தைப் பூட்டி வைப்பதற்கான சுதந்திரம், குறைந்தபட்ச ஊதியம் என்ற சட்டப் பாதுகாப்பையே நீக்குதல், உடன்கட்டை முதல் விபச்சாரம் வரையிலான அனைத்துக்கும் அங்கீகாரம், வன்கொடுமைத் தடைச்சட்டத்தையே ஒழிப்பது,

www.padippakam.com

தொடக்கப்பள்ளிகள்மூடல், அரசுமருத்துவமனைகள்மூடல், சுரங்கங்கள், காடுகள், துறைமுகங்கள், பொதுத்துறைகள் அனைத்தையும்பன்னாட்டுநிறுவனங்களுக்கு ஏலம் விடுதல்...'' வழிகாட்டும் கோட்பாடுகளின் லட்சணம் நடைமுறையில்இப்படித்தானிருக்கிறது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால் எந்தப் பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெற்று ஆள்வதற்கான நியாயவுரிமையை இந்த அரசாங்கம் பெறுகிறதோ, அந்த மக்களின் நலன்களை பணக்காரவர்க்கத்துக்கு அதாவது வாக்குச் சாவடியையே தங்கள் வாழ்க்கையில் பார்த்திராத வர்க்கத்திற்குக்காவு கொடுப்பதே இந்த ஜனநாயகத்தின் சாரமாக இருக்கிறது.,

ஆனால் கிழக்கே செல்ல வேண்டிய ஜனநாயகம் மேற்கு நோக்கித்திசைதிரும்பி விட்டதாகவும் அதனைத் தேர்தல் முறையின் வாயிலாகவும் இந்த அரசமைப்புக்கு உட்பட்டும் மீண்டும் நெறிப்படுத்தி விட முடியுமென்றும் நம் பச்சொல்கிறார்கள்யெச்சூரிவகையறாக்கள். அதாவது இந்த அரசமைப்பு கூறும் இலட்சியங்களைத் தேர்தல் ஜனநாயக வழிமுறை மூலமே அடைந்துவிட முடியும் என்றுஆசைகாட்டுகிறார்கள்.

சொத்துரிமையையும் சுரண்டும் உரிமையையும் அடிப்படை உரிமைகளாகக் கொண்டிருக்கும் ஜனநாயகம், அனைவருக்கும் சம நீதியை எப்படி நிலைநாட்ட முடியும்என்பதேகேள்வி.

கேள்வியை இப்படிப் போடுவோம். ''இந்தியா யாருக்குச் சொந்தம்?'' ''சந்தேகமில்லாமல் இந்தியர்களுக்குத்தான் சொந்தம்'' என்று பதில் வரும். ஆனால் தொலைபேசித்துறையில்பாதிபன்னாட்டு நிறுவனங்களுக்குச் சொந்தம், எண்ணெய் எரிவாயுத் துறையில் பாதி அம்பானிக்குச் சொந்தம், துறைமுகங்களும் பிரதமரின் தங்க நாற்கரச் சாலையும், சுரங்கங்களும் கனி வளங்களும் அமீனா அருண்சோரியின் கையில் கிடைத்த அனைத்தும் அந்நிய முதலாளிகளுக்குச் சொந்தம். ''எஞ்சியிருக்கும் இந்தியா இந்தியர்களுக்குச் சொந்தம்'' என்று பொருள் கொள்ளலாமா?

''ஒரு சொத்தின் உடைமையாளனுக்குத்தான் அதன்மீது அதிகாரம் இருக்கிறது'' என்ற எளிய உண்மையை அளவுகோலாகக்கொண்டு பார்த்தால் இந்தியா என்ற சொத்தின் மீதான அதிகாரம் பெரும்பான்மை இந்தியர்களிடம் இல்லை. ஆனால், இந்தியா என்ற தேசத்தின் மீது மக்களுக்கு அதிகாரம் இருக்கிறதாம்! முந்தையது பொருளாதார ரீதியான அதிகாரமாம்! பிந்தையது அரசியல் ரீதியான அதிகாரமாம்! அதாவது மக்களின் இறையாண்மையாம்!

''சொத்துடைமையாளர்கள்தான் தேசத்தின் நியாயமான சொந்தக்காரர்கள். மற்ற மக்களெல்லாம் விடுதியில் தங்கிச் செல்லும் வழிப்போக்கர்களைப் போன்றவர்கள்'' என்றார் ஒரு 18-ஆம் நூற்றாண்டு பிரிட்டிஷ் முதலாளித்துவ அறிஞர். ''தனிச் சொத்துடைமைதான் நாகரிகத்திற்கு அடிப்படை என்றால், நாகரிகத்தைக் காப்பதுதான் அரசின் கடமை என்றால், யாருக்குத் தேசம் சொந்தமாக இருக்கிறதோ, அவர்கள் தான் அதை ஆட்சி செய்ய வேண்டும்'' என்றார் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் முதல்தலைமைநீதிபதி.


அனைவருக்கும் வழங்கப்படும் வாக்குரிமை, தங்களது சொத்துரிமையில் கை வைத்துவிடாமல் தடுப்பதெப்படி? மன்னனிடமிருந்து பறிக்கப்பட்ட இறையாண்மையை மக்கள்தமக்கெதிராகப் பயன்படுத்திவிடாமல் தடுப்பதெப்படி? — என்ற கேள்விகளுக்கு விடை காணும் போக்கில்தான் எல்லா முதலாளித்துவ ஜனநாயக மாயைகளும் உருவாக்கப்பட்டன. பேச்சுரிமை, எழுத்துரிமை தொடங்கி எல்லா வகையான உரிமைகளும், மக்கள் நல அரசு முதல் பஞ்சாயத்துராஜ்வரையிலான எல்லாமாயத் தோற்றங்களும் இந்த வகைப்பட்டவைதான்.

முதலாளித்துவஜனநாயகத்தின் மீதான மயக்கத்தைப் பராமரிப்பதில் பெரும்பங்கு வகிக்கும் பல கட்சிஆட்சிமுறை, வேறுபட்ட அரசியல் பொருளாதாரக் கருத்தோட்டங்களுக்கும் இடமளிப்பதைப் போன்றதொருபிரமையைமக்களிடம் தோற்றுவிக்கிறது. உண்மையில் சொத்துடைமை வர்க்கத்தின் வேறுபட்டபிரிவினருடைய நலன்களையும், அவர்களுக்கிடையிலான முரண்பாடுகளையும்தான் இவர்கள் பிரதிபலிக்கின்றனர். உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையைப்பாதுகாப்பதென்ற சத்தியப்பிரமாணம்அடிப்படையிலேயே இவர்களை ஒன்றிணைக்கிறது. ஓரணியாய்வைத்திருக்கிறது.

இதற்கு உடன்படாதவர்கள் தான் தீவிரவாதிகள், நக்சலைட்டுகள்; அல்லது 'ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கையில்லாதவர்கள்'என்றுமுத்திரைகுத்தப்பட்டுப் போலீசால் விலங்குகளைப் போல வேட்டையாடப்படுபவர்கள்.

முதலாளித்துவச் சுரண்டலை ஒப்புக் கொள்வது என்ற நிபந்தனையின் பேரில் நமக்கு வழங்கப்படும் உரிமைகள்தான் முதலாளித்துவ ஜனநாயக உரிமைகள். எனவே இந்த உரிமைகள் தன்னியல்பிலேயே முரண்பாடுகளைக் கொண்டிருப்பதில் வியப்பில்லை.

மக்கள்தொகையில் பாதிப்பேருக்கு எழுத்தறிவே இல்லாதபோது எழுத்துரிமையால் என்ன பயன்? கல்வியறிவிருந்தாலும் லட்சக்கணக்கில் பணமின்றி பத்திரிக்கை நடத்த முடியாது எனும்போது கருத்துரிமையால்என்னபயன்? வேலை வாய்ப்பேஇல்லாதபோது இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் சென்று வேலை செய்யும் உரிமையால் என்ன பயன்? உள்ள தொழில்களே நசிந்து கொண்டிருக்கும்போது, எங்கு வேண்டு




பச்சையாகச் சொல்வதானால் இரண்டு வேளை சோறும் துணியும் கொடுக்கத் தயாரென்றால் எங்களுக்கு உன் வாக்குரிமையே வேண்டாமென்று பத்திரம் எழுதித் தரவும் தயாராக இருக்கிறார்கள் ஏழை இந்தியர்கள். அதாவது ''சோறா - சுதந்திரமா'' என்ற கேள்விக்கு ''சோறு'' என்று பதிலளிக்கிறது ஏழைகளின் இந்தியா. ஆளும் வர்க்கமோ ''சோறு போட முடியாது, 'சுதந்திரம்' தான் தருவேன்'' என்று முழங்குகிறது.

www.padippakam.com

மானாலும் தொழில் நடத்தும் உரிமையால் என்ன பயன்? பட்டினியால் சுருண்டு கிடப்பவனுக்கு வாழ்வுரிமையால் என்ன பயன்?

மக்கள் தமக்குத் தெரிந்த முறையில் இந்தக் கேள்வியை எழுப்பிக் கொண்டு தானிருக்கிறார்கள். ''உணவு, தண்ணீர், மின்சாரம், சாலை, கல்வி, மருத்துவம், வேலை... என எதையுமே வழங்க முடியாத வாக்குரிமையால் என்ன பயன்?'' என்றுதேர்தலைப்புறக்கணிக்கிறார்கள்.

அப்துல் கலாமின் கூற்றுப்படி ''ஒவ்வொரு குடிமகனுக்கும் ஜனநாயகத்தில் சம உரிமை உண்டு என்பதற்கு நிரூபணமாக விளங்கும் தேர்தலை, புனிதமான வாக்குரிமையை, தாய்மண்ணுக்கு ஆற்ற வேண்டிய கட்டாயக் கடமையை'' கேவலம் இரண்டு குடம் தண்ணீருக்காக, ஒரு ரேசன் கடைக்காக, ஒரு மருத்துவமனைக்காகப் புறக்கணிக்கிறார்கள், 'உரிமையின் அருமை புரியாத' மக்கள்.

பச்சையாகச் சொல்வதானால் இரண்டு வேளை சோறும் துணியும் கொடுக்கத் தயாரென்றால் எங்களுக்கு உன் வாக்குரிமையே வேண்டாமென்று பத்திரம் எழுதித்தரவும் தயாராக இருக்கிறார்கள் ஏழை இந்தியர்கள். அதாவது ''சோறா - சுதந்திரமா'' என்ற கேள்விக்கு ''சோறு'' என்று பதிலளிக்கிறது ஏழைகளின் இந்தியா. ஆளும் வர்க்கமோ ''சோறு போட முடியாது, 'சுதந்திரம்' தான் தருவேன்'' என்று முழங்குகிறது.


''பொருளாதாரச் சுரண்டல் காரணமாக நீ வழங்கும் எந்தச் சுதந்திரத்தையும் பணமில்லாத மக்களால் பயன்படுத்த இயலவில்லை'' என்று சொன்னால் ''பொருளாதார ஏற்றத்தாழ்வும் சுதந்திரத்தின் ஒரு அங்கமே'' என்று பதில் சொல்கிறது முதலாளித்துவம்!

'அரசியல் சமத்துவம்' என்ற முதலாளித்துவ நரித்தனத்தின் சாயம் இங்கே வெளுத்து விடுகிறது. 'தனிநபர் சுதந்திரம்' என்ற சொற்றொடரின் உண்மையான பொருள் விளங்கத் தொடங்குகிறது.

'கட்டுப்பாடுகள் இல்லாமை' என்ற எதிர்மறைப் பொருளில் மட்டுமே சுதந்திரத்திற்கு விளக்கம் கூறும் முதலாளித்துவம், பொருளாதார ஏற்றத்தாழ்வை இயற்கையானதாகவும், தலையிடக் கூடாததாகவும் சித்தரிக்கிறது.

''அவனவன் பாடு அவனவனுக்கு; உன் சொந்தக் காலில் நின்று கொள்; யாரும் உனக்கு வாழ்க்கையை வழங்க முடியாது; நீயே முயன்று முன்னேறிக் கொள்; முன்னேறுவதற்காக பொய், களவு, சூது, சதி போன்ற வழிமுறைகளை நீ பின்பற்ற வேண்டியிருந்தால் செய் - அது உன் திறமை'' - என்கிறது முதலாளித்துவம்.

எனவே ''சொத்து சேர்ப்பவன்தான் வாழ்க்கையில் வெற்றி பெற்றவன்; தனிநபரின் மகிழ்ச்சிதான் உயர்ந்த லட்சியம். இந்தப் போட்டியில் இடறி விழுந்த திறமையற்ற மனிதர்கள்தான் ஏழைகள். அவர்களுக்காக நாம் இரக்கம் காட்ட முடியாது. திறமையின்மையின் விளைவுதான் ஏழ்மை'' என்கிறது முதலாளித்துவம்.



**இந்தத் தேர்தல் ஜனநாயகத்தை ஒரு 'வழிமுறை' என்று இன்னமும் நம்பிக் கொண்டிருப்பவர்கள் தாராளமாக வாக்களிக்கலாம். நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும் பாசிசத்திற்கு வாக்களிக்கிறீர்கள் என்றே பொருள்.**

ஆடுகளைத் தின்பதற்கு ஓநாய்கள் 'இயற்கையாகவே' பெற்றிருக்கும் சுதந்திரத்தைத்தான் முதலாளித்துவத் தனிநபர் சுதந்திரம் வலியுறுத்துகிறது. முடியாட்சிக்கும், சர்வாதிகாரத்திற்கும் எதிரானதாகத் தன்னைச் சித்தரித்துக் கொள்ளும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் சித்தாந்தம், கோட்பாட்டிலும் நடைமுறையிலும் அதற்கு நேரெதிரான துருவத்தில் நிற்கிறது.

'வலியதே வெல்லும்' என்ற இந்தச் சித்தாந்தம் பாசிசம், நாஜிசம், பார்ப்பனியம், நிறவெறி ஆகிய அனைத்துப் பிற்போக்குத்தனங்களுடனும் தொப்புள் கொடி உறவைக் கொண்டிருக்கிறது.

பெரும்பான்மையான உழைக்கும் மக்களைத் தேவையற்றவர்களாகவும், செத்தொழிய வேண்டியவர்களாகவும், மக்கள் நலத்திட்டங்களை 'தேசத்தின் மீது' திணிக்கப்பட்ட சுமைகளாகவும், தொழிலாளர்களின் உரிமைகளை பொருளாதாரத்திற்குப் பூட்டப்பட்ட விலங்குகளாகவும் சித்தரிக்கும் மறுகாலனியாக்கக் கொள்கையின் 'பார்வை' திடீரென்று தோன்றிய திசைவிலகல் அல்ல. இதுதான் முதலாளித்துவ ஜனநாயகத்தின் சாரம்.

அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையில் முதலாளித்துவம் மிகத் தந்திரமாக எழுப்பியிருக்கும் தடுப்புச் சுவரைத் தகர்க்காமல் சுதந்திரம், சமத்துவம் என்ற இந்தச் சொற்களுக்கான உண்மையான பொருளை நாம் காண முடியாது.

இன்று உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை வெகுவிரைவாகத் தனியார் முதலாளிகளின் கைக்கு மாறிக் கொண்டிருக்கும்போது, உலகின் செல்வங்கள் அனைத்தும் விரல்விட்டு எண்ணக்கூடிய சில பன்னாட்டு தொழிற்கழகங்களின் உடைமையாகி வரும்போது அரசியல் அதிகாரம் மட்டும் நம் கையில் நீடிக்க முடியும் என்று கருதுவது அசட்டுத்தனம். சொத்தின் உடைமையாளன் தான் தேசத்தை ஆள்கிறான். இதுதான் முதலாளித்துவ ஜனநாயகம்.

உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையை ஒழிக்கும் சோசலிசம் 'ஜனநாயக விரோதமானது' என்று எதிரிகள் கூக்குரல் எழுப்புவதன் காரணமும் இதுதான். எதிரிகளின் 'ஜனநாயக' உரிமையைப் பறிப்பதுதான் தங்களது ஜனநாயக உரிமையை மக்கள் நிலைநாட்டிக் கொள்வதற்கான முன்நிபந்தனை. அந்த நடவடிக்கையின் பெயர் புரட்சி.

இந்த ஜனநாயகம் என்பது வேறெந்த உயர்ந்த இலட்சியத்தையும் அடைவதற்காக உருவாக்கப்பட்ட வழிமுறை அல்ல; ஜனநாயகத்தின் லட்சியம் முதலாளித்துவத் தனிச் சொத்துடைமை. இன்று அதன் பரிணாம வளர்ச்சி - ஏகாதிபத்திய மறுகாலனியாக்கம்!

இந்தத் தேர்தல் ஜனநாயகத்தை ஒரு 'வழிமுறை' என்று இன்னமும் நம்பிக் கொண்டிருப்பவர்கள் தாராளமாக வாக்களிக்கலாம். நீங்கள் யாருக்கு வாக்களித்தாலும் பாசிசத்திற்கு வாக்களிக்கிறீர்கள் என்றே பொருள். ஏனென்றால் முதலாளித்துவ ஜனநாயகத்தின் தவிர்க்கவியலாத நிலைமறுப்பே பாசிசம்.

● மருதையன்

www.padippakam.com



# தேசபக்தியின் இன்றைய நிறம்

நாளெல்லாம் வானொளிப் பெட்டியின் முன்பு உட்கார்ந்து நகத்தைக் கடித்துக் கொண்டு, இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியின் பரபரப்பில் மூழ்கிப் போன இரண்டு நாடுகளின் இலட்சக்கணக்கான இரசிகர்களுக்கு இது தெரியாது. கொளுத்தும் கோடை வெயிலில் கருகி, வேர்வை சிந்தி விளையாடிய ஆட்டக்காரர்களுக்கும் இது தெரியாது. அதுதான் தாம் ஒரு அனைத்துலக அரசு தந்திர சதுரங்க ஆட்டத்தின் பகடைக் காய்களாகப் பயன்படுத்தப் படுகிறோம் என்ற உண்மை.

பாகிஸ்தானில் இந்திய அணியினர் மதவெறித் தீவிரவாதிகளின் பயங்கரவாதத் தாக்குதலை வெடிகுண்டு மழையை எதிர்கொள்ளவும் கூடும் என்று நேற்று வரை நஞ்சு கக்கிய செய்தி ஊடகம், இன்று என்ன செய்கிறது தெரியுமா? அங்கு சென்ற கிரிக்கெட் வீரர்கள் மட்டுமல்ல பார்வையாளர்களாகப் போன இரசிகர்கள் கூட பாகிஸ்தான் அரசும் மக்களும் செய்த விருந்தோம்பல் என்னும் அன்புமழையில் அப்படியே நனைந்து உருகிப் போனதைக் கண்டதாகப் பறைசாற்றுகிறார்கள்.

நம்மால் நம்பவே முடியவில்லை. அங்கு இப்படி நடந்திருக்கும் என்பதையல்ல. இந்தியச் செய்தி ஊடகமும் ஆட்சியாளர்களும் பாகிஸ்தான் குறித்து இப்படியொரு நல்லவிதமான சித்திரத்தை தருகிறார்கள் என்பதை! "இந்தியா டுடே" பத்திரிக்கை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் அறிவிக்கப்படாத ஒரு ஊதுகுழல் - அப்பட்டமான பார்ப்பன பயங்கரவாத ஏடு. அந்தப் பத்திரிக்கை, "இந்தியா கோப்பையை வென்றது! பாகிஸ்தான் இதயத்தை வென்றது!" என்று ஒரு அட்டைப்படக் கட்டுரையே வெளியிட்டு "இந்தியர்களின் கொண்டாட்டத்தில் உள்ளூர்வாசிகளும் பங்கேற்று ஆமோதித்ததுதான் ஆச்சரியமான விஷயம். இது இதயத்தை வருடிய காட்சி என்றுதான் சொல்ல வேண்டும்" என்கிறது.

"இந்தியாவில் கூட இவ்வளவு அருமையாக எப்போதும் நாங்கள் நடத்தப்படவில்லை என்று எண்ணுகிறேன். மொத்த அனுபவமும் மிகவும் அதீத நிறைவைத் தருகிறது. நாங்கள் பெற்ற விருந்தோம்பல் பிரமிப்பூட்டுவதாக இருந்தது" என்று கங்குலி புகழ்ந்து தள்ளியது பாகிஸ்தான் பயணம் குறித்து இந்திய அரசு கிளப்பியிருந்த பீதி - வதந்திகளைப் பொய்ப்பித்தன.

இந்தியாவில் மட்டுமல்ல, பாகிஸ்தானிலும் செய்தி ஊடகங்களில் இப்படிப்பட்ட கதைகளே நிரம்பி வழிகின்றன. இந்த ஆண்டு ஜனவரி இரண்டாம் வாரத்திற்குப் பிறகு எல்லாம் தலைகீழாக நடக்கிறது. இந்தியாவைப் பற்றி பாகிஸ்தானிலும், பாகிஸ்தானைப் பற்றி இந்தியாவிலும் அதற்கு முன்பு பரப்பப்பட்ட செய்திகள் எல்லாம் அடியோடு மாறிப்போய்விட்டன.

பாகிஸ்தான் நாடு என்றாலே ஜனநாயக மாண்பு அறியாத சர்வாதிகாரிகளைக் கொண்ட நாடு. பஞ்சாபிய, பலூச்சிய, பத்தானிய முசுலீம் முரடர்களைக் கொண்ட கொலை குத்துவெட்டு கலகங்கள் நிறைந்த நாடு. அவர்களுக்கு அமைதி, சமாதானம், சகிப்புத் தன்மையெல்லாம் கிடையாது. நாகரிகம், பண்பாடு இல்லாத மதவெறி பிடித்த ஜிகாதிகள் (இசுலாமியப் பயங்கரவாதிகள்) வாழும் நாடு.

அங்கு மதரசாக்களில் உள்ள முல்லாக்கள் மத குருமார்கள் அல்ல; பயங்கரவாதப் பயிற்சியாளர்கள். மசூதிகளில், தர்காக்களில் தொழுகைகளில் பிரார்த்தனையோ மதபோதனையோ நடப்பதில்லை. மதவெறிப் போதனையும் பயங்கரவாதப் பயிற்சியும்தான் நடக்கிறது. உருப்படியான உற்பத்தி எதுவும் பாகிஸ்தானில் நடப்பதில்லை; வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு வேலையற்ற இளைஞர்களுக்குப் பயங்கரவாதப் பயிற்சி கொடுத்து உலக நாடுகளுக்கெல்லாம் அனுப்பிவைக்கப்படுகிறார்கள்.

இசுலாமிய "ஷரியத்" சட்டமே ஆட்சி செய்யும் பாகிஸ்தானில் சாதாரண உரிமைகளே கிடையாது. குறிப்பாக, பெண்கள் வெளியிலே நடமாடவே முடியாது. பர்தாவைப் போர்த்து வீட்டுக்குள் பூட்டி வைத்துப் பிள்ளை பெறும் இயந்திரங்களாக நடத்தப்படுகிறார்கள். கருத்துச் சுதந்திரமோ, மனித உரிமையோ அடியோடு கிடையாது. அதிகாரவெறி பிடித்த இராணுவத் தளபதிகள், இலஞ்ச ஊழலில் மூழ்கித் திளைக்கும் அரசியல்வாதிகள் ஆகிய இரு சக்திகளின் பிடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தானியர்கள் அந்த வாழ்க்கைக்குப் பழகிப் போன பின் தங்கிய சிந்தனையாளர்கள். மொத்தத்தில் அது ஒரு இருண்ட பூமி. இதுதான் இந்தியர்களுக்குக் கடந்த ஜனவரி இரண்டாம் வாரம் வரை சித்தரிக்கப்பட்ட பாகிஸ்தான்.

ஆனால், இப்போது இந்தியச் செய்தி ஊடகம் என்ன சொல்கிறது? "தில்லியைச் சேர்ந்த ஒருவரின் கண்ணைக் கட்டிக் கொண்டுபோய் ஒரு லாகூர் தெருவிலே விடுங்கள். அவரது கண்களை அவிழ்த்துவிட்டு வெகு நேரம் ஆனாலும் அவர் தனது சொந்த ஊரான தில்லியிலேயேதான் இருப்பதாக எண்ணுவார். பழையகாலச் சின்னங்கள்; திட்டுத்திட்டாக செல்வச் செழிப்பு நிறைந்த பகுதிகள்; திணறடிக்கும் மனிதர்களின் கூட்டம் - இப்படி

படிப்பகம்

www.padippakam.com

பாகிஸ்தான் நகரங்கள் இந்திய நகரங்களைப்போலவேஇருக்கிறது.''

''லாகூர், தில்லியின் நெருங்கிய உறவுக்காரனைப் போலவும் கராச்சி, மும்பையின் தூரத்து ஒன்றுவிட்ட சகோதரன் போலவும் உள்ளன'' என்று ஒரு இந்தியப் பத்திரிக்கை எழுதுகிறது. லாகூரும் கராச்சியும் பல இந்திய நகரங்களைப்போல உறங்குவதேஇல்லை. அதிகாலைவரைபொதுஇடங்களில்மக்கள் உணவருந்துகிறார்கள். இரவுக் கேளிக்கை விடுதிகள், குடியும் கூத்துமாகக் களிப்பதற்கான இடங்கள் பல உள்ளன. சாலைகளிலேயே இரவில் மேசைகள் போட்டு உணவு பரிமாறப்படுகின்றது. பெண்களோடு குடும்பம் குடும்பமாக வந்து நள்ளிரவிலும் விருந்துண்ணுகிறார்கள்.

அமெரிக்க உச்சரிப்போடு ஆங்கிலம் பேசும் ஆண்கள், மேலை நாகரிக நவீன உடையில் பகலில் பெண்கள் நடமாடுகிறார்கள். குட்டைப் பாவாடைகளும் நீச்சலுடையும் அணிந்த பெண்கள் பங்கேற்கும் ''ஃபேஷன்'' காட்சிகள் எதிர்ப்போ, தடையோ இல்லாமல் நடக்கின்றன. சிகப்பு விளக்குப் பகுதிகளும் உள்ளன. தனிநபர்கள், குழுக்களாக நடனமாடும் பெண்களைக் கொண்ட வீட்டு அரங்குகள் உள்ளன. இந்து - இசுலாமிய நாகரிகம் கலந்த பண்பாடும், வாழ்க்கையும், உணவு - உடை பழக்கவழக்கங்கள் வட இந்திய நகரங்களில் இருப்பதைப் போலவே பாகிஸ்தான் நகரங்களில் உள்ளன. இந்தி பேசும் இந்துவும் உருது பேசும் முசுலீமும் கலந்துறவாடுதல் எவ்விதத் தடையும் கிடையாது என்பது மட்டுமல்ல. நட்பும் நல்லுறவுமே நிலவுகின்றன. இப்படித்தான் இப்போது பாகிஸ்தானைப் பற்றி இந்தியச் செய்தி ஊடகம்கூறுகிறது.

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாட்டு ஆட்சியாளர்களும் ஆளும் வர்க்கங்களும் மதவெறி, தேசிய வெறியைத் தூண்டிவிட்டு ஆதாயமடைகின்றனர்; இதற்காக இருநாட்டு மக்களும் அவர்களின் நலன்களும் பலியிடப்படுகின்றன என்பது தான் உண்மை. இதுதான் ஒரு அரைநூற்றாண்டு கால வரலாறாக இருந்து வருகையில் இப்போது மட்டும் என்னவந்தது, ஒருதிடீர்மாற்றம்?

''தற்போது நடக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் தானாக நடப்பதாக எனக்குத் தோன்றவில்லை. பல விசயங்கள் செயற்கையாக உருவாக்கப்படுகின்றன என்று தோன்றுகிறது. இன்று, இந்த நிலைமை எப்படி வந்தது என்று யோசித்துப் பாருங்கள்'' என்கிறார் பாகிஸ்தானைச் சேர்ந்த எழுத்தாளர் அன்வர் சயீத்.

வாஜ்பாயி தலைமையிலான ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. 1998-இல் ஆட்சிக்கு வந்தபிறகு தனது தலையாய கடமை பாகிஸ்தானை போர் மூலம் அடக்கி ஒடுக்குவதுதான் என்று இராணுவ அமைச்சர் பெர்னாண்டசும் உள்துறை அமைச்சர் அத்வானியும் மாறி மாறிக் கூச்சலிட்டனர். அதற்காக பொக்ரான் - II அணுகுண்டுச்சோதனை நடத்தினர். இந்த மிரட்டலுக்கு அஞ்சி பாகிஸ்தான் அடங்கிவிடும் என்று நம்பியது இந்திய அரசு. ஆனால் பதிலடியாக பாக்கிஸ்தானும் அணுகுண்டு சோதனை நடத்தியது; தொடர்ந்து இரு நாடுகளும் பல ஏவுகணைச் சோதனைகள் நடத்தினர். இது தனது அணுஆயுத ஏகபோக ஆதிக்கத்துக்கு இடையூறாகக் கருதியது அமெரிக்கா. அதன் நிர்ப்பந்தம் காரணமாக லாகூர் பஸ் பயணத் தூது முயற்சிகளில் இந்தியாவும் பாக்கிஸ்தானும் ஈடுபட்டுத் தோல்வியுற்று, கார்கில் போர் வெடித்தது. அமெரிக்கத் தலையீடு - நிர்ப்பந்தம் காரணமாக அப்போர் முடிவுக்கு வந்தது. அதன்பிறகு நடந்த ஆக்ரா பேச்சுவார்த்தையும் தோல்வியுற்றது.



அமெரிக்க எசமானனுக்கு விசுவாசம்; இந்தியத் தரகு முதலாளிகளுக்கு ஊழியம்: இந்த ஒரே லட்சியத்துக்காக, காலை வாரும் பழைய உத்தியை மாற்றி, பாகிஸ்தான் அயலுறவுத் துறை அமைச்சரைக் கட்டித் தழுவுகிறார் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் யஷ்வந்த் சின்கா.

இந்திய நாடாளுமன்றத்தின் மீது நடந்த 2002 டிசம்பர் தாக்குதலுக்குக் காரணம் பாக். உளவுப் படைதானென்று இந்தியா குற்றஞ்சாட்டியது. அதற்குப் பதிலடி தரப்போவதாகக் காட்டிக் கொண்டு பாக். எல்லையில் இரண்டு இலட்சம் இராணுவத்தினரைக் கொண்டு போய் நிறுத்தியது. ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் இந்த முரண்பாடு - முறுகல் நிலையை நீட்டித்துவிட்டு கடந்த ஆண்டு இறுதியில் திடீரென்று இந்தியா தனது படையை விலக்கிக்கொண்டது.

பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி போர் நிறுத்தத்துக்கும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயி சமாதான முயற்சிக்கும் சிறீநகரில் அழைப்பு விடுத்ததைக் காரணமாக வைத்து அதிகாரிகள் மட்டப் பேச்சு வார்த்தைகளை இருநாடுகளும் தொடங்கின. இவற்றின் தொடர்ச்சியாக இந்த ஆண்டு ஜனவரியில் இசுலாமாபாத் சென்றிருந்த வாஜ்பாய்க்கும் பாக். அதிபர் முஷாரஃப்புக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது.

''பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள எந்தப் பகுதியையும் பயங்கரவாதச் செயல்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க மாட்டோம்'' என்பது பாக். உறுதிமொழி. இதன்மூலம் காசுமீரில் போரிடும் பாக். ஆதரவு பயங்கரவாதிகள் ''விடுதலை போராளிகள்'' என்று கூறி வந்த நிலையிலிருந்துஇறங்கியிருக்கிறது.

''காசுமீர் உட்பட பாகிஸ்தானுடனான எல்லாப் பிரச்சினைகளையும் பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்வோம்'' என்பது இந்திய உறுதிமொழி. இதன்மூலம், காசுமீர் இந்தியாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதி. காசுமீர் பிரச்சினை ஒரு உள்நாட்டுப்பிரச்சினை. இந்திய அரசியல் சட்டத்துக்குட்பட்டுத்தான் காசுமீர் பிரச்சினை தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற அரைநூற்றாண்டு காலமாகக் கூறிவந்த நிலையை இந்தியா கைவிட்டுக் கீழே இறங்கியிருக்கிறது.

இரண்டு தரப்புமே இப்படி இறங்கி வந்தபோதும், ''பாக். அதிபர் முஷாரஃப்புக்கு மட்டுமே வேறு வழியில்லை; நிர்ப்பந்தம் காரணமாகப் பணிந்து போயிருப்பதாக'' இந்திய ஆட்சியாளர்களும், செய்தி ஊடகமும் சித்தரிக்கின்றன.

www.padippakam.com

அதாவது, ''அமெரிக்காவின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் (2002, செப்.11), ஆஃப்கான் - ஈராக் மீதான அமெரிக்கப் போர்கள் ஆகிய வற்றைத் தொடர்ந்து பாகிஸ்தானின் மதப் புனிதப் போர் (ஜிகாதி) கொள்கை படுதோல்வி அடைந்துவிட்டது. ஜிகாதிகளால் முஷாரஃப் ஆட்சிக்கே ஆபத்து நேர்ந்துள்ளதாலும், ஜிகாதிகளுக்கு ஆதரவு தராது ஒடுக்க வேண்டும் என்கிற அமெரிக்க நிர்ப்பந்தம் காரணமாகவும் அவர் அடியோடு மாறிவிட்டார்.''

முஷாரஃப்-இன் நிலையில் ஏற்பட்டுள்ள இந்தக் கடலளவு மாற்றம் தான் - தலைகீழான மாற்றம்தான், வாஜ்பாயி மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளை அவர் ஏற்பதற்கான அடிப்படைக் காரணம். அதனால்தான் இரு நாடுகளும், தங்களுக்கிடையே பேருந்து, ரயில், விமானப் போக்குவரத்துக்களை நடத்துவது, தூதரக உறவுகளை முழு அளவுக்கு மீண்டும் ஏற்படுத்துவது, போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பது ஆகிய நம்பிக்கை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. அவற்றில் ஒன்றுதான் கிரிக்கெட் போன்ற நல்லெண்ண - நட்புறவு விளையாட்டுத் தொடர்களை நடத்துவது என்று இந்தியத்தரப்பு விரிவான விளக்கம் தருகிறது.

இந்தச் சமாதான முன்னெடுப்புகள் - ஒப்பந்தங்களில் இந்தியாவுக்கும் இதன் ஆட்சியாளர்களுக்கும் எவ்வித ஆதாயமும், உள்நோக்கமும் கிடையாது. ''பாகிஸ்தானுடன் அமைதி - சமாதானத்தை விரும்பிய ஒரு மனிதர் என்று வரலாற்றில் இடம்பெறும் வாஜ்பாயின் விருப்பம் மட்டுமே'' இதற்குக் காரணம் என்று இந்திய ஆட்சியாளர்களும் செய்தி ஊடகமும் அப்பட்டமாகப் புளுகுகின்றன.

இங்கு ஒரு உண்மையைச் சொல்லியாக வேண்டும். உலகிலுள்ள முதலாளித்துவ அரசுகளின் அயலுறவுத் துறை அமைச்சகத்தைப் பற்றியதுதான் அந்த உண்மை. ஒவ்வொரு நாட்டின் அயலுறவுத் துறை அமைச்சகமும் அயல்நாடுகள், குறிப்பாக அண்டை நாடுகளுடனானதமது உறவுநிலை குறித்துப் பொய்யும் புனைசுருட்டும், கட்டுக் கதைகளும் வதந்திகளும் உற்பத்தி செய்து, தமது சொந்த நாட்டு மக்களிடையே பரப்புவதுதான் இந்த அமைச்சகத்தின் மிகப்பெரும், முதன்மையான பணியாக உள்ளது.

இப்படிப் பரப்பப்படுபனவற்றை நம்புவதுதான் தேசபக்தி, நாட்டுப்பற்று என்றும், இவற்றை நம்ப மறுத்து எதிர்ப்பது தேசத்துரோகம், தண்டனைக்குரியது என்றும் நம்ப ஒவ்வொரு குடிமகனும் நிர்ப்பந்திக்கப்படுகிறான். இந்த வேலையைச் செய்வதற்காக உளவுத் துறை முக்கியமாகப் பயன்படுத்தப் படுகிறது. கூடவே மக்கள் பிரதிநிதிகள் குழு, செய்தி ஊடகப் பணியாளர்கள், கல்வி - மருத்துவம் - கலை - பண்பாடு - தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் என்ற பெயரில் பலருக்கும் ஏராளமான சலுகைகள், கையூட்டுகள் கொடுத்து அயலுறவுத்துறைதனது சேவையில் அமர்த்திக் கொள்கிறது.

இப்படிப்பட்ட பொய், புளுகு, புனைச் சுருட்டுக்களில் ஒன்றுதான் பாக்கிஸ்தானுடனான இந்தியாவின் சமாதான முன்னெடுப்புக்குத் தரப்படும் விளக்கமாகும். வாஜ்பாயி தலைமையிலான பா.ஜ.க. நாடாளுமன்றத் தேர்தலைச்சந்திக்கும் இந்த வேளையில் பயங்கரவாதிகள் ஏதாவது நாசவேலை செய்துவிட்டால் அவர் மீதான நம்பிக்கையே பறிபோய் விடும் என்று ஆபத்தையும் எதிர்கொண்டு வாஜ்பாயி இந்தச் சமாதான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக வேறு மேலும் முட்டுக் கொடுக்கப்படுகிறது.




''இந்தியா கோப்பை வென்றது; பாகிஸ்தான் இதயம் வென்றது!'': பாகிஸ்தான் சென்ற கிரிக்கெட் வீரர்கள் மட்டுமல்ல பார்வையாளர்களாகப் போன இரசிகர்கள் கூட பாகிஸ்தான் அரசும் மக்களும் செய்த விருந்தோம்பல் மழையில் அப்படியே நனைந்து உருகிப் போனதைக் கண்டதாகப் பறைசாற்றுகின்றன இந்தியச் செய்தி ஊடகங்கள்.

வேறு இரண்டு காரணங்களுக்காக வாஜ்பாயி அரசு இந்த வேலையில் இறங்குகிறது என்பதுதான் உண்மை. ஒன்று, ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. கும்பல் தனது விசுவாசத்துக்குரிய எஜமானனான அமெரிக்க மேல்நிலை வல்லரசின் நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து போகிறது. இரண்டு, இந்திய ஆளும் வர்க்கத்தின் பொருளாதார நலன்களுக்கு - சந்தை விரிவாக்கத்துக்கு பாகிஸ்தானுடன் நல்லுறவு அவசியமாக இருக்கிறது.

இவ்வாறான மேலதிக முக்கியத்துவமுடைய காரணமின்றி பாக். உடனான உறவு, காசுமீர் ஆகிய ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. கும்பலின் உயிராதாரமான பிரச்சினைகளில் வாஜ்பாய் அரசு ஒரு போதும் சமரசம் செய்து கொள்ளும் என்று கருத முடியாது. இந்த இரு பிரச்சினைகளும் ஆளும் அக்கும்பலின் இந்துத்துவா சித்தாந்தத்துடன் எவ்வளவு நெருக்கமானவை என்பதை மீண்டும் வாசகர்களுக்கு விளக்கத் தேவையில்லை.

பிரிஜேஷ் மிஸ்ரா, இந்தியப் பிரதமர் அலுவலகத்தின் பாதுகாப்புத்துறைச் செயலாளர். வாஜ்பாயியின் மூளையாக விளங்குபவர். இவர், அயலுறவுத்துறை அமைச்சரோடு, அமெரிக்க அதிகாரிகள் - செயலர்களுடன் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் பல்வேறு நாடுகளில் சந்தித்து நடத்திய பேச்சு வார்த்தைகள், அவர்கள் பாகிஸ்தான் சகபாடிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் ஆகியவற்றைத் தொகுத்துப் பார்த்தாலே அமெரிக்க நிர்ப்பந்தம் குறித்த பல உண்மை விவரங்கள் கிடைக்கும்.

இந்திய அரசு தனது மிகப் பெரிய எதிரியாகக் கருதுவது 'எல்லை கடந்த பயங்கரவாதம்.' இது 'உலக இசுலாமியப் பயங்கரவாத'த்தின் ஒரு அங்கமாகவும் உள்ளது. இந்த 'உலக இசுலாமியப் பயங்கரவாதம்' அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்டு, ஆயுதபாணியாக்கப்பட்டது. இதை மறைத்துக் கொண்டு இசுலாமியப் பயங்கரவாத எதிர்ப்பில் இசுரேலுடன் சேர்ந்து, அமெரிக்காவின் இளையபங்காளியாவதற்கு இந்தியா எத்தனிக்கிறது. இந்திய அரசு அதன் இயல்பிலேயே இசுலாமியப் பயங்கரவாத எதிர்ப்பு நிலையில் உள்ளதால் அதைவிடப் பாகிஸ்தானுடன் சிறப்பு உறவு வைத்துக் கொள்வதுதான்


படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்காவுக்குச் சாதகமானது என்று கருதுகிறது. இசுலாமிய உலகைப் பிரித்து ஆதிக்கம் செலுத்துவதற்கு இது தான் அவசியமானது. இருந்தாலும், வாஜ்பாய் அரசின் எஜமான விசுவாசம் அமெரிக்கமுகாமுக்குவெளியேநிற்கத் துணிவு தரவில்லை. எனவே, அதன் நிர் பந்தத்துக்குஅடிபணிகிறது.

இதோடுஇப்போது இந்திய ஆளும் வர்க்கங்களின் அவசியம், நிர்ப்பந்தம் வேறுசேர்ந்துகொண்டது.தெற்குஆசிய நாடுகளின் கூட்டமைப்பு "சார்க்" ஏற்ப டுத்தப்பட்டுப் பல ஆண்டுகள் ஆன போதும், அண்டை நாடுகள் மீதான இந் தியத் துணைவல்லரசின் பிராந்திய ஆதிக்கம், விரிவாக்க முயற்சிகள் மற் றும் இந்தியா - பாகிஸ்தானிடையே நிலவிவரும்பகைநிலை-முறுகல்நிலை காரணமாக இந்த "சார்க்" எந்தவொரு முன்னேற்றத்தையும் அடையவில்லை. பெரும்பாலும் பெயரளவுக்கானதா கவே நீடித்திருந்தது. இந்திய - பாக். உறவு காரணமாகப் பலமுறை சார்க் மாநாடுகள் கிரமப்படி நடைபெறாம லும், தள்ளிப்போடப்பட்டும்வந்தன.

"சார்க்கின் முக்கிய நோக்கமான "சாம்ப்பா"(தெற்குஆசியசுதந்திரவர்த் தகச்சங்கம்) அமைப்பது அதாவது ஆசி யான்,ஐரோப்பியஒன்றியம்,வடஅமெ ரிக்கச் சுதந்திரப் பொருளாதார வர்த்தக வளையம் போன்ற ஒரு அமைப்பை தெற்கு ஆசியாவில் உருவாக்குகின்ற கனவாகவேதான் இருந்தது. ஆனால் உலகமயமாக்கத்தின் தாக்கம் அதை அப்படியே நீடிக்கும்படி விட்டு வைக்க வில்லை.

குறிப்பாக, இந்தியத் தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கு தெற்கு ஆசிய நாடுகளில் ஒரு பெரிய சந்தை பயன் படுத்தப்படாமல் இருப்பது, நாவில் எச் சில் ஊறச்செய்தது. அதிலும் குறிப்பாக, தரைவழிப் போக்குவரத்து எளிதாக உள்ள அண்டை நாடான பாகிஸ்தானு டன் நல்லுறவு பேணி, வர்த்தகத் தொழில்உறவைநிலைநாட்டுவதுமிகப் பெரும் இலாபமீட்டுவதற்கு வழிவகுக் கும்.

பாக்.உடன் 20 முதல் 25 கோடி அமெரிக்க டாலர் வரை வர்த்தகம் தற் போது அதிகாரபூர்வமாக நடந்து வரு கிறது. இதுதவிர மூன்றாம் நாடுகள் வழி யாக 1000 கோடி டாலருக்கும், 1000 முதல் 2000 கோடி டாலர்வரை கள்ளத் தனமாகவும் வர்த்தகம் நடக்கிறது. இத னால் 200 முதல் 400 கோடி டாலர் வரை வரி மற்றும் சுங்கத்தீர்வை இழப்பு ஏற்படுகிறது. முழு அளவு நேரடி வர்த்த கத்துக்குத் திறந்து விட்டால் 4000 கோடி டாலர் வரை வர்த்தகம் உயரும். 2006-இல் ஏற்படவிருக்கும் 'சா∴ப்டா' மூலம் 5000 கோடி டாலர் அளவு வர்த்த கம் பெருகும் என்று மதிப்பிடப்பட் டுள்ளது.

இவ்வளவு பெரும் சந்தையை இழந்துவிட இந்திய ஆளும் வர்க்கங் கள் விரும்பவில்லை. "எல்லையைத் திறந்துவிடு" என்று நிர்ப்பந்தத்தோடு மூலதன மற்றும் நுகர்பொருட்களுடன் காத்திருக்கும் ஆளும் வர்க்கங்கள் நிர் பந்திக்கின்றன. எனவேதான் ஆளும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலின் அரசியல் நலனுக்கு மாறானது என்றா லும் பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்ப டுத்திக்கொள்ள விழைகிறது.

> *இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இருநாட்டு ஆட்சியாளர்களும்ஆளும் வர்க்கங்களும்மதவெறி, தேசிய வெறியைத்தூண்டி விட்டு ஆதாயமடைகின்ற னர்; இதற்காக இருநாட்டு மக்களும் அவர்களின் நலன் களும்பலியிடப்படுகின்றன.*

நேற்றுவரை எல்லைக்கப்பால் இருந்து வரும் பயங்கரவாதம்தான் இந்த நாட்டுக்குப் பேராபத்து, தன்னால் தான் அதைமுறியடித்துதேசத்தைக்காப் பாற்ற முடியும் என்று கூச்சலிட்டார்கள். கடந்த ஆண்டு குஜராத் தேர்தலின் போது, "நடப்பது காங்கிரசு - பா.ஜ.க. இடையிலான போட்டி அல்ல. மியான் முஷாரஃப்புக்கும் இந்தியத் தேசத்துக் கும் இடையிலான போட்டி" என்று கூறி ஓட்டுப் பொறுக்கினார்கள். இன்றோ ஆளும் வர்க்கத்துக்கு அவசியமானால் "தேசிய நலன்கள்" என்றெல்லாம் எது வும்கிடையாது என்று கைகழுவப்படுகி றது. இதுதான் பார்ப்பன பாசிச பயங்கர வாதிகளின் தேசபக்தி, நாட்டுப்பற்று. அவர்களைப்பொறுத்தவரைதேசபக்தி, நாட்டுப்பற்று எல்லாம் உள்ளீடற்ற ஒரு குறியீடு, பொருளற்ற வெறும் அடை யாளம்தான். வேறு மாதிரி சொல்வதா னால் அவர்கள் தமது சொந்த நலன் களை மூடி மறைக்கும் ஒரு திரைச்சீலை தான்.

சொந்தத் தேசத்தின், சொந்த நாட் டின், சொந்த மக்களின் உயரிய முற் போக்குப் பண்பாடு, நாகரிகம், பாரம்ப ரியம், மரபு, இனம் - மொழி, மேன்மை ஆகியவை குறித்த பெருமிதம்; அரசி யல், சமூகப் பொருளாதார பின்தங்கிய நிலை குறித்த கோபாவேசம்; இத்துறை களில் முன்னேற்ற வேண்டுமென்ற விருப்பம், முனைப்பு; அந்நியச் சுரண் டல், ஒடுக்குமுறை, ஆதிக்கத்தின் மீது வெறுப்பு; இவற்றுக்கான போராட்டத் துக்கும் தியாகத்துக்குமான எழுச்சி உணர்வு இந்த உள்ளடக்கத்தை அடிப்ப டையாகக் கொண்டு தேசத்தின் மீது, நாட்டின் மீது பற்றும் 'பக்தியும்' மதிப் பும் மரியாதையும், ஈர்ப்பும் பாசமும் கொள்வதுதான் தேசபக்தி, நாட்டுப் பற்று.

இந்த உள்ளடக்கத்தை, பொருளை நீக்கிவிட்டு வெறும் குறியீட்டை, அடை யாளத்தை முன்னிறுத்தி அதன் மீது மதிப்பும் மரியாதையும், பற்றும் பாச மும் வைக்கும்படி நிர்ப்பந்திப்பது துரோகத்தனமானது. நேற்றுவரை பாகிஸ்தான்நமதுதேசத்தின்பரமஎதிரி, எல்லை கடந்த பயங்கரவாதத்தை ஏவி நமது மக்களைக் கொன்று போடுகின் றது, எல்லையில் சுவர் வைத்து முள் வேலி போட்டு, ஆழக் குழிவெட்டி அந் நாட்டுடனான உறவைத் துண்டித்துக் கொள்ளவேண்டும்; அணுகுண்டு ஏவுக ணைகளை வீசி மூன்றே மணிநேரத்தில் பாகிஸ்தான் நகரங்களைத் தரைமட்ட மாக்குவோம்; அந்த நாட்டையே இருந்த இடம் தெரியாமல் அழிப்போம் என்று பலமுறை சூளுரைத்தார்கள் ஆட் சியாளர்களும், ஆளும் வர்க்கங்களும். இன்றோ, அந்த நாடும், நகரங்களும், மக்களும் நமது சகோதர - சகோதரிகள் என்று கூடிக் குலாவி நட்பும் பாசமும் பொழிகிறார்கள். இவர்கள் எப்போது, எப்படி - எப்படி மாற்றிச் சொன்னாலும் அதை ஏற்பதுதான் தேசபக்தி, நாட்டுப் பற்றுஎன்கிறார்கள்.

உண்மையான தேசபக்தியும் நாட் டுப்பற்றும் கொண்டிருக்கும் மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தப் பார்ப்பன - பயங்கரவாத ஆட்சியாளர் கள் என்ன சொன்னாலும் செய்தாலும் அதையெல்லாம் ஏற்பதற்கும் ஆதரிப்ப தற்கும் நாம் என்ன ஆட்டு மந்தைகளா? கொஞ்சமும் சுயமரியாதை இல்லாத வர்களா? அன்று ஏன் அப்படிச் சொன் னார்கள். இன்று ஏன் இப்படிச் சொல் கிறார்கள் என்று எண்ணிப்பாரா அளவுக்குச்சுயபுத்தி இல்லாதவர்களா? அன்று அணுகுண்டுகளும் ஏவுகணை களும் செய்து அண்டை நாடுகளை மிரட்டி வைப்பதுதான் தேசத்தின் வெற்றி சாதனை என்றார்கள். இன்று கிரிக்கெட்டில் வெல்வதுதான் தேசத் தின் வெற்றிச் சாதனை என்கிறார்கள். இதையெல்லாம் நம்புவதையும் ஏற்ப தையும் விட வெட்கக்கேடு என்ன இருக்கமுடியும்!

● சாத்தன்

www.padippakam.com

# மரத்துப் போதல்

“என்ன மாமா கீத்து வுடு றீங்களா?'' விசாரித்துக் கொண்டே ராமசாமி மாமாவை நெருங்கினேன். ''ஆ.. வா சரவணா... எங்க வயித்துக்கு சோத்த வுடுறதே பெரிய பாடாயிருக்கு, இதுல எங்கேயிருந்து கீத்த வுடுறது. எல்லா கீத்தும் மக்கிப் போயி உளுத்து கொட்டுது. நம்ம கிருஷ்ண மூர்த்தி வைக்கலு குடுத்தான். அதான் பரப்பி வுட்டுகிட்டு இருக்கன். அப்புறம் ஊருல பாப்பா, கொளந்தையெல்லாம் நல்லா இருக்கா?''

''உக்காரு. என்ன மண்ணா கெடக் கேன்னு பாக்குறியா? எல்லாம் இந்த எலி பண்ற வேல. முழுக்க மண் தரதான உள்ளார வல்ல வச்சிகிட்டு தெனம் ஒரு கூடை மண்ண நோண்டி தள்ளுது. உனக் கும் எனக்கும் இந்த வூட்டல ஒண்ணும் இல்லன்னு தெரியும், எலிக்கும் பூனைக் கும் தெரியுதா? பூனை மேல பிரிகட்டி அடிக்குது. எலி கீழே வேல பாக்குது. எத் தன மொறதான் பொகை வச்சி பிடிக்கி றது. சனியன் அத்து போவனாங்குது. மூட்டை மூட்டையா நெல்லு வெச்சிருக் குறவன் வீட்லகொட இத்தன எலி கெடையாது. வெர நெல்லையும் வித் துட்டு நிக்குறோம். வெவரங்கெட்ட எலி நம்மள சுத்துது. ஹா... ஹா...'' தனது துய ரமான சூழ்நிலையைக்கூட பிறரிடம் சோகமாக எப்பொழுதுமே சொல்லியது கிடையாது இராமசாமி மாமா.

இந்த வருஷம் ஒரு பவுனு வாங் கியே ஒரு நல்லது கெட்டது செஞ்சிக்கல என்று புதிதாக எதையும் அடைய முடி யாத சோகத்தைப் பிறரைப் பாதிக்கும் வண்ணம் உருக்கமாகச் சொல்லும் நடுத் தர வர்க்கப் பேர்வழிகளுக்கு மத்தியில் விவசாய வாழ்க்கையின் சோகத்தை விளையாட்டாகச் சொல்லும் மாமா வின் பேச்சு எனக்கு வியப்பாக இருக் கும்.

''என்னமோ போ சரவணா... எங்க தாத்தா, அப்பாரு, இப்ப எங்காலம். இன் னமும் இந்த மண்ணு தரய மாத்த முடி யல. நாங்களும் மூணு தலமொறயா உழை உழைன்னு உழைக்கிறோம். இந்த வீட்ட பிரிச்சும் வேல பாக்க முடி யல, நம்ம ஒடம்ப பிரிச்சும் வேலை பாக்க முடியல. என்ன சரவணா சிரிக் கிற. ஒரு ஆறு மாசமாகவே கழுத்துல வலி கொட கொடைன்னு கொடையிது. டாக்டரு வேற பாரம் வெக்கக்கூடா துன்னு சொல்லிட்டாரு. அமயஞ்சமயத் துக்கு நாத்துகட்டு தூக்கக் கூப்புடுவா னுவ, இப்ப அந்த வேலயுங் கெடை யாது. ஏதாவது தலைல தூக்குற மாதிரி வேலையிருந்தா, பசங்க கூப்புடவும் மாட்டேங்குறானுவ. ஏதோ கை, கால், நரம்பு இதுக்கு தனி வைத்தியம் இருக் காம்ல, எங்க வருமானம் வந்து ஒரு நோட்டை தேத்திகிட்டுத்தான் போய்ப் பாக்கணும். பாரு நாம்பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருக்குறேன். டீத் தண்ணி குடிக்கிறியா? உங்க அத்த சுள்ளி ஒடைக்கப் போயிருக்கு. குழந்தை கொல்லபக்கம் நிக்கிறான்னு நெனக்கிறேன்.'' — எழுந்திருக்கப் போன மாமாவை கையைப் பிடித்து, ''நீங்க ஒக்காருங்க, நான் எதுத்த வீட்டு குமார வுட்டு வாங்கி வரச் சொல்றேன்'' என்று வலுக்கட்டாயமாக அவரை உட் காரவைத்தேன்.



**இந்த காலத்து பொட்ட புள்ளைக்கி பவுனப் போட்டு அழகு பாக்குறத விட படிக்க வைக்கிறது நல்லதுன்னு படுது. வளர வளர அவள நல்லவிதமா ஒருத்தன் கையில பிடிச்சி குடுக்க ணும்னா நாலு காசு கைல வேணு மில்லையா? உள்ள படியே சொல்றேன், இந்த புள்ளைக்காகத்தான் உயிர வெச்சிகிட்டு வாழணும்னு தோணுது.**

''முன்ன மாதிரி கிராமத் துல ஒரு வேலையும் இல்ல சர வணா. நானும் பொட்டபுள் ளையபெத்துட்டமேன்னு ஒரு வேலையும் பாக்கி வெக்கிற தில்ல. கும்மோணம் போயி காய்கறி வாங்கிட்டு வந்தும் யாவாரம் பண்ணி பாத்துட் டேன், நம்மள மாதிரிதான ஊரு சனமும்? எங்க உருளக்கிழங்கை வாங்குறதுன்னு அதது பேசாம புளித் தண்ணிய கரைச்சி பொழுத ஓட்டிகிட்டு இருக்கு. வாழக்கொல்ல பத்துற வேலைக்கி இங்கேர்ந்து கதிராமங்கலம் வரைக்கும் நடந்தே போயிருக்கேன் பாரு. நம்மதான் நாலெழுத்து படிக்காம கண்ணவிஞ்சி பெய்ட்டோம். இந்த காலத்து பொட்ட புள்ளைக்கி பவுனப் போட்டு அழகு பாக்குறதவிட படிக்க வைக்கிறது நல்லதுன்னு படுது. வளர வளர அவள நல்லவிதமா ஒருத்தன் கையில பிடிச்சி குடுக்கணும்னா நாலு காசு கைல வேணுமில்லையா? உள்ள படியே சொல்றன் இந்த புள்ளைக்காகத் தான் உயிர வெச்சிகிட்டு வாழணும்னு தோணுது. இல்லன்னா இருக்கற நெலமைக்கி நாமள்ளாம் இருந்து என் னாவப்போவுதுன்னு தோணுது...''

மாமா பேசிக் கொண்டே போகும் போது ஒரு இரண்டு மூன்று முறை அவ ருக்குப் பின்பக்கத்திலிருந்து ஏழு வயது மலர்க்கொடி அவர் தோளில் தொடர்ந்து தட்டிக் கூப்பிட்டுக் கொண்டே இருந் தது. துயரத்தில் என்ன சொல்வதென்று வாயடைத்துக் கிடந்த நான் ஒரு கட்டத் துக்கு மேல் குழந்தை கூப்பிடுவதைச் சொல்ல வேண்டிய நிலை வந்தது. ''என்ன மாமா பாப்பா அப்பயிலேர்ந்து தோள்ல அடிச்சி கூப்பிட்டுகிட்டே இருக்குறா... முதல்ல அத என்னான்னு கேளுங்க. கொளந்த கைபடறது தெரி யல?'' வெடுக்கெனத் திரும்பிப் பார்த்த வர், ''அட ஆமா சரவணா. ஒரு மாசமா டீக்கடைக்கி தண்ணி தூக்கி ஊத்தறனா அந்த எடமே மரத்துப் போச்சி அதான். என்னமோப்பா நீங்கள்லாம் ஒரு வழியா விவசாயம் கிவசாயம்னு மாட் டிக்காம ஒரு வழியா ஊரவுட்டு நவுந் துட்டீங்க. நாங்க எங்க போறது? யாரு இருக்கா?''

மாமாவின் தோள் மரத்துப் போனதை விட இப்படி கிராமத்தில் மாட்டிக் கொண்ட விவசாயிகளுக்காக ஏதுமே செய்யாமல் எனது வாழ்க்கை மரத்துப்போயிருக்கும் கொடுமை பயங் கரமாக இருக்கிறது எனக்கு. உங்க ளுக்கு?

● சுடர்விழி

www.padippakam.com

*திரைப்பட விமரிசனம்:*



# ஆட்டோகிராஃப்

# கழிவிரக்கத்தின் கவிதை

*''எவ்வளவு பார்த்தாலும்
கண்ணின் ஆவல் தீர்வதில்லை
எவ்வளவு கேட்டாலும்
காதின் வேட்கை தணிவதில்லை.''*

**பி**ரிவை கனத்த இதயத்தோடு விழாவாக நிறைவு செய்யும் அநேகக் கல்லூரிமேடைகளில் ''பசுமைநிறைந்த நினைவுகளே'' பாடல் தவறாமல் ஒலிக்கும். இனி ஆட்டோகிராஃப் திரையிடாமல் அந்தப் பிரிவுகள் நிகழப்போவதில்லை. கடிவாளமிட்டு இழுத்துச் செல்லும் வாழ்க்கையில் இனி நினைவுகள் மலருவதற்கு, வீட்டு மூலையில் தூசியுடன்கவனிப்பாரின்றிப் புதையுண்டிருக்கும்குடும்பப்புகைப்படங்கள்தேவைப் படாது. அதைஒருஅழகிய கவிதையாக எழுப்புவதைசேரனின்இத்திரைப்படம் பார்த்துக்கொள்ளும்.

குளிர்பதன வசதி, சிறப்பு ஒலி அமைப்பு கொண்ட திரையரங்கு ஒன்றின் இரவுக் காட்சியில் இனிய நினைவுகளால் இதயம் சிலிர்க்க வைக்கும் இந்தப் படத்தோடு தோய்ந்துவிட்டு வீடு திரும்புகிறீர்கள்.

நட்சத்திரங்களின் நள்ளிரவில் வெட்டவெளி அல்லது மொட்டைமாடி அல்லது படுக்கை. உங்களின் இளம் பருவ நினைவுகள் ஈரப்பதத்துடன் கிளர்ந்தெழுகின்றன. நீங்கள் அவதரித்த வரலாற்றுப் புகழ்மிக்க அந்த ஊர், பள்ளி, கல்லூரி, உங்களுடன் பேசி - பழக வாய்ப்புப் பெற்ற அந்த மனிதர்கள், நீங்கள் செய்த தியாகம், துறந்த மகிழ்ச்சி, பட்டபாடு, கழித்த உழைப்பு, இழந்த காதல்கள், ஆறாத வடுக்கள்.... நிகழ்காலத்தை நெருடும் அந்த நினைவலைகள் ஆற்றாமை கலந்த ஒரு நீண்ட பெருமூச்சுடன்வேகமடைகின்றன.

பின்பு சுவாசம் நிதானமடையும் போது மனதும் சற்றே சமநிலைக்கு வருகிறது. கூட்டிக் கழித்துப்பார்த்தால் உங்கள் வாழ்க்கை குறித்துப் பெருமிதமும் பூரிப்பும் அடைகிறீர்கள். நித்திரையிலும் ஆழ்ந்து போகிறீர்கள்.

ஆயினும் எந்த நவீன வசதிகளுமற்ற டூரிங் டாக்கீஸில் மட்டும் இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்று விதிக்கப்பட்டவர்களுக்குஇந்த ''நினைவில் கிளையாடும் நெடுங்கவிதை'' அனுபவமெல்லாம் வரப்போவதில்லை. அதிகபட்சம் கிராமத்துப் பள்ளிச் சேட்டைகளுக்கு விசிலடித்து விட்டு வீடு திரும்புகிறவர்கள், வழியில் சில புரோட்டாக்களை வயிறார நிரப்பி விட்டு ஆனந்தமாகத் தூங்கிவிடுவார்கள்.

இது பசித்த வர்க்கம். முக்காலமும் வறுமையால் துரத்தப்படும் வர்க்கம். நினைப்பதற்கும் அசைபோடுவதற்கும் இவர்களுக்குத் தனியான வாழ்க்கையோ, தனிமையோ எதுவுமில்லை. ஒருவேளை இவர்கள் வாழ்க்கையைத் திரும்பிப் பார்ப்பதாக இருந்தால் அது அவர்களின் சொந்த வாழ்க்கையை அல்ல அவர்களைப் போன்றோரின் தொலைந்துபோன வாழ்க்கையைத் தான்.

நிகழ்கால வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்திருக்கும் ஒருவன்தான் கடந்த கால எளிய வாழ்க்கையை ஒரு அருங்காட்சியக உணர்வுடன் நினைக்க முடியும். விளம்பர நிறுவனம், சக ஊழியர்களாக அழகு நங்கைகள், கார், அப்பார்ட்மெண்ட் வீடு என்று வாழ்வதால் மட்டுமே சேரனது நெய்க்காரன்பட்டி கிராமத்தை நீங்கள் இரசிக்கிறீர்கள். மாறாக, ஒரு பிச்சைக்காரன் - தொழுநோயாளி - எய்ட்ஸ் நோயாளியாக அவரது ஓர்மைகள் கூறப்பட்டிருந்தால் இந்த அளவுக்கு அதாவது உங்களைத் தொந்தரவு செய்யும் அளவிற்கு இரசித்திருக்க மாட்டீர்கள்.

97-ஆம் ஆண்டு டயானா மறைவையொட்டி அவரை இதுவரை பார்க்காதவர்களும், அவருடன் நேரடித் தொடர்பு இல்லாதவர்களும் சுமார் 10 இலட்சம்பேர் பல நாடுகளிலிருந்து இலண்டன் வந்து மூன்று மைல் நீள சவ ஊர்வலப் பாதையில் அணிவகுத்தார்கள். இன்றும் அவரது சமாதி பிரசித்தி பெற்றசுற்றுலாமையமாகி விட்டது.

இதே காலத்தில் ஈராக், செர்பியா மீது அமெரிக்கா நடத்திய படுகொலைகளோ, நிலநடுக்கத்தினால் மாபெரும் துயரங்களுக்காளான சில நாடுகளோ மேற்குலகின் மக்களை உணர்ச்சிபூர்வமாக ஈர்க்கவில்லை. தம்மைப் போன்ற சாதாரணப் பின்னணியிலிருந்து அரச குடும்ப உறவினால் 'மக்கள் இளவரசி'யான டயானாவின் சாதனைகளையும், வேதனைகளையும் தமது குடும்ப விவகாரமாக அந்த மக்கள் கருதினர். இளவரசி அளவுக்கு இல்லையென்றாலும் அழகிய விளம்பரநிறுவனவேலை என்பது பெரும்பான்மை தமிழக இளைஞர்களுக்கு ஒருகனவுப்பொருள்தான்.

அடுத்து வாழ்வில் உயர்ந்தோரும், வாழ்வால் துரத்தப்படுவோரும் தமது இளமைக்காலப் பதிவுகளில் எவற்றை நினைப்பார்கள் என்பதும் முக்கியமானது. நீங்கள் இப்படத்துடன் ஒன்றுவதற்கு சேரன் நினைவுகூர்ந்தவைகள் மட்டுமல்ல, நினைவு கூறாதவைகளும் கூடக் காரணமாயிருக்கின்றன. தினசரி அறுசுவை விருந்துதிகட்டும்போது என்றாவது ஒருநாள் பழையது குடிக்கத் தோன்றுவது போலத்தான் சேரனுக்குத் தனது கிராமம் தேவைப்படுகிறது. ரோஜா இதழ் நீர்த் தொட்டியில்

www.padippakam.com

குளிக்கும் நங்கையைப் படமெடுப்பதைத் தொழிலாகக் கொண்ட ஒரு விளம்பர இயக்குநருக்கு காய்ந்து போன ஒரு தமிழ்க் கிராமம் எப்படி நினைவுக்குவரும்?

குசு விடும் வாத்தியார், வகுப்புத் தோழி கமலாவின் நட்பு - பிரிவு போன்ற 'சுவாரசியமான' விசயங்களை மட்டும் நெய்க்காரன்பட்டி கிராமம் கொண்டிருப்பதால் மேற்கண்ட உறுத்தல் ஒரு பிரச்சினையல்ல. அதுவும் ஒரு விளம்பரப் படைப்பாளியாக கிராமத்தைப் பார்ப்பதால் காட்சிகள் துண்டுத் துண்டாகவும், விளம்பரங்களின் நேர்த்தியோடும் தோன்றி மறைகின்றன. விளம்பரங்களின் உத்தியே பொய்யை உண்மை போல, அதுவும் 'அழகாக'க்காட்டுவதுதானே?

இன்றைய மறுகாலனியாதிக்கச் சுரண்டலில் கிராமங்கள் ஏற்கெனவே இருந்த அரை வயிற்றுக் கஞ்சிகொடுத்தவாழ்க்கையைக் கூட தொலைத்து விட்டு மங்கிவருகின்றன. வயல்களும், காடுகளும், முதியவர்களும், பெண்களும் பாழடைந்து வருகின்றனர். இளைஞர்களே நகரங்களுக்கு ஓடுகிறார்கள், காலில் தெம்பில்லை என்றாலும். தற்போதைய தமிழ்க் கிராமங்களின் ஆன்மா இதுதான்.

இந்த ஆன்மாவின் மேலோட்டமான தரிசனங்கள் கூட இல்லாமல் குசு, குஞ்சலம் என்று காட்டுவதால்தான் உங்களால் இரசிக்க முடிகிறது. சரி, இந்தக் காட்சிகளையே விரித்து முழுக் கதையாகக் காட்டியிருந்தால்? அப்போதும் இரசித்திருக்க மாட்டீர்கள். ஏனெனில் படத்தின் ஆரம்பத்தில் சுமார் 20 சதவீதம் வரும் இக்கிராமக் காட்சிகள் பின்பு வரும் கேரளாவின் ரம்மியமான மழைக்காலக் காதல் மற்றும் சென்னையின் நாகரீகப் பெண் நட்புக் காட்சிகளின் உணர்ச்சிகளைத் திகட்டாமலும், தூக்கலாகவும் உணர்த்துவதற்குத்தான் உதவிசெய்கிறது.

அதனால்தான் ஆலப்புழா மாணவர்கள் தமிழ்ப் பட்டி (நாய்) என கேலி செய்யும்போது ரோசத்துடன் சீறும் சேரனது தமிழ்ப்பற்றை நம்மால் ஏற்க முடியவில்லை. இறுதித் திருமணக் காட்சியில் திண்டுக்கல் வட்டாரத்தைச் சேர்ந்த அந்தக் கிராமத்து மனிதர்கள் பராக்கு பார்த்துக் கொண்டே வருவதை உங்களையும் உள்ளிட்ட திரையங்கமே கேலி செய்கிறது. வேடிக்கை - விந்தை மனிதர்களாகச்சிரித்துமகிழ்கிறது.

இந்தியப் பெரும்பான்மையினரைப்பிரதிநிதித்துவம்செய்யும்கிராம வாழ்க்கை குறித்த யதார்த்தம், அதிர்ச்சி, குற்ற உணர்வு இவைதான் நகரத்து நடுத்தர வர்க்கத்திடம் உணர்த்தப்பட்டிருக்க வேண்டும். சேரன் உணர்த்திய கிராம வாழ்வு கவுண்டமணி - செந்திலின்காமெடிக்குநிகரானது.



**படத்தில்சேரனதுகாதலிகளாக, தோழியாக, மனைவியாகவரும்பெண்கள்அனைவரும் சேரனோடுபழகியகாலங்களில்மட்டும் சுதந்திரப்பறவைகளாகவும்அதுமுடியாத போதும், முடிவுக்குவந்தபோதும், சிறகொடிந்த கைதிகளாகவும் மாறுகிறார்கள்.**

இப்படி தமிழ்க் கிராமம் கேலி செய்யப்படுவது குறித்து எந்தத் தமிழின அமைப்புக்கும் கோபம் வராமல் கொண்டாட்டம் வருவதற்குக் காரணம் அவர்கள்வெறுமனேநடத்திக்கொண்டிருக்கும்'அடையாளஅரசியல்'தான்.

நாகரீகம் அரும்பியிராத புராதனச் சமூகத்தைப் பொறுத்தவரை யதார்த்தம் என்பது ஒரு புதிர். அதை அறிந்துகொள்வதை விட அதனோடு உணர்ச்சிபூர்வமான ஒரு மந்திர தந்திர ஈடுபாட்டையே அக்காலச்சிந்தனைவெளிப்படுத்தியது. சமூக நடைமுறையின் வளர்ச்சி பெறாத அந்த யதார்த்தம் அப்படித்தான் இருக்க முடியும். நாகரீகமும், சமூக வாழ்க்கையும் முதிர்ச்சி பெற்ற இக்காலத்திலும் ஒரு சாதாரணக் கிராமத்தின் யதார்த்தத்தைநாம்ஏன்அறிந்திருக்கவில்லை?

கருப்பு வெள்ளைக் காலத்தில் கட்டுப் பெட்டியாக இருந்த கிராமங்களை பாரதிராஜா யுகம் சற்றே கலகலப்பாகவும், அழகாகவும் காட்டியதே ஒழிய யதார்த்தமாக அல்ல. பச்சைப் பசேல் காட்சிகள், மஞ்சள் நீராடும் பெண்கள், ரம்மியமான மாட்டுவண்டிப் பயணம், நாட்டுக்கோழி - அயிரை மீன் குழம்பு, திருவிழா - கரகாட்டம், சின்னக் கவுண்டர் பஞ்சாயத்து என்று வி.ஜி.பி. கோல்டன் பீச் போல நாட்டுப்புற வாழ்க்கை சித்தரிக்கப்படுவதுஉண்மையல்ல.

இந்தியாவின் பெரும்பான்மைக் கிராமங்கள் சாதி ஆதிக்கமும், நில-நீர் பிரபுத்துவக் கொடுமைகளும், அமைதியும் மந்தமும், கரடுமுரடான வாழ்க்கையும் கொண்டவை. பூலான்தேவியின் வாழ்க்கையை விவரித்த ''பண்டிட் குயின்'' திரைப் படத்தில் வரும் கிராமம் உண்மையானது. இப்படி உண்மையான கிராமங்களை உண்மையாக அறியும்போது அங்கே பிறக்காதது குறித்து நீங்கள் உண்மையில் மகிழ்ச்சியடைவீர்கள்.

எழுத்தாளர் கி.ராஜநாராயணன், கவிஞர் பழமலய் போன்றோர் நாட்டுப்புறங்களைச் சொர்க்கமென இலக்கியத்தில் சித்தரித்து பாவம் செய்திருக்கிறார்கள். இதையொட்டி ஒரு பெரும்படையே வாய்க்கால் வரப்பு என்று கிராம வாழ்க்கையைச் சலிப்பூட்டும் விதத்தில்அசைபோட்டது.

கிராமத்து வாழ்க்கைக்கு ஏங்கி அசை போடும் இந்தப் படைப்பாளிகளின்உணர்ச்சி**பொய்**என்கிறோம். பல நூறு வசதிகள் குவிந்திருக்கும்பட்டணத்தில் வாழ்ந்து கொண்டே, இனியும் அங்கேயே வாழுவதாக உறுதி எடுத்துக் கொண்டே கிராமத்து வாழ்க்கையைச் சப்புக் கொட்டுவது நாணயமான உணர்ச்சியல்ல.

விருமாண்டி குறித்த பேட்டியொன்றில் ''நானும் இளையராஜாவும் இசை குறித்துப் பேசுவது கொஞ்சம்தான். பனை ஓலையில் பதநீர் குடிக்க முடியலையே'' என இழந்த கிராமத்து வாழ்

www.padippakam.com

கையைத்தான் அதிகம் பேசுவதாகக் கலைஞானி கமல்ஹாசன் குறிப்பிட்டார்.

வெளிநபர்கள்படத்திற்குஒப்பந்தம் செய்தவுடனேயே 5 நட்சத்திர விடுதியில் தங்கி பெப்சியும் - கோக்குமாக படத்துக்குப்படம்கெட்டப்பைமாற்றும் இந்த கலைஞானியும், மகன்களை வெள்ளைக்காரர்களாக வளர்க்கும் அந்த இசைஞானியும் பனைஓலை, பதநீர் என்று கதைப்பது வேடிக்கையாக இல்லை?

இந்திய ஆளும் வர்க்கம் தமது பொருளாதாரச்சுரண்டலுக்காகக் கிராமங்களைப் புறக்கணித்ததற்கேற்ப அறிவுஜீவி வர்க்கமும் கிராமங்கள் குறித்த உண்மைக்கு மாறான ரொமாண்டிக் உணர்ச்சியை உருவாக்கியிருக்கிறது. இப்படித்தான் சேரனது கிராம நினைவுகள் உங்களிடம் ஒரு சிலிர்ப்பைஏற்படுத்தியிருக்கமுடியும்.

●●

ஆட்டோகிராஃப் திரைப்படம் தனது பழைய காதலிகளை நினைவுகூறும் ஒரு ஆணின் பார்வையில் எடுக்கப்பட்டிருப்பதாகவும், இதையே ஒரு பெண் தனது காதலர்களை நினைப்பதாக எடுக்க முடியுமா என்று விமரிசிக்கிறார்கள், ஞாநி போன்ற வேறு வழியில்லாமல் முற்போக்காய் இருப்பவர்கள். இந்தப் பெண்ணியப் பார்வை தவிர்த்து வேறு எதுவும் இவர்களுக்குப் பிரச்சினையில்லை என்பதுதான் வேடிக்கை. ஒரு பெண்ணின் நினைவுகளாய்த் திரையிட்டிருந்தாலும் இதன் சமூகப் பார்வை கோளாறானதுதான்.

மேலும் ஆண் ரசிகர்கள் மட்டுமல்ல, பெண் ரசிகர்களும் இப்படத்துடன் ஒன்றத்தான் செய்கிறார்கள். சொல்லப்போனால் இப்படத்தின் பெண் பாத்திரங்கள் யதார்த்தப் பெண்ணுலகுடன் நெருக்கமாகத்தான் பேசுகின்றன. இரண்டிலும் பெண்கள் அடிமைகளாகவும் ஒரு நாயக ஆணின் ஆளுமைக்குத் தொண்டு புரியும் சேவிகைகளாகவும் விரும்பிஏற்பதுதான்பரிசீலனைக்குரிய விசயம்.

சேரன் எழுதி இயக்கியிருக்கும் அந்தஇனியநினைவுகளின்கவர்ச்சியே காதலும், காதலிகளும்தான். வெளியில் வேலை செய்து ஆடி ஓடிக் களைத்து வரும் எல்லா வகை ஆண்களுக்கும் குடும்பம் என்பது ஒரு ஓய்வில்லமாக இருக்கிறது. இதில் அன்பு, ஆதரவு, பராமரிப்பு மற்றும் உடலின்பமும் தரும் பெண்கள்தான் ஓய்வில்லத்தின் ஆயுள் கைதிகளாக வாழ்கிறார்கள். படத்தில் சேரனது காதலிகளாக, தோழியாக, மனைவியாகவரும்பெண்கள்அனைவரும் சேரனோடு பழகிய காலங்களில் மட்டும் சுதந்திரப் பறவைகளாகவும் அது முடியாதபோதும், முடிவுக்கு வந்தபோதும் சிறகொடிந்த கைதிகளாகவும் மாறுகிறார்கள்.

சேரன் மட்டும் நேரெதிராக வாழ்வில் முன்னேறியபடியே இருக்கிறார். ஆனாலும் அவர்தான் தியாகம் செய்தவராகவும், ஏதோ பறிகொடுத்த சோகத்திலும்இருப்பதாகஉணர்த்தப்படுகிறது. சகஜமாய் ஆயுள் கைதிகளாய் மாறும் அந்தப் பெண்கள்அப்போதும்'தியாகி' சேரனுக்கு ஆறுதல் கூறுகிறார்கள். இது தியாகமா, அற்ப மனிதனின் அவலமா என அறிய விரும்பும் வாசகர்கள் எமது 'அழகி' திரைப்பட விமரிசனத்தைப் படிக்கட்டும்.

படத்தில் வரும் சேரனை மட்டுமல்ல, படம் பார்க்கும் சேரன்களையும் இந்த ஓய்வில்லப் பராமரிப்பு சென்டிமென்ட்டில் தாலாட்டுவதற்கே கோபிகா, சிநேகா பாத்திரங்களும், உப்பங்கழி, மழை, ஓடம், வீணை, கதகளி, கேரளத்துக் கோவில், வீடு போன்ற குறியீடுகளும் பயன்பட்டிருக்கின்றன.

கிராமத்துக் கமலாவின்பிரிவைஅவசரமாக முடித்துக் கொண்டு ஆலப்புழா விரையும் சேரனை வரவேற்க வீணை - வெண்பட்டோடுபடகுத் துறையில் ஓடி வரும் கோபிகாவையும் கேரளத்துக் காதல் தோல்வியுற்று சென்னை செல்லும் சேரனை தூய வெள்ளாடையில் பார்வையற்றோருக்கு மத்தியில் தன்னம்பிக்கை பாபாடும் 'பூ போன்ற சிநேகாவையும் உரிமையுடன் கைதட்டி வரவேற்கிறார்கள் ஏற்கெனவே படம் பார்த்த ரசிகர்கள்.

இவ்விருவருடன் நீங்களும் ஒன்றுவதற்குக் காரணம் ஒரு ஆண் எதிர்பார்க்கும் அழகையும், அறிவையும், அரவணைப்பையும் இவர்கள் தருகிறார்கள். வீணையும், கதகளியும், பின்னர் தமிழும் கற்கும் கோபிகா, விளம்பர இயக்குநர் மற்றும் தொண்டு மனம் கொண்ட சிநேகா ஆகிய இருவருடன் ஒப்பிடும்போது சேரனிடத்தில் இத்தகைய கலையார்வமோ, திறமைகளோ, சமூக ஆர்வமோ எதுவுமில்லை. இருப்பினும் இந்தப் பெண்கள் சேரனை விரும்புகிறார்கள்! காரணம் படம் பார்க்கும் சேரர்கள் பொதுவில் சாதாரணமானவர்கள்தானே!

அடுத்து, பள்ளி - கல்லூரிப் பருவங்களில்தோன்றும்முதிர்ச்சியற்ற ஆனால்



***வாழ்வில் உயர்ந்தோரும், வாழ்வால்துரத்தப் படுவோரும்தமது இளமைக் காலப்பதிவுகளில்எவற்றை நினைப்பார்கள்என்பதும் முக்கியமானது. நீங்கள் இப்படத்துடன்ஒன்றுவதற்கு சேரன் நினைவு கூர்ந்தவைகள்மட்டுமல்ல, நினைவு கூறாதவைகளும் கூடக்காரணமாயிருக்கின்றன. தினசரி அறுசுவை விருந்துதிகட்டும்போது பழையது குடிக்கத் தோன்றுவது போலத்தான் சேரனுக்குத்தனது கிராமம் தேவைப்படுகிறது.***

www.padippakam.com

இயல்பான 'காதலை' காதலின் காவிய உணர்ச்சி அந்தஸ்துக்கு உயர்த்தும் இயக்குநரிடம் மாணவர்கள் குறித்த பொறுப்புணர்வைக் காண முடியவில்லை. இந்தப் பிரிவு இளைஞர்களிடம் தோன்றும் மேலோட்டமான இக்காதல் குறித்து விளக்கியிருக்க வேண்டிய விமரிசனக் கண்ணோட்டத்திற்குப் பதில் விமரிசனமற்ற கண்ணோட்டத்தையே சேரன் தருகிறார். அதாவது பல்வேறு காரணங்களால் நிறைவேறாத இக்காதல்கள் ஆறாத வடுக்களாக இருந்தாலும், காலம் மறக்கவைத்து வேறு வாழ்க்கையைத்தரும்என்கிறார்.

**கிராமத்து வாழ்க்கைக்கு ஏங்கி அசைபோடும் இந்தப்படைப்பாளிகளின் உணர்ச்சி பொய் என்கிறோம். பலநூறு வசதிகள் குவிந்திருக்கும் பட்டணத்தில் வாழ்ந்து கொண்டே, இனியும் அங்கேயே வாழுவதாக உறுதி எடுத்துக் கொண்டே, கிராமத்து வாழ்க்கையைச் சப்புக் கொட்டுவது நாணயமான உணர்ச்சியல்ல.**

உண்மையான காதல் குறித்த அறிவோ, அதை நிறைவேற்றப் போராடும் பொறுப்போ இல்லாமல் அதை எதிர்த்தும் வரும் இயக்குநரின் இந்தக் கருத்துத்தான் காதலையும், வாழ்க்கையையும்கொச்சைப்படுத்துகிறது.

●●

'ஆட்டோகிராஃப்' திரைப்படத்தின் விளம்பரம் ஒவ்வொன்றிலும் 'இது உங்கள் கதை' என்று சேரன் சொல்வதை நீங்கள் மட்டுமல்ல, பத்திரிக்கைகளும் ஆமோதிக்கின்றன. அவற்றில் ஆனந்த விகடன் மட்டுமல்ல ஆனானப்பட்ட சிறுபத்திரிக்கைகளும் அடக்கம்.

கவிஞர் மனுஷ்யபுத்திரனின் உயிர்மை "...கடந்த கால நினைவலைகளின் ஏக்க சப்தங்களைக் காதலாக, நேசமாக, மகிழ்வாக, துக்கமாக ஒளிப்படுத்தும் கவிதைமயப்பட்ட காட்சியாடல்கள்; தன்னுணர்வு சார்ந்த இளைஞர் சமூகம் காலங்காலமாக எதிர்கொள்ளும் சமூக எதிர்ப்புகள் என இளைஞரின் அகக்குரலை எதிரொலிக்கிறது ஆட்டோகிராஃப்" என்று பரவசமடைவதன் காரணம் வேறு எவரையும் விட இலக்கியவாதிகள்தான் அற்ப உணர்வுக்கு முதலில் அடிபணிவார்கள். கூடவே அதையே கலகமென்றும் புரட்சியென்றும் ஆமோதிப்பார்கள்.

52 மதிப்பெண் கொடுத்திருக்கும் ஆனந்த விகடன் "காதல் பற்றி புதிய பரிமாணம், ஒரு மனிதனின் வாழ்வை ஸ்படிகம் போலத் துல்லிய நீரோடையாய்ப் பதிவு செய்திருப்பது, கிராமத்துக் காதல் புழுதிக் காட்டுக் கவிதை, கேரளத்துக் காதல் காட்சிகள் ஜிலீர் ஹைக்கூ, வீட்டுக்கு வந்தால் சொந்த நினைவுகள் நெஞ்சில் அலையடிப்பது..." என்று தனக்கேயுரிய வழியில் பரவசப்படுத்துகிறது. "பாரதி கண்ணம்மா முதல் ஆட்டோகிராஃப் வரை" விகடன் அளித்த அதிக மதிப்பெண்களை வைத்து சேரனும் விளம்பரம் செய்கிறார்.

பட்டிமன்றம், லியோனி, சாலமன் பாப்பையா, விசு அரட்டை அரங்கம், எஸ்.வி.சேகர் - கிரேசி மோகன் நாடகங்கள், த.மு.எ.ச. நிகழ்ச்சிகள் போன்ற தமிழகத்தின் முக்கியமான வெற்று பேச்சுக் கூடங்களின் ஆசான் ஆனந்தவிகடன் தான். இந்த அலைவரிசையில் ஆட்டோகிராஃப் கச்சிதமாகப் பொருந்துகிறது.

திரைப்படத்தில் நினைவுகூரப்படும் சம்பவங்கள், விசயங்கள் ஒருமனிதனது வாழ்வில் நடக்காததோ நடக்கக்கூடாததோ அல்ல. ஆனால் அவை அதே மனிதனது வாழ்வில் நடந்த மிகச் சாதாரணமான விசயங்கள் என்பதும் உண்மைதானே? இந்தச் சாதாரண விசயங்கள் மாபெரும் நினைவாற்றலுடனும், மாபெரும் காவிய உணர்ச்சியுடனும் சித்தரிக்கப்பட்டு, நீங்களும் மாபெரும் கிளர்ச்சியடைந்து, படமும் மாபெரும் வெற்றியடைந்தது ஏன் என்பதே நமது மையமான கேள்வி.

சக மனிதர்களின் கூட்டு உழைப்பினால் உருவான இன்றைய சமூக அமைப்பின் அரவணைப்பினால் மட்டுமே ஒரு நபர் வாழ முடியும் என்ற யதார்த்தத்தை மறுப்பதும், மறைப்பதும், மயக்குவதுமே உலகளாவிய கலைவடிவங்களின் ஆளும் வர்க்க உணர்ச்சியாக இருக்கின்றது. இதற்குகண்கண்ட உதாரணம் "நுகர்வுக் கலாச்சாரம்." மனித உறவும், உலக வாழ்க்கையும் தனது நுகர்வுக்காக மட்டுமே என்று வாழும் நடுத்தர வர்க்கத்தின் மூளைமடல்களில் வேறு என்ன விசயம் இருக்க முடியும்?

தனது இளம் வயது நினைவுகளில் எவற்றை ஒரு மனிதன் மிகத் துல்லியமாக நினைவு கூர்கிறான் என்பதிலிருந்து, அம்மனிதனின் சமூக அறிவையும் சமூக உணர்வையும் நாம் அநேகமாக எடைபோட்டுவிட முடியும்.

எனினும் சமூக அறிவும் உணர்வுமற்ற இத்தகைய சூனியத்தையே வார்த்தைகளின் உதவியால் இன்னதென்று விவரிக்க முடியாத 'பிரம்மாண்டமான அழகுணர்ச்சி'யாக வரலாறு நெடுகிலும் வேதகாலயாக்ஞவல்கியர் முதல் "விஷ்ணுபுரம்" எழுதிய ஜெயமோகன் வரையிலான எழுத்துரசவாதிகள் விதந்தோதுகிறார்கள்.

அதனால்தான் தன்னலம் பேணும் எழுத்தாளர்களுக்கிடையே போட்டியைத் தீர்மானிக்கின்ற காரணியாக 'திறமை'யும், பொதுநலம் வேண்டும் எழுத்தாளர்களுக்கிடையே அந்தக் காரணியாக 'சமூகப்பொறுப்பும்' நிலவுகின்றது.

எனவே தன்னறிவால், தன்னலம் பேணும் ஒரு கலையின் தன்னுணர்ச்சி அழகாகவும், கவர்ச்சியாகவும், இயல்பாகவும் நமது சொந்த உணர்விலேயே - யாரும் சொல்லித் தராமலேயே - தோன்றுவதன் காரணம் சுயநலமும் பொதுநலமும் முரண்படும் இந்தப் போராட்டத்தில் நாம் பலவீனமாக இருக்கிறோம் என்பது தான்.

**திரைப்படத்தில் நினைவுகூரப்படும் சம்பவங்கள், விசயங்கள் ஒரு மனிதனது வாழ்வில் நடக்காததோ நடக்கக்கூடாததோ அல்ல. ஆனால் அவை சாதாரணமான விசயங்கள் என்பதும் உண்மைதானே? இந்தச் சாதாரண விசயங்கள் மாபெரும் நினைவாற்றலுடனும், மாபெரும் காவிய உணர்ச்சியுடனும் சித்தரிக்கப்பட்டு, படமும் மாபெரும் வெற்றியடைந்தது ஏன் - என்பதே நமது மையமான கேள்வி.**

●இளநம்பி

www.padippakam.com



# குடல்புண்ணும் கோடம்பாக்கம் சினிமாவும்

ஒன்னுமே இல்லாத சட்டைப் பாக்கெட்ல ஒரு பேனா இருக்கும். உள்ளே இறங்கிப் போன கண்ணைச் சுத்திக் கருவளையம், ஒடுங்கிப் போன கன்னக் குழியை மறைக்க ஒட்டி வைச்ச மாதிரி ஒரு தாடி, பாதத்தோடு ஒட்டிய செருப்பு, பழுப்பேறிய உடை, பசிவருத்திய உடம்பு - குறைந்தபட்சம் மேற்கண்ட அடையாளங்களோட கோடம்பாக்கம் ஏரியாவுல யாராவது உங்க பார்வையில எதிர்ப்பட்டா, சந்தேகமில்லை, அவரு ஒரு உதவி இயக்குநராகத்தான் இருப்பாரு.

புதுப்படப் பூஜை, படப்பிடிப்பு, பாடல் பதிவுன்னு ஒரு பக்கம் சினிமா பிசியா இருந்தாலும், இன்னொரு பக்கம் பசியோட வாய்ப்புகளுக்காக அலைஞ்சுட்டு இருக்கிற உதவி இயக்குநர்களின் நிலைமை கவலைக் கிடமா நடைபாதைகளில்தான் விழுந்துகிடக்குது.

ஒவ்வொரு நாளும் பகலும் இரவும், பசிக்கிறதுக்கும், படுக்கிறதுக்கும் சோத்துக்காகவும், தூங்கறதுக்காகவும் கனவு கண்டுட்டு இருக்கிறப்ப, தன் கதையில வர்ற கதாநாயகன் பஞ்சு மெத்தையில கதாநாயகிகூட பழச்சாறு அருந்தி உருண்டு புரண்டு வெளிநாடுகள்ல டூயட் பாடற மாதிரி சிந்திக்கிற அறிவுக்குச் சொந்தக்காரர்களாகவும், பொத்தல் விழுந்த சட்டைப் பாக்கெட்ல டீ குடிக்க இரண்டு ரூபாய் இல்லேன்னாலும் தான் எடுக்கப்போற படத்துக்கு இரண்டு கோடி ரூபாய் பட்ஜெட்டுன்னு பெருமை பேசற அளவுக்கு கௌரவமானவர்களாகவும் வாழ்ந்துகிட்டு இருக்கிற உதவி இயக்குநர்களோட கூடாரத்தைச் சேர்ந்தவன்தான் நானும்.

எப்படியாவது சினிமாவுக்குள்ள நுழைஞ்சு பெரிய ஆளா வரணும்னு ஊர்ல இருந்து ஒரு வெறியோட கிளம்பி வந்த நான் சொறி நாய்ங்க கணக்கா சுத்திட்டு இருந்த சூழ்நிலையிலிருந்து மாறி வேறு நிலைமையில வந்து நின்னேன். அதுதான் கல்யாணவேலை.

●●

சரவணபவன் ஓட்டல்ல சர்வர் வேலை மாதிரி நெத்தியில பட்டை குங்குமம், சந்தனமின்னு குருகுலத்து மாணவர்கள் போல இருக்கணும். ஒரு முகூர்த்தமின்னா இரண்டு நாள் வேலை இருக்கும். இரண்டு நாளுக்கும் இருநூற்று ஐம்பது ரூபாய் கூலி. தேங்காய் துருவ, வெங்காயம் உரிக்க, காய்கறி நறுக்க, பரிமாற இப்படி கண்ணுமண்ணு தெரியாம வேலை உடம்பைப் பிடுங்கித் தின்னும். இரவுல படுக்க ஒரு மணி ஆகும். நல்லா அசந்து தூங்கும்போது தண்ணியை தெளிச்சு மூணு மணிக்கு எழுப்பி விட்டுருவாங்க. ஏஜெண்ட் வேற மாட்டை விரட்டுற மாதிரி விரட்டுவாரு.

ஆனாலும் வேற வழியில்லை. இரண்டு நாளும் வயிறுக்குச் சோறும், தூங்குறதுக்குஇடமும், குளிக்கவசதியும் கெடச்ச நிம்மதி. பத்து நாளைக்கு இருநூற்று ஐம்பது ரூபாய்ல நடை, உடை, பாவனை, தோரணை எல்லாத்தையும் மாத்திக்கலாம். இப்படியிருந்தாலும் இதுல ஒரு சிக்கல் என்னான்னா ஆளு கறுப்பா இருந்தா அய்யர் வீட்டுக் கல்யாணத்துக்கு அழைச்சுட்டுப் போக மாட்டாங்க. இதனாலேயே நான் ரொம்ப சிரமப்பட வேண்டியதாப் போச்சு. எனக்கு மட்டுமல்ல, என்ன மாதிரி கறுப்பான ஆளுங்களுக்கு எல்லாம் வறுமையின் நிறம் கறுப்பாயிடுச்சு.

இது மட்டுமல்ல, இதுல இன்னொன்னும் இருக்குது. இந்த வேலையில சிவப்பா இருக்கிற பாதிபேர் முசுலீம் இளைஞர்களா இருப்பாங்க. இப்படித்தான் ஒரு கல்யாண வேலையில் சப்ளை பண்ணிக்கிட்டு இருந்தோம். நான் சாம்பார் பக்கெட்டை கையில புடுச்சிருந்தேன். அந்த முசுலீம் நண்பர் ரசம் பக்கெட்டை வெச்சுருந்தாரு. அது அய்யர் வீட்டுக் கல்யாணம். எல்லோரும் சாப்பிட்டுக்கிட்டு இருந்தாங்க. அங்கிருந்து வந்த பொண்ணு வீட்டுக்காரர் ஒருத்தர் சாப்பிட்டுக்கிட்டு இருந்த மாப்பிள்ளை வீட்டுக்காரரைப் பார்த்து ''என்ன ஓய்... சாப்பாடு எப்படி?''ன்னு கேட்டாரு. அதுக்கு அவரு... ''ம்... பேஷா பண்ணியிருக்கா... அசத்திட்டா... பிரமாதம்..''ன்னு ஏகத்துக்கும் வாயில சோத்தைக் குதப்பிக்கிட்டே பாராட்டினாரு. முழுங்கின பின்னாடி ''ரசம் கொடுங்கோ...ன்னு'' வாயைத் திறந்தாரு.

நான் அவசரப்பட்டு முசுலீம் நண்பரைப் பார்த்து மறந்த வாக்குல ''பாய்... ரசம் ஊத்துங்க''ன்னுட்டேன்.

அவ்வுளவுதான், சாப்பிட்டுட்டு இருந்த அவருக்கு முகம் கோணல் மாணலாகி இலையை மூடிட்டாரு. எனக்கு ஒன்னும் புரியல. முழிச்சேன். கையை கழுவிட்டு வந்து ஏஜெண்ட் கிட்ட ''என்ன பண்ணியிருக்கேள். ஒரு எழவும் சரிப்படல... ரசத்துல உப்பில்ல.. பாயசத்துல சக்கரையில்லை''ன்னு காச்சு மூச்சுன்னு கத்த ஆரம்பிச்சிட்டாரு.

கொஞ்சம் நேரம் கழிச்சு ஏஜெண்ட் எங்க இரண்டு பேரையும் கூப்பிட்டாரு. போனோம். ''ஏண்டா... நீ ஆளு கறுப்பா இருக்கிறே, இது அய்யர்வீட்டு கல்யாணம், சரி அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்னு பரிதாபப்பட்டு வேலைக்குக் கூட்டிட்டு வந்தா என் வேலையைக் கெடுத்துருவ போலிருக்கே... பரிமாறும் போது பாய், தலையணைன்னு உன்ன யாரு பேசச் சொன்னது. அம்பி வாங்கோ... ஜலம் கொடுங்கோன்னு அவங்க பாஷையிலேயே பேசுங்கடான்னா... முதல்ல நீங்க இரண்டு பேரும் கௌம்புங்க. நீங்க இருந்தா பேசின தொகையில பாதிகூட கெடைக்காது''ன்னு சொல்லி விரட்டிட்டாரு.

சாப்பிட்டுட்டுப் போறோம்ன்னு சொன்னாலும் கேக்கல. இரண்டு பேரும் மண்டபத்தை விட்டு வெளியில வந்தோம். நடந்து வந்த களைப்பு, பசி, அசதி அப்படியே கே.கே. நகர் சிவன் பார்க்குல படுத்துத் தூங்கிட்டோம்.

சினிமாவுல படம் எடுக்கிற பந்தாவோட ஒன்னுக்கும் உதவாத சில கம்பெனிங்க இருக்கும். இதுக்குப் பேரு

www.padippakam.com

உப்புமா கம்பெனின்னு சொல்லுவாங்க. அப்படியொரு கம்பெனியில வாய்ப்புக்காக இயக்குநரைப் பார்க்கப் போயிருந்தேன். அவரு இருந்தாரு. 'வணக்கம் சார்'ன்னேன்.

''ம்... வாய்யா.. எங்கய்யா போன? டிஸ்கஷனுக்கு ஆளு இல்லாம என்னய்யா...என்ன ஒரு மாதிரியா இருக்கே சாப்பிட்டியா''ன்னு பரிவோட கேட்டாரு. நான், டைரக்டர் நமக்கு சாப்பாடு வாங்கித்தருவாருன்னு நம்பிக்கையில.. ''இல்ல சார்.. அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபின்னு ஒரு பாத்திரம் இருந்ததே அது இப்ப யாரு கையிலே சார் இருக்கும், அந்த அளவுக்குப் பசி சார்ன்னு'' விரக்தியிலே சொன்னேன்.

அவரு அலட்டிக்காம 'யோவ்... சூப்பர்யா.. இதை அப்பிடியே நம்ம படத்துல சென்டிமெண்ட் சீனா டெவலப் பண்ணிக்கலாம்யா''ன்னு தன்னோட சினிமாப் புத்தியை வக்கிரமா காட்டினாரு. நான் வெறுத்துப் போய் ''சார் எனக்கு உடம்பு சரியில்லை நாளைக்கு வர்றேன்''னு பொய் சொல்லிட்டு வெளியில வந்துட்டேன்.

ஆடிமாசம். முகூர்த்தம் இல்லாததனால கல்யாண வேலையும் இல்ல. வாடகைக்கு இருந்த வீட்டுல வீட்டு ஓனர் வாடகைப் பணம் கொடுத்தாத்தான் கதவை திறப்பேன்னு கறாரா சொல்லிட்டாரு. போட்டிருந்த டிரஸ்ஸோட மறுபடி பழையபடி பசி, பட்டினி, படுக்க எடம்னு தடுமாற ஆரம்பிச்சாச்சு.

எங்கூட என் அறை நண்பரும் சேர்ந்துகிட்டாரு. இரண்டு பேரும் பகல் முழுக்க நாயா சுத்தி அலைஞ்சுட்டு, இரவுல படுக்க எடம் தேடுவோம். ஒரு நாள் வடபழனி பஸ்ஸ்டாண்டுல படுத்தாச்சு. அடுத்தநாள் போலீசுகிட்ட மாட்டி ''ங்கோத்தா... மாட்டுறவன்ல தொண்ணூத்தி ஒன்பது பேர் அசிஸ்டெண்ட் டைரக்டர்னு தான்டா சொல்றீங்க''ன்னு நாலு சாத்து சாத்தி ஸ்டேஷன்லேயே படுக்க வெச்சுட்டாரு.

அதுக்கும் அடுத்தநாள் சாலிகிராமம் செந்தில் ஸ்டுடியோவுக்கு எதிர்ப்பக்கம் ஒரு கடைமாடியில படுக்கப் போனோம். அங்க போனா சினிமாவுல நடிக்க வந்த பத்துபேரு படுத்திருந்தாங்க. ''நாங்கல்லாம் மாசக்கணக்குல இங்க படுத்திருக்கிறோம். நீங்க புதுசு இங்க படுக்கக்கூடாது கிளம்புங்கன்னு'' சண்டைபோட ஆரம்பிச்சுட்டாங்க.

நாங்க கெஞ்சிப் பார்த்தும் எடம் கிடைக்காம நூறடிரோட்டுல இருக்கிற தேர்தல் கமிஷன் ஆபீஸ் பக்கத்துல ஒரு கடைவாசல்ல வந்து படுத்தோம். அங்க ஏற்கெனவே தொழுநோயாளிகள் சில பேரும், வடபழனி கோயில்ல பிச்சை யெடுக்கிற சில வயசானவங்களும் படுத்திருந்தாங்க. எப்படியோ பசி ஒரு பக்கம் இருந்தாலும் படுக்கிறதுக்கு எடம் கிடைச்ச நிம்மதியோட அன்னைக்குப் பொழுது விடிஞ்சது.

வயிறு நிறையப் பசி. துருப்பிடிச்ச தகரம் மாதிரி அழுக்குப் படிஞ்ச உருவம். மண்டையோடு மாதிரி முகம். புளி மாதிரி ஆகிப்போன தலைமுடி. உணர்வு அற்றுப்போன நிலையில நாக்கு. பலநாள் பல்தேய்க்காத வாய் நாற்றம். ஒரு எலும்புகூடு போல நடை பிணமா ஆயிட்டோம். உயிர்மட்டும் தான் லேசா உடம்புல துடிச்சுகிட்டு இருந்தது. நிக்கவோ, நடக்கவோ உட்காரவோ கூட வலுவில்லை. நிச்சயம் நீங்க நம்ப மாட்டீங்க ஆனாலும் சொல்லியாகணும். தொடர்ந்து ஆறுநாள் பட்டினி.

> **ஒவ்வொரு நாளும் பகலும் இரவும், பசிக்கிறதுக்கும் படுக்கிறதுக்கும் சோத்துக்காகவும், தூங்கறதுக்காகவும் கனவு கண்டுட்டு இருக்கிறப்ப, தன் கதையில வர்ற கதாநாயகன் பஞ்சு மெத்தையில கதாநாயகி கூட பழச்சாறு அருந்தி உருண்டு புரண்டு வெளிநாடுகள்ல டூயட் பாடற மாதிரி சிந்திக்கிற அறிவுக்குச் சொந்தக்காரர்களாக வாழ்ந்துகிட்டு இருக்கிற உதவி இயக்குநர்களோட கூடாரத்தைச் சேர்ந்தவன் தான் நானும்.**

பிச்சையெடுக்கிற பெரியவர் ஒருத்தர்தான் சில்லறைக் காசுல வாழைப் பழம் வாங்கிக் கொடுத்தாரு. இவரு எம்.ஜி.ஆர். காலத்திலேயே சினிமாவுக்கு வந்தவர்னு பிறகுதான் தெரிஞ்சது. சினிமாவுல சாதிக்கணும்னு வந்த நான் தொடர்ந்து ஆறுநாள் பட்டினிங்கிற சாதனையோட நிறுத்திக்கலாம்னு நினைச்சு ஊருக்குப் போயிட்டேன்.

அம்மாவும் அப்பாவும் என்னைப் பார்த்துக் கதறி அழ ஆரம்பிச்சுட்டாங்க. எனக்கும் அழுகை தாங்க முடியல. டாக்டர்கிட்ட போனா அவரு ''உடம்புல ரத்தமே இல்ல. குடல் எல்லாம் வெறும் புண்ணாகிப் போயிருக்குது''ன்னு சொல்லிட்டாரு. அம்மாவும் அப்பாவும் வட்டிக்குக் கடன வாங்கி பால், பழம், மோர், தயிர், இளநீர்ன்னு வாங்கிக் கொடுத்தாங்க.

ஊர்ல எல்லோரும் என்னை வந்து பாக்க ஆரம்பிச்சுட்டாங்க. அதுல ஒரு பாட்டி ''படம் எடுக்கிறேன்னு போயி இப்படிப் பசி பட்டினி''ல குடல புண்ணாக்கிட்டு வந்து படுத்துகிடக்கிறியே... படம் எடுத்து சம்பாதிச்சு உங்க அப்பன் ஆத்தா குந்திட்டு சாப்பிடாட்டி போவுது. காலாகாலத்துல உங்க அத்தைப் பொண்ணை கல்யாணம் பண்ணிட்டு, கிடைக்கிற வேலை பாத்து கூழோ கஞ்சியோ குடிச்சுட்டு அப்பன் ஆத்தா கூட ஊரோட ஒத்துமையா இருக்காம என்ன பையன்? அதெல்லாம் பெரிய எடத்து சமாச்சாரமய்யா.. நமக்கு ஒத்து வருமா? நமக்கு கடைசி வரைக்கும் உழைப்புதான் பொழப்பு''ன்னு ஒப்பாரி வச்சு அழுது, கட்டிப்பிடிச்சு முத்தம் கொடுத்தது.

நகரத்து வெளிச்சத்துல மறைஞ்சு போன நான் என் கிராமத்து இருட்டுல தெளிவா தெரிஞ்சேன். உடம்பு தேறி மீண்டும் சென்னைக்கு வந்தேன். பஸ்ஸை விட்டு இறங்கி நடந்தேன். எதிர்பாராத விதமா எனக்குத் தெரிஞ்ச உதவி இயக்குநர் நண்பர் பாத்துட்டாரு. ''என்னங்க... எங்க போயிட்டீங்க... ஆளையே பாக்க முடியல... தெலுங்கு பீல்டுக்கு போயிட்டீங்களோன்னு நினைச்சேன். ஆளே மாறியிருக்கீங்கன்னாரு.''

''இல்லீங்க நான் சினிமாவ விட்டுட்டேன். ஊர்ல இருந்து இப்பதான் வர்றேன். என்ன ஆளவிடுங்கன்''னேன்.

''என்னங்க... இப்பதான் சினிமா ஆரோக்கியமா இருக்குதே... லோ பட்ஜெட் படங்கள் எல்லாம் நல்லா போகுதுன்னாரு..''

''சினிமா ஆரோக்கியா இருக்கட்டுங்க... நீங்க ஏன் இப்படி இருக்கீங்கன்னு'' கேட்டேன்.

''அல்சர் கம்ப்ளெயிண்ட் தான், வேறென்னங்க?''ன்னு ஈஸியா சொன்னாரு.

கோடம்பாக்கம் சினிமாவின் ஆரோக்கியத்திற்குக் காரணம் இந்த மாதிரி இன்னும் நிறைய குடல்புண்கள் தான் என்கிற உண்மை விளங்க ''வர்றேங்க''ன்னு சொல்லி எனக்குரிய பாதையை நோக்கி வந்துவிட்டேன்.

● கார்க்கி

www.padippakam.com

# தென்றல்:

## நலங்கிள்ளிகளின் ஊடலும், கூடலும்!

***ஆணாதிக்கம், படைப்பாளித் திமிர், தமிழ்ப் 'பற்று' ஆகிய கச்சாப் பொருட்களின் கலவையான நலங்கிள்ளி, திரையை விட்டு இறங்கி இராசேந்திர சோழனாகவும், தமிழர் கண்ணோட்டமாகவும் உயிர் பெற்ற கதை.***



"தமிழர் கண்ணோட்டம்" பிப். 04 இதழ் "தென்றல்" திரைப்படத்தைப் பாராட்டியிருந்தது. நலங்கிள்ளி குடிக்கிறான், கூத்தடிக்கிறான், செருக்குடன் சீறுகிறான், பாதையோர வியாபாரிகளைப் பந்தாடுகிறான், அடிமை ரசிகையை ஆராதிக்கிறான், தமிழ்ப் பெண்களைக் கேவலப்படுத்துகிறான் - இருந்தாலும் இவற்றையெல்லாம் மறக்கச் சொல்கிறது தமிழர் கண்ணோட்டம். தமிழுக்காக விருது மறுத்து, சிறையும் செல்கிறானே! இதுதான் தமிழர் கண்ணோட்டம் பத்திரிக்கை பாராட்டுவதன் பின்னணி. ஏனெனில் இந்தப் பத்திரிகையும் கூட ஒரு வகையில் நலங்கிள்ளி தான். எப்படி?

மதவெறியன் பால்தாக்கரே, துரோகி மற்றும் காசுமீர் ஒடுக்குமுறை நாயகன் ஜார்ஜ் பெர்ணாண்டஸ், அத்வானியின் முகமூடி வாஜ்பேயி போன்றோரெல்லாம் ஈழத்தமிழருக்காகக் குரல் கொடுத்தபோதெல்லாம் இந்தப் பத்திரிக்கை - நலங்கிள்ளியால் பாராட்டப்பட்டவர்கள். எதிர்காலப் பட்டியலில் புஷ்ஷும் உண்டு என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு மனிதன் நல்லவனா கெட்டவனா என்று அளவிடுவதற்கு இவர்களின் அளவுகோல் அவன் தமிழர் நலனுக்காகக் குரல் கொடுத்தானா இல்லையா என்பது மட்டும்தான். மற்றபடி அவன் மனித சமூகத்தால், வேறு தேசிய இன, மத மக்களால் ஒரு பாசிஸ்ட்டாகக் கருதப்பட்டாலும் அது ஒருபெரியபிரச்சினையல்ல.

இதற்கிடையில் "தென்றல்" குறித்த நமது விமரிசனம் வெளியானவுடன் இந்த நலங்கிள்ளி - பத்திரிக்கையை நடத்தும்த.தே.பொ.க. என்றதமாசுக்கட்சியின் பொதுச்செயலாளரான இராசேந்திர சோழன் "தென்றலை" விமரிசனம் செய்து "கவிதாசரண்" என்ற (சிறுபத்திரிகையுலகில் போக்கிடமற்ற நலங்கிள்ளிகளுக்கு வாழ்வு கொடுக்கும் இதழ்) சிறு பத்திரிக்கை ஒன்றில் எழுதினார். கட்சிப் பத்திரிக்கையில் ஆதரித்தும், கட்சி சாராததில் எதிர்த்தும் எழுதுகிறார்களே 'என்னடா இது மதுரைக்கு வந்த சோதனை' என்று எல்லாவற்றையும் மறுவாசிப்புச் செய்ததில் இவரும் 'விமரிசனம்' செய்யவில்லை என்பதும் இவரே ஒரு நலங்கிள்ளிச்சோழன் என்பதும் நமது பாமர அறிவுக்கு மட்டுப்பட்டது.

இனி நலங்கிள்ளிச்சோழனது விமரிசனம் போலத்தோன்றும், ஆனால் விமர்சனமற்ற வருத்தப்புராணத்தை சற்றே உலுக்கிப்பார்க்கலாம்.

தாமரைச் செல்வி அடிமையாகச் சித்தரிக்கப்பட்டதற்கும் அவளின் சுயம், ஆசாபாசங்கள் மறுக்கப்பட்டதற்கும், எத்தருணத்திலும் அவளது கற்புக்குக் களங்கம் வராமல் புனிதம் காப்பாற்றப் பட்டதற்கும், மதுவருந்துவது கலகமென்றால் தாமரைச்செல்விக்கு மட்டும் அக்கலகம் மறுக்கப்பட்டதற்கும் சோழன் வருந்துகிறார். ஆனால் ஒரு அப்பாவிப்பெண், அறியாத வயதில், அடிமைபோல் கசிந்துருகி தன்னை வழிபடுவதை விரும்புகிறானே நலங்கிள்ளி அவனைக் கண்டு சோழனுக்குக் கோபம் வரவில்லை. அவரும் ஒரு படைப்பாளி என்பதால் இத்தகைய அடிமைகளை விரும்புகிறாரா என்று தெரியவில்லை.

மற்றபடி தாமரை அடிமை என்பதற்காக சோழன் கலங்குவது நானும் ஒரு பெண்ணிய அடிப்படையில் பார்க்கிறேன் என்று கணக்கு காட்டுவதற்குத்தான். இதில் நலங்கிள்ளியைக் கணக்குத் தீர்க்காதவரை சோழனும் ஆணாதிக்க மனோபாவத்தைத் துறந்தவர் என்று மதிப்பிட முடியாது. மேலும் நலங்கிள்ளி செய்யும் அடாவடித்தனங்களை தாமரையும் செய்தால் என்ன என்று கேட்பதில் அசட்டுத்தனம்தான் விஞ்சுகிறது. நலங்கிள்ளி ஒரு பெண்ணாக மாறினாலும் நம்மால் ஏற்க முடியாது. மக்களைத் துச்சமாகக் கருதும் ஒரு படைப்பாளியை பாலினத்தால் எப்படி மதிப்பிட முடியும்?

மது மாதுவுடன் சரசமாடும் நலங்கிள்ளி தமிழுக்கு குரல் கொடுத்ததைத் தாண்டி வேறு எதையும் செய்யவில்லையே என்று செல்லமாய்க் கடிந்துரைக்கிறார் சோழன். ஒருவேளை நலங்கிள்ளி தமிழுக்காகத் தொடர்ந்து திட்டமிட்டுப் போராடினால் இந்த மது மாது சமாச்சாரங்கள் பிரச்சினையில்லை என்று சுற்றி வளைத்துப் பேசும் சோழன் அவர்களே, தமிழுக்காக நலங்கிள்ளி செய்ததைவிட அதிகமாக நீங்கள் என்ன செய்து விட்டீர்கள்? முக்கியமாக, "படைப்பைப் பார் படைப்பாளியின் வாழ்க்கையைப் பார்க்காதே" என்ற நலங்கிள்ளியின் கொள்கை முழக்கம் சோழனுக்கும் உடன்பாடானது என்பதுதான் மேற்கண்ட தமிழ் நல அட்வைசின் இரகசியம்.

இதையே, "ஒரு படைப்பாளி தன் ஆத்ம திருப்திக்காக எழுதுகிறேன் என்று சொன்னால் அவனைப் போய் யாரும் சொந்த வாழ்க்கை பற்றியெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பதில்லை," என்று சோழன் வெளிப்படையாக ஒத்துக் கொள்கிறார். இவ்விசயத்தில் இவர் நலங்கிள்ளி x நலங்கிள்ளி (ஸ்கொயர்) எனலாம். ஐயா சோழ மகராசா, ஒரு படைப்பாளன் ஆத்ம திருப்திக்காக "டைரியில்" மட்டும் எழுதி அவன் மட்டும் படித்துப் படித்துப் பரப்பிரம்ம நிலை அடைந்தால் - எங்கோசில நரிகள் ஊளையிட்டுக் கொண்டால் - எங்களுக்கொன்றும் பிரச்சினையில்லை.

www.padippakam.com

மாறாக, எழுதியதை அச்சிட்டாலே அது ஒரு சமூக நடவடிக்கையாக மாறி விடுகிறது. என்னதான் ஆத்ம திருப்தி என்று இளித்தாலும் ஒரு எழுத்தாளன் வாழ்க்கைபற்றியதனது கருத்தைசமூகத் திடம் படி என்று கட்டளையிடும்போது (அச்சிடுவதன் அர்த்தமே அதுதான்) நாங்களும் மக்கள் சார்பில் வாழ்க்கை குறித்த எங்கள் கேள்விகளுக்கு எழுத் தாளனிடமிருந்து மட்டுமல்ல அவனது சொந்த வாழ்க்கையிலிருந்தும் விடை தருமாறு கட்டளையிடுகிறோம். அதா வது அந்தபடைப்பாளி வட்டிக்கு விடுகி றானா, லஞ்சம் வாங்குகிறானா, மக னுக்கு டாக்டர் சீட் எப்படி வாங்கினான், மகளை அமெரிக்காவில் ஏன் படிக்க வைத்தான், சாதி - சடங்கு பார்க்கிறானா, ஆர்.எஸ்.எஸ்.-ஐ ஏன் எதிர்க்கவில்லை, மற்றும் அவனது மனைவிக்குத் துரோ கம் செய்கிறானா என்று கேட்போம், பார்ப்போம், பகிரங்கப்படுத்துவோம்.

இவற்றிலெல்லாம் நேர்மையின்றி இருக்கும் பட்சத்தில் ஒரு எழுத்தாள னின் ஆத்மாவும் அதன் திருப்தியும் எப் படியிருக்கும், அதை எங்கே வாங்கலாம் என்பதையெல்லாம் சோழர் விளக்க வேண்டும். ஏதோ தண்ணியடிப்பதற் கும், விபச்சாரம் செய்வதும் மட்டுமே சொந்த வாழ்க்கை என்று கருதுவதன் மூலம் நமது சோழ மகராசாவின் ரசனை என்ன என்பதும் வாழ்க்கை குறித்து 'எவ் வளவு' புரிந்து வைத்துள்ளார் என்பதை யும் காணும்போது ரஜினி ரசிகன் மேல் என்று உறுதியாகச் சொல்லலாம்.

அடுத்து, தென்றலில் வரும் நலங் கிள்ளியின் பாத்திரப்படைப்பு "எழுத்து என்ற நுட்பம் சார்ந்த அக இயக்கத்தின் வெளிப்பாடாய்க் காட்டப்படாமல்... நுண்மையான மென்னுணர்ச்சிகள் எது வுமற்று, ஏதோ சாலையில் தார் போடு கிற... பேரிரைச்சலும், மனிதக் கூச்சலு மாய்"ச் சித்தரிக்கப்பட்டது குறித்து தங் கர்பச்சானிடம் நியாயம் கேட்கிறார், சோழராசா. வேகவைக்கும் வெயிலில் கைக்குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு தாரோடும், சரளையோடும் கருகி உருகும் அந்தத் தொழிலாளிகளி டம்தான் பொறுமையும், அன்பும், சக மனிதனை கணக்குப்பார்க்காமல் நேசிக் கும் பண்பும், போராடும் மன வலிமை யும் ஏராளமாகவும், அடக்கமாகவும் காணப்படும். இம்மக்களோடு ஒப்பி டும்போது 'சோழ சாதியைச்' சேர்ந்த எந்த எழுத்தாளனும் கால் தூசிக்குக் கூட ஈடாக மாட்டார்கள் என்பதை "பேரி ரைச்சலோடு" சொல்கிறோம். இங்கே யும் நலங்கிள்ளியை சமூக மதிப்பீட்டிலி ருந்து அல்லாமல், ஒரு எழுத்தாளன் எப்படி 'காட்சி'யளிக்க வேண்டும் என்ற ரசனை மதிப்பீட்டிலிருந்தே நமது சோழ ராசா முடிவு செய்கிறார்.

இறுதியாக, திரைப்படக் காட்சிகள் ஒருங்கிணைப்பு இன்றி உதிரிகளாகச் சிதறுவது குறித்தும், காவிரியுரிமை, தமிழ்க் குடமுழுக்கு, தலித் எழுச்சி போன்றவை வெற்று முழக்கமாக மாறி விடும் அபாயம் குறித்தும் தங்கர்புச்சா னிடம் எச்சரிக்கிறார், நமது சோழ நலங் கிள்ளி.

இங்கேயும் மக்களுக்கு மேலாகத் தம்மைக் கருதிக் கொண்டு, புத்திமதி சொல்லியே ஆக வேண்டிய நலங் கிள்ளியிடம்தான் எடுப்பாகத் தெரி கிறது. ஏனெனில் தங்கர்பச்சான் எனும் ஒரு கலைஞனுக்கு எச்சரிக்கை விடும் சோழர், தனக்கும், தமிழர் கண் ணோட்டத்திற்கும், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சிக்கும் அதே எச்சரிக்கையைச் செய்ய மறந்தது ஏன்?

● வேல்ராசன்



## அரசியல் சந்தர்ப்பவாதத்தின் இலக்கிய முகவிலாசம்!

'தமிழர்களின் காவிரி உரிமை, தமிழ்மொழி உரிமை இவற்றை இன் றைய தமிழ்த் திரைப்படம் ஒன்று முன் னிறுத்துகிறது என்றால், அது உலக விந்தைகளில் ஒன்று' என திரைப்ப டத்திற்கு உள்ளே செல்லும் சிரமத்தை எடுத்துக் கொள்ளாமலேயே ஆரம்ப காட்சிகள் குறித்த நிறைவுடன் முடித் துக் கொண்டது, தமிழர் கண்ணோட் டம். அதே இதழில் விருமாண்டி படத் தின் ஆபாசக் காட்சிகளைக் கண்டிக் கும் வரிகள் உள்ளன. ஆனால் 'தென்றல்' என்று நல்ல தமிழில் பெயர் வைத்ததற்காகவே தமிழர்கள் விருது கள் தரலாம் என்று தங்கர்பச்சானை புக ழின் ஏணியில் ஏற்றி வைத்துப் போற்றி மகிழ்கிறது, தமிழர் கண்ணோட்டம்.

'கவிதாசரண்' இதழில் இராசோ, தமிழ் தேசிய அரசியலின் போதாமையி லிருந்து வெளிப்போந்து இலக்கியத் தில் உண்மைக்கான தேடல் நிமித்தம் முக்குளித்து கருத்துக்கள் கோர்க்கி றார். இந்த முரண்பாட்டிற்கு 'அரசியல் வேறு, இலக்கியம் வேறு' என்று தரப்ப டும் விளக்கத்தில் இது இவர்களின் அர சியல் சமரச, சந்தர்ப்பவாத நிலையோ டும் தொடர்பு கொண்டிருக்கிறது.

பா.ஜ.க. கூட்டணியில் தி.மு.க. இடம்பெற்றபோது குறைந்தபட்ச செயல்திட்டத்தை நடைமுறைப் படுத்த ஆதரவு என்று அறிவித்தார், கருணாநிதி. குறைந்தபட்ச செயல் திட்டத்துக்கு வெளியே குஜராத் படு கொலைகள், பொடா போன்றவை அரங்கேறியபோது 'கூட்டணி தர்மத் திற்காக' ஆட்சியில் தொடர்ந்தது தி.மு.க. தேர்தல் அரசியல், பரந்துபட்ட மக்கள் உறவு இரண்டுக்கும் வெளியே தமிழினவாதிகள் இருப்பதால் மேற் கண்ட ஓட்டுக் கட்சிகள் பாணி சந்தர்ப் பவாதத்தைக் கைக்கொள்வதில் பிரச்சினைகள் இருப்பதில்லை.

அரசியலலை தமது சமூக நடவடிக் கையாகவும், இலக்கியத்தைச் சொந்த நடவடிக்கையாகவும் கொள்ளும் இராசோ போன்றவர்கள் தமது இலக் கிய வகைப்பாட்டில் தெறிக்கும் மித மான முற்போக்கு மனிதாபிமானத் தைக் கொண்டு அரசியலுக்கும் இலக் கியத்துக்கும் ஒரு இணைப்பு ஏற்ப டுத்தி இரண்டு இடத்திலும் வர்ணம் குலையாமல், தமது வர்க்க நிலைக்கு நியாயம் கற்பித்துக் கொள்கிறார்கள்.

தமிழினவாதிகள் இப்படி மாற்றி, மாற்றிக் கருத்துரைத்து வந்தாலும் தமிழ் தேசிய அரசியலுக்கும், சினிமா வுக்கும் உள்ள உறவை, தமிழர் கண் ணோட்டம் வாசகர் ஒருவர் அடுத்த இதழில் வினையாற்றியிருந்தார்: 'தமிழ், தமிழர் நலன் சிந்தனையைச் சொல்லவும் திரைத்துறையில் ஆட்கள் தேவைதான். இந்த வாய்ப்பும், வசதி யும் சினிமாவில் மட்டுமல்ல; அரசிய லுக்கும் கூடத்தான் இருக்கிறது. ஈழத் தமிழர் பிரச்சினைக்குக் குரல் கொடுக்க வைகோ இருக்கிறார்; பா.ஜ.க. கூட்டணியிலேயே ஜார்ஜ் இருக்கிறார். பொடாவிலிருந்து தமிழர் களைக் காப்பாற்ற ஆபத்துதவி கலை ஞர் இருக்கிறார். இட ஒதுக்கீடு - சமூக நீதிக் கொள்கையை வென்று முடிக்க சாகசவாதி இராமதாசு இருக்கிறார். ஆம்! 'நமது ஆட்கள்' எங்குமே இருக்கி றார்கள். நீங்கள் எதற்காக இருக்கிறீர் கள் என்ற கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

● *இளந்தீபன்*

www.padippakam.com

# சதி: இன்னுமொரு இந்துத்துவத் தீர்ப்பு

'சதி' என்றழைக்கப்படும் உடன் கட்டையேறுதலை ஆதரித்துப் பிரச்சாரம் செய்த 11 குற்றவாளிகளை, கடந்த ஜனவரி 31-ஆம் தேதியன்று 'நிரபராதிகள்' என்று விடுதலை செய்துவிட்டது உடன்கட்டைத் தடுப்புச் சிறப்பு நீதிமன்றம். அவர்கள் மீதான 4 வழக்குகளைத் தள்ளுபடி செய்துவிட்டது இந்த ஜெய்ப்பூர் செசன்சு நீதிமன்றத்தின் தீர்ப்பு. அவர்கள் மீது மொத்தம் போடப்பட்ட வழக்குகள் 22. விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளில் இராஜஸ்தான் மாநில பா.ஜ.க. துணைத் தலைவரும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினருமான ராஜேந்திரசிங் ரதோடும் ஒருவர். மற்றவர்களில் ஒருவர் பா.ஜ.க. இளைஞரணி முன்னாள் தலைவர் பிரதாப்சிங் கச்சரியவால்; இவர் துணை ஜனாதிபதி பைரோன்சிங் செகாவத்தின் மருமகன்; மற்றவர், ராஜபுத்திரச் சாதிச் சங்கத்தைச் சேர்ந்த நரேந்திரசிங் ரஜாவத்.

செப்டம்பர் 4, 1987: ரூப்கன்வர் என்ற பெண், இராஜஸ்தானில் தியோராலா கிராமத்தில் இறந்த கணவரின் உடலுடன் சேர்த்து வைத்து எரியூட்டிக் கொல்லப்பட்டாள்.

அதையொட்டி உள்ளூரில் பல ஊர்வலங்கள், சடங்குகள், திருவிழாக்கள் நடத்தப்பட்டன. சதிஸ்தலத்தில் சதி மாதாக் கோயில் எழுப்பவும் நிதி திரட்டப்பட்டது. இவையனைத்தும் சதியைப் போற்றிப் புகழ்ந்து புனிதப்படுத்துவனவாகவே நடத்தப்பட்டன.

அக்டோபர் 28, 1987-இல் ஜெய்ப்பூரில் 'தர்மரக்ஷ சமிதி' என்ற அமைப்பின் தலைமையில் மாபெரும் 'சதி' ஆதரவு ஊர்வலம் நடத்தப்பட்டது. (இதே அமைப்பின் தமிழகப் பிரிவில் 'பரத நாட்டியப் பேரொளி' பத்மா சுப்ரமணியம், ஜூனியர் சங்கராச்சாரி போன்றோர் முக்கியமானவர்கள் என்பதை நினைவில் கொள்ளவும்) அந்த ஊர்வலத்தில் ரூப்கன்வரை சீதை, அனுசுயா போன்ற 'சதிமாதாக்களோடு' ஒப்பிட்டும், சதியை ஆதரித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. விசுவ இந்து பரிசத்தின் துணைத் தலைவரான ஆசாரிய தர்மேந்திராதான் சதி ஆதரவு இயக்கத்தின் அடிக்கொள்ளி.

அக்டோபர் 1, 1987 அன்று இராஜஸ்தான் மாநிலச் 'சதித் தடுப்பு' மேலாணை பிறப்பிக்கப்பட்டது. ஜனவரி 3, 1988 அன்று சதித் தடைச் சட்டம் ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டு, மார்ச் 21, 1988 அன்று அமலுக்கும் வந்தது.


ஆனால், சதி ஆதரவு இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திய ஆர்.எஸ்.எஸ். கும்பலும் ராஜ்புத் சாதி வெறியர்களும் இச்சட்டத்தை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் முறையீடு செய்தனர். "சதியைப் போற்றுவதே எப்படிக் குற்றமாகும்?" என வாதிட்டனர்.

இந்த நாடகங்கள் ஒருபுறம் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போதே மூல வழக்கான ரூப்கன்வர் சதிக் கொலை வழக்கில் என்ன நடந்தது தெரியுமா? சாதாரணக் கொலை வழக்காக இ.பி.கோ. 302-இன் கீழ் பதியப்பட்டிருந்த அந்த வழக்கிலிருந்து குற்றவாளிகளான 45 பேருக்கும் விடுதலை வழங்கப்பட்டு விட்டது. அதாவது, 'சதி' என்ற மத அடிப்படையிலான கொடூரமான, சமூகத்தின் பழக்க அடிப்படையில் நடக்கும் கொலையைத் தண்டிக்க அதுவரை எந்தக் குறிப்பான சட்டமும் கிடையாது. அதனால் குற்றவாளிகள் தப்பிவிட்டார்கள்.

இப்போது சதியைப் புகழ்ந்த வழக்கில் ஒருவாறாக 16 ஆண்டுகள் கழித்து சிறப்பு நீதிமன்ற விசாரணை முடிந்து விட்டது. சாட்சிகள் பெருவாரியாக பல்டியடித்து விட்டனர். குற்றவாளிகளை விடுவிக்க செசன்ஸ் கோர்ட் நீதிபதி சௌகான் சொன்ன காரணங்கள் வருமாறு: "குற்றம் சாட்டப்பட்டவர்கள் 'சதி'யைப் போற்றிப் புகழ்ந்ததற்கான போதிய சாட்சியங்கள் இல்லை; குற்றம் நிரூபிக்கப்படவில்லை; பொதுவாக 'சதி'யைப் புகழ்வதல்ல, குறிப்பிட்ட ஒரு பெண் - 'சதி'யில் கொல்லப்பட்டார் என்பது நிரூபிக்கப்பட வேண்டும்; அவர்கள் அந்தச் 'சதி மாதா'வைப் புகழ்ந்திருக்க வேண்டும்; பொதுவாகப் புகழ்வது குற்றமல்ல. தியோராலா வழக்கிலும் ரூப்கன்வர் 'சதி' வழக்கத்தில் கொல்லப்பட்டார் என்பதே நிரூபிக்கப்படாததால் 'புகழ்ந்தது தவறு' என்ற வழக்குக்கே இடமில்லை.

மேலும், "அப்போது பொதுமக்களிடம் விநியோகிக்கப்பட்ட துண்டறிக்கையில் 'சதிமாதாவாகிய ரூப்கன்வர் இந்துத்துவத்துக்குச் சேவை செய்திருக்கிறார்' என்று அச்சிட்டிருப்பது 'சதி'யைப் புகழ்வதுதான் என்றாலும், ரூப்கன்வரின் 'சதி' வழக்கு நிரூபிக்கப்பட்டால்தான், அத்துண்டறிக்கையே சதியைப் புகழ்ந்தது என்று சொல்லமுடியும்" என்று குற்றவாளிக்கும் சேர்த்து அவர்கள் செய்தது நியாயம் என்று வாதிட்டார் நீதிபதி சௌகான்.

ஒருசில சட்டநுணுக்க விவரங்களைக் காட்டி குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டு விட்டார்கள். ஆனால், அதற்கு அப்பாற்பட்டு தன்னுடைய பார்ப்பன மதவெறியை அப்பட்டமாகப் பச்சையா



ரூப்கன்வர் கொல்லப்பட்ட இடத்தில் வாளுடன் சாதிவெறியர்கள்.

www.padippakam.com

கத் தன் தீர்ப்பில் பதிவு செய்திருக்கிறார் நீதிபதி சௌகான். அவர் சொன்ன 'இந் துத்துவ'ச் சொற்களைக் கவனியுங்கள்: ''சதி என்பவள் ஒருதார மணத்தின் கீழ் வருபவள். அவள் கற்பில் சிறந்தவள், தன்னை முழுதாகக் கணவனிடம் ஒப் புக் கொடுத்தவள். எனவே, கணவன் இறந்த பின்னால் அவனது உடலோடு உடன்கட்டை ஏறுபவள்தான் 'சதி' என்பதல்ல.... புராணப் பாத்திரங்களில் பிரபலமான சீதையும், அனுசூயாவும் 'சதி மாதா'க்கள். எனவே, யார் ஒருவர் அவர்களைப் பற்றிப் பேசினாலும், அது 'சதி'யைப் போற்றிப் புகழ்ந்ததாகும் என்று குற்றம் சாட்ட முடியாது.''

இவற்றின் பொருள் என்ன? யாரோ ஒரு பெண்ணை 'சதி'யில் ஏற்றிக் கொன்று விட்டதாக வைத்துக் கொண்டாலும் கூட, நீதிபதியின் கூற்றுப்படி அது ஒரு சதி என்று நிரூபிக்கப்பட வேண்டுமானால், கொல்லப்பட்ட பெண்ணின் கற்புநிலை நிரூபிக்கப்பட வேண்டும் என்று ஆகிறது. ஒரே ஒரு சின்ன முறுக்கலில், பலியாக்கப்பட்ட பெண்ணே குற்றவாளி ஆக்கப்பட்டு விடுகிறாள்.

தற்போதைய இராஜஸ்தான் முதல் மந்திரியின் அம்மா விஜய் ராஜே சிந் தியா சொன்னார்: ''உடன்கட்டை (சதி) ஏறுவது கற்புடைய பெண்டிரின் உரிமை. அதில் யாரும் தலையிட முடியாது.'' இதையேதான் நீதிபதி சௌகான் வேறு வார்த்தைகளில் சொல்கிறார். நீதிபதி வக்கிரமாக இப்படி வியாக்கியானம் செய்ய முடியாத அளவுக்குச் சட்டம் தெளிவாக இருக்கிறதா என்றால் இல்லை.

1988-இல் ராஜீவ்காந்தி கொண்டு வந்த 'சதி' சம்பந்தமான சட்டம் என்ன சொல்கிறது? ''சதியைப் புகழ்வது என்பதைப் பொறுத்தவரையில், மற்ற விசயங்களோடு - சதி சம்பந்தமாக எந்த ஒரு நிகழ்ச்சியை அல்லது ஊர்வலத்தை ஏற்பாடு செய்வது அல்லது நிதிக் குழுமம் உருவாக்குவது, நிதி வசூலிப்பது அல்லது 'சதி'யில் தள்ளப்பட்ட பெண்ணைப் புகழ்வது அல்லது அவளுக்காகச் 'சதி மாதா' கோயில் கட்டுவது போன்ற எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகும்.'' இச்சட்டத்தில் - 'சதி'யை நடத்தினாலும் அல்லது எந்த வடிவத்தில் அதைப் புகழ்ந்தாலும் அது தண்டனைக்குரியது'' என்று சொல்லப்படவில்லை.

ஆனால், ஒரு புரட்சியாளன் மீது தேசத்துரோகக் குற்றம் சாட்டும் இ.பி.கோ. 124-ஏ சட்டத்தை இதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். ''சட்டபூர்வமாக இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்கு எதிராக வெறுப்பையும், விரோத உணர்ச்சியையும் தூண்டிவிடுவதற்காக எழுத்தால், பேச்சால், சாடையால் அல்லது படத்தால் அல்லது வேறு எந்த விதமாகவாவது காரியம் ஆற்றுவது குற்றமாகும். அரசுக்கு எதிராக உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதும், தூண்டிவிட முயற்சி செய்வதும் கூடக் குற்றமாகும்'' என்று விலாவாரியாகச் சொல்கிறது.

'சதி'ச் சட்டம் வேண்டுமென்றே மழுப்பலாக இருப்பது ஏன்? ஏனென்றால், மிதவாத இந்து மதவாதமும், ராஜபுத்திரச் சாதியினரை அடித்தளமாகக் கொண்டிருப்பதும் அதேநேரத்தில் முற்போக்காக இருப்பதுபோல நடிப்பதும் தான் ராஜீவ் கும்பலின் மழுப்பலுக்குக் காரணம். நீதிபதி ஓட்டைகளுக்குள் புகுந்து விளக்கம் தரும் வாய்ப்பை சட்டமே கொடுத்து விடுகிறது.

இந்த ஒரு விசயத்தில் மட்டும்தான் சட்டம் ஓட்டையாக இருக்கிறதா? இதில் மட்டும்தான் அரசுக்கும் மதத்துக்கும் கூட்டணியுள்ளதா?

*பால்யவிவாகம்:* அதை நடத்துவது குற்றம், நடத்தி வைப்பதும் குற்றம்; ஆனால், திருமணம் சட்டப்படி செல்லுபடியாகும்.

*தீண்டாமை:* சட்டப்படி குற்றம். தெருவில் நுழையக்கூடாது. செருப்புப் போட்டு வரக்கூடாது, டீக்கடையில் தனிக்குவளை, சாதிப்பெயர் சொல்லித் திட்டுவது போன்றவை சட்டப்படி குற்றங்கள். (அது யாரையும் தண்டிப்பதில்லை என்பது தெரிந்ததே) ஆனால் ''கருவறைக்குள் நுழையாதே!'' என்று சொல்வது சட்டப்படியே கூடச் செல்லுபடியாகும். ஏனென்றால், ஆகம விதிகளின்படி அது பார்ப்பன (இந்து) மதஉரிமை. இந்த இரட்டை வேடம்தான் 'சதி'த் தடுப்புச் சட்டத்திலும் தொடர்கிறது.

இதுதான் ஆள்பவர் சொல்லிக் கொள்ளும் மதச்சார்பற்ற அரசியல் சட்டத்தின் யோக்கியதை.

இந்துத்துவச் சக்திகள் சட்டத்துக்கு வெளியே சமூகத்தில் பலத்தைப் பெருக்கி வருகின்றன; நீதிமன்றங்களும், நீதிபதிகளும் அவற்றுக்கு ஆதரவாக மாறி வருகின்றன - அதில் ஒன்றுதான் 'சதி' வழக்குத் தீர்ப்பு. இந்துப் பாசிச அபாயத்திற்கு இது ஒரு கட்டியம். ஆர்.எஸ்.எஸ். பரிவாரக் கும்பல் எந்த எல்லை வரை போவார்கள் என்பதற்கு இது மற்றோர் அறிகுறி.

கடந்த ஐம்பதாண்டுகளில் முசுலீம்களுக்கு எதிராக மதக் கலவரங்களும், அயோத்தி, சதி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான குற்றங்கள் இவை எவற்றிலுமே எதிரிகள் தண்டிக்கப்படுவதில்லை.

இதுதான் அனுபவம்.

நாம் சட்டவாதத்துக்கு ஆட்படாமல் மக்களைத் திரட்டிப் போராட வேண்டும்; இந்தப் பிற்போக்குகளைத் தூக்கி எறியவேண்டும். எதிரியை அங்கே நேருக்குநேர் சந்திக்க வேண்டும். இதுவே மாற்றத்தை நோக்கிய போராட்டமாக இருக்கும்; அரசிலிருந்து மதத்தை வெட்டிப் பிரிக்கின்ற போராட்டமாகவும் இருக்கும்.

● குப்பண்ணன்

## இன்னொரு உடன்கட்டை முதல்வர்

**சி**றப்பு நீதிமன்றத் தீர்ப்பு வெளியானவுடனேயே 'மஹிளா அத்யசார் விரோதி ஜன அந்தோலன்' என்ற பெண்கள் உரிமைக் கூட்டமைப்பு, உடனடியாக அரசாங்கம் மேல்முறையீடு செய்யவேண்டும் என்று கோரியது. ஜெய்ப்பூரின் 12 மாவட்டங்களிலிருந்து 700 பெண்கள் திரண்டு அரசுச் செயலகம் முன்னே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அவர்கள் கோரியதாவது: இராஜஸ்தான் உயர்நீதி மன்றத்தில் அரசு மேல்முறையீடு செய்ய வேண்டும்; வழக்குமன்றத்தில் பல்டி அடித்த 15 அரசு - போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; மற்ற 18 வழக்குகளும் அக்கறையோடு விசாரிக்கப்பட, அவற்றை வாதாடுவதற்காக சட்ட நிபுணர்களைக் கொண்ட ஒரு சிறப்புக் குழுவை அமைக்க வேண்டும்.

ஆறுமணி நேரமாகத் தனது அலுவலக வாயிலில் நடைபெற்ற பெண்களின் ஆர்ப்பாட்டத்தை மாநில முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா சட்டை செய்யவேயில்லை. காரணம் விடுவிக்கப்பட்ட குற்றவாளிகள் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள்; முதல்வரம்மாவே ஆர்.எஸ்.எஸ்.காரர். அவரது அம்மா விஜய ராஜே சிந்தியாவோ ரூப்கன்வரின் 'சதி'யை வெளிப்படையாகவே ஆதரித்து அறிக்கை விட்டவர். மோடிக்கு நெருங்கிய சகா வேறு எப்படியிருப்பார்?

www.padippakam.com



# சினிமா: திரை விலகும்போது...

**சினிமாவின் திரையை விலக்கிக் காண்பிக்கிறது இந்நூல். மாற்று சினிமா, எதிர்சினிமா, இணைசினிமா, மூன்றாம் சினிமா என்றெல்லாம் பேசுபவர்கள் இந்நூல் வலியுறுத்தும் கண்ணோட்டத்தைக் கைவிட்டுச் செல்ல முடியாது; சினிமா எனும் கலையை, அதன் கோட்பாடு, மொழி போன்ற பூச்சாண்டிகளையும் தாண்டி, நம்மால் பயன்படுத்த முடியும் என்கிற நம்பிக்கையை இந்த நூல் தருகிறது.**

"வாழ்க்கை ஒரு சினிமா! சினிமா!'' என ஒரு திரைப்படப் பாடல் துவங்குகிறது. சினிமாவை வாழ்க்கையாகக் கொண்டவர்கள் வாழ்க்கையையும் சினிமாவாகவே எண்ணிக் கொள்கிறார்கள். தாங்கள் மட்டும் எண்ணிக் கொள்வதோடல்லாமல் சினிமாவை வாழ்க்கையாகக் கொள்ளாத கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் வாழ்க்கையையும் கூட ஒரு சினிமாவாகவே ஆக்கத்துடிக்கிறார்கள்.

கலை மனிதனை உணர்ச்சி வசப்பட வைக்கிறது. இதன்மூலம் அக்கலை மனிதனை எதைநோக்கி இயங்கவைக்கிறது, அல்லது முடங்கவைக்கிறது என்பதைப் பரிசீலனை செய்வதே இன்று விமரிசனம் என்பதின் பணியாகும். இது தவிர்த்து வெறுமனே உணர்ச்சி வசப்பட வைக்கிறது என்பதற்காக மட்டும் நாம் அந்தக் கலையைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆட முடியாது.

ஒரு விமரிசனமெனப்படுவது அந்தக்கலையின் வடிவம் மற்றும் உள்ளடக்கம் பற்றிய மதிப்பீடுகள்தான் என்றே இதுவரையில் சொல்லப்பட்டு வந்தன. ஆனால், ஒரு கலை அதனைப் படைக்கும் படைப்பாளி இந்த சமூகத்தைப் பற்றிப்புரிந்து கொண்டிருக்கிற கண்ணோட்டத்தைப் பிரச்சாரம் செய்கிறபடியால், அக்கலையின் மீதான விமரிசனத்தையும் கூட இதே புள்ளியிலிருந்துதான் துவங்கவேண்டும்.

மிகச்சிறந்த படங்கள் என்று வணிக இதழ்களாலும், சிற்றிதழ்களாலும் புகழப்படும் படங்கள் கூட அதனுள் பொதிந்திருக்கும் படைப்பாளியின் சமூகப் புரிதலை அடையாளங் காணும் போது அம்பலப்பட்டுப் போய் நிற்கிறது.

பம்பாய், ரோஜா போன்ற 'புகழ் பெற்ற' படங்கள் எவ்வாறு இந்து தேசிய வெறிக்கு ஆதரவாய்ப் பிரச்சாரம் செய்கிறது என்பதற்கு, அப்படங்களிலேயே இருக்கும் அதற்கான ஆதாரங்களை வெளிக்காட்டுவதற்கு, ஒரு நேர்மையான விமரிசனப் பார்வை வேண்டும். இதில் நேர்மை எனப்படுவது கலை மற்றும் இலக்கியங்களின் பயன்பாடு குறித்த முடிவுகளிலிருந்து வருவதாகும்.

நாட்டின் சகல தரப்பினராலும் பாராட்டுதல்களைப் பெறும் மணிரத்னத்தின் படங்கள் செய்யும் பொய்ப்பிரச்சாரத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அப்படங்கள் சொல்லும் பிரச்சினைகள் பற்றிய சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தை நாம் பெற்றாக வேண்டும். ஆனால் தமிழ்ச் சினிமா விமரிசகர்களிடையே அத்தகைய பார்வைகள் இல்லை. சந்தர்ப்பவாதம், போலித்தனம், அற்பவாதம் ஆகியவற்றில் மூழ்கித்திளைத்திருப்பவர்கள் செய்யும் விமரிசனங்களும், சந்தர்ப்பவாத, போலியான, அற்பவாத விமரிசனங்களாகவே இருக்கின்றன. படைப்பின் மீது மட்டுமல்ல, படைப்பின் மீதான விமரிசனத்திலும் கூட, அவைகள் யாருடைய நலன் சார்ந்திருக்கின்றன என்கிற கேள்வியை எழுப்பும்போதுதான் படைப்பு குறித்து முழுவதுமான ஒரு பார்வையை நாம் பெற முடியும்.

இன்று இப்படிப்பட்ட ஒரு பார்வை தான் நமக்குத் தேவைப்படுகிறது. செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள், தொலைக் காட்சித் தொடர்கள், கதைகள், கவிதைகள், நாடகங்கள், சினிமாக்கள், விளம்பரங்கள், பாடல்கள், இசை.... இப்படிப் பல்வேறு வடிவங்களில் இன்று வந்து கொண்டிருப்பவைகளெல்லாம், ஆளும் வர்க்கத்தின் ஒரு திட்டமிட்ட வலைப்பின்னலுக்கு உள்ளாக நின்று இயங்கியே வேலை செய்து வருகின்றன. அவைகள் யதார்த்தமானது என்று கட்டமைக்கிற விசயங்கள் அனைத்துமே மோசடித்தனத்தையே மூலதனமாகக் கொண்டவை. சமூகப் பொறுப்பற்றவை.

ஒரு கலையின் சமூகப் பொறுப்பு என்பதுவேறொன்றுமல்ல, அந்தக்கலையைப் படைப்பவன் சமூகம் குறித்துப் புரிந்து வைத்திருக்கும் புரிதல்தான். ஒரு படைப்பாளி சமூகத்தைச் சரியாகப் புரிந்து வைத்திருக்கும் போதும், அதை அவனது படைப்பில் சரியாகப் பிரதிபலிக்கும் போதும்தான் அந்தக் கலையும் சமூகத்திற்குப் பொறுப்புள்ள கலையாகிறது. அது சமூகத்தைப் புரிந்து கொள்ளவும், அதை மாற்றவும் அதற்காகப் போராடவும் கற்றுத் தருகிறது. சினிமாவில் ஒரு உதாரணம் ''மாபூமி''.

அதேநேரம் ஒரு படைப்பாளி, தான் சமூகத்தைப் பற்றித் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதை மிகச் சரியாக அவனது படைப்பில் வெளிப்படுத்தக்கூடும். அப்போது சரியான சமூகப் பார்வையானது அந்தப் படைப்பைக் கேள்விக்குள்ளாக்கும்; அம்பலப்படுத்தும். உதாரணம், ''அழகி''.

இப்படி, ஒரு பார்வையை சினிமாவின் மீது மட்டுமல்ல, எல்லாக் கலை, இலக்கிய வடிவங்களிலும் ஆய்ந்து பார்ப்பதற்கான ஆரம்ப, ஆதார நூலாக, *''சினிமா: திரைவிலகும்போது''* இருக்கிறது.

இந்நூலில், வசூலில் வெற்றி பெற்ற 13 தமிழ்ச் சினிமாக்கள், தோல்வியடைந்த 4 சினிமாக்கள், ஒரு இந்திப்படம் மற்றும் சில ஹாலிவுட் படங்கள், ஒரு செய்திப்படம் மீதான விமரிசனங்களும், ஒரு நடிகரைப் பற்றிய கட்டுரை மற்றும் ஒரு விவரணப் படம் உருவான விதம் பற்றிய கட்டுரைகளும் இருக்கின்றன.

ஒரு முழுநீளக் கதைப் படத்தின், ஒரு சில காட்சிகளிலுள்ள முரண்களை மட்டும் எடுத்துக் கொண்டு விமரிசனம் செய்வது என்றில்லாமல் அப்படம் முழுவதுமாய்க் கட்டமைப்பு செய்யப்பட்டுள்ள சரடைக் கண்டு பிடித்து விமரிசிப்பதுதான் ஒரு சினிமா விமரிசனத்தின் அடிப்படை. இந்நூலின் விமரிசனங்கள் அத்தகையதொரு வேலையை, இல்லை, ஆய்வை மிகச்சிறப்பாகச் செய்கின்றன.

இவ்விமரிசனங்கள், சினிமாவின் மீதான பார்வையை, அதன் பின்னர்

www.padippakam.com

சினிமாவை, பின்பு சினிமா பிரதிபலிக்கும் வாழ்க்கையை, அதன்பிறகு வாழ்க்கை யதார்த்தத்துடன் நடத்த வேண்டிய போராட்டங்களின் அவசியத்தையும் நமக்குக் கற்றுக் கொடுக்கின்றன.

'காதலுக்கு மரியாதை' படம் உண்மையில் காதலை எவ்வளவுதூரம் அவமானப்படுத்துகிறதுஎன்பதைவிமரிசனமாக விளக்கும்போது நாம் காதலுக்கும் சமூகத்திற்குமான உண்மையான உறவைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறோம்.

சிவாஜி கணேசன் என்கிற நடிப்பைப் பற்றிய விமரிசனம் பல்வேறு தளங்களில் சிந்தனையைப் பரவவிடுகிறது. சிவாஜியின் நடிப்பு மிகை நடிப்பு என்பதற்கு சிவாஜியின் உடல் மற்றும் குரல் வெளிப்படுத்திய அசைவுகளின் மிகை என்றுதான் சொல்லப்பட்டது. ஆனால் ''மேட்டுக்குடி மனிதர்களின் உணர்ச்சிகளையும் பிரச்சினைகளையுமே, சமூகத்தின் பிரச்சினைகள் என்று நம்பவைக்கவேண்டி,'மிகை'ப்படுத்தப்பட்ட கதைகளின் தேவைகளுக்காகப் பொருந்தியதே சிவாஜியின் 'மிகை' நடிப்பு'' என்கிற மதிப்பீடு மிகச் சரியானது.

போர்க்கப்பல் பொதம்கின்னையும் டைட்டானிக்கையும் ஒப்பிடும் விமரிசனமானது, பிரம்மாண்டம் என்பதின் அர்த்தத்தைப் புரிய வைக்கிறது. டைட்டானிக் பிரம்மாண்டம் தரும் மன எழுச்சியைக் கேள்விக்குள்ளாக்குகிறது. புரட்சியின் மனஎழுச்சியை உணர்த்திய பொதம்கின்னோடு அதை ஒப்பிடுகிறது. அந்த விமரிசனமே ஒரு திரைப் படம் பார்த்த நிறைவைத் தருகிறது.

இந்நூலில் உள்ள விமரிசனங்களுக்கான அடிப்படைக் கண்ணோட்டம், தமிழ்ச் சினிமாக்களை மட்டுமே விமரிசிப்பதற்கானதல்ல, எல்லாக் கலைகளையும் இலக்கியங்களையும் விமரிசிப்பதற்கானவை.

'அழகி'யின் விமரிசனம் குறித்த பதில்கடிதங்களுக்கானபதிலில்''இந்தச் சராசரி மனிதனின் அற்பத்தனங்கள் இடித்துரைக்கப்படாமல், அனுதாபத்துடன் சித்தரிக்கப்படுவது ஏன்?'' என்கிற கேள்வி வாசகனுக்குஒருபுதியதளத்தை நோக்கிய கதவைத் திறந்து விடுகிறது. அதிலேயே இயக்குநர் மு. களஞ்சியத்தின் அன்றைய 'அழகி'க்கான கவலையை தங்கர்பச்சானின் இன்றைய 'தென்றல்' மீது வைத்துப் பார்க்க முடியுமா? சினிமா ரசனையை உயர்த்த முயலும் ஒரு இலக்கியவாதியாக தங்கர் பச்சானைப் பார்க்க முடியுமா? ''மக்களுக்கு நன்றியுடன் இருப்பது எப்படி என்பதையும், அவர்கள் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல சினிமாக் கலையின் மூலம் என்ன உணர்ச்சிகளைத் தர முடியும் என்பதையும் கற்றுக் கொள்ள முயலுங்கள்; போராடுங்கள்!'' என்கிற அறைகூவலை இன்றைய சினிமாக் கலைஞர்கள் காதில் போட்டுக் கொள்வார்களேயானால் அதைவிட அவர்களுக்குமிகச்சிறந்தஆலோசனைஏது?

இந்நூலின் தொடர்ச்சியாக இன்னுமொரு விஷயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். சமீபத்தில் தமிழகமெங்கும் பிரபலமான பாடல், ''மன்மதராசா''. இந்தப் பாடலும் அதற்கான காட்சியமைப்பும், வெகுஜன இதழ்களிலும், சீரியசான இதழ்களிலும் வெகுவாகச் சிலாகிக்கப்பட்டதை நாம் அறிவோம். எஃப்.எம். ரேடியோக்களில், பாடல் பிடித்திருப்பதற்கான காரணங்களைத் தமிழர்கள் இவ்வாறு பட்டியலிடுகிறார்கள்: நன்றாக ஆடுகிறார்கள், கேமரா உள்பட; பாடல் மிக வேகமாக இருக்கிறது; காட்சியில் பறக்கும் கருப்புத் துணி மிகவும் வித்தியாசமான கற்பனை... இப்படியெல்லாம்.




புதிய கலாச்சாரத்தில் வெளிவந்த திரைப்பட விமரிசனங்களின் தொகுப்பு

பக்கம்: 216 விலை: ரூ. 70/-

கிடைக்குமிடங்கள்:

- இரா. சீனிவாசன், புதிய கலாச்சாரம், 18, முல்லைநகர் வணிக வளாகம், 2-வது நிழற்சாலை, அசோக் நகர், சென்னை - 83.
- கீழைக்காற்று வெளியீட்டகம், 10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2.

அதேநேரம் இதையே சினிமா அறிவுஜீவிகள் கூறும் போது, ''வெட்ட வெளி, பேஸ்டல்கலர் விஷுவலைசேஷன், மனிதர்களால் இயலாத நகர்வு வேகம், பாடலின் அதிர்வுக்கேற்ப கேமிராவின் அதிர்வு, நகர்தல் இரண்டும் சேர்ந்த ஒருங்கிணைந்த செயல்பாடு... படபடத்தபடி பறந்த கருமையான நீளமான துணி. இந்தப் பாடலின் காட்சியமைப்பின் வெற்றியின் இரகசியம் அந்தத் துணியில்தான் மறைந்திருந்தது...'' என்று புளகாங்கிதமடைகிறார்கள். அதேசமயம் தமிழ் மக்கள் இசை விழாவில் பேசிய தோழர் மருதையன் இதை நமக்கு வேறு விதமாக உணர்த்தினார்:

''பாடல் எடுக்கப்பட்ட இடமான கோலார் தங்க வயல் சுரங்கத் தொழிலாளர்கள் பஞ்சத்திலே சிறுகச் சிறுகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் லொகேஷன்... எத்தனைப் பெரிய சோகம் நடந்து கொண்டிருக்கிற இடத்தில் இப்படி ஒரு காமவெறியாட்டம். இதே காட்சியை ஈராக்கிலோ, காஷ்மீரிலோ தமிழ்ச் சினிமாப் பொறுக்கிகள் செய்வார்களா? இந்த மன்மதராசாவின் தாளகதி, ''இந்தப்படை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா? பனமரத்திலே வவ்வாலு, ஜெயாவுக்கே சவ்வாலு...'' இது அரசியல் இல்லை. வெறும் பொறுக்கித்தனம்.... அதில் ஒரு கறுப்புத் துணி பறக்க, நாயகனும் நாயகியும் (இரண்டு பொறுக்கிகளும்) வெறி கொண்டது போல் ஆடுகிறார்கள். கருப்பு நிறம், அனல், காமம், வெறி. இது தான் அந்தக் காட்சி.''

இங்கே ஒரு பாடலை, அதன் காட்சியைக் கூட்டாகப் படமெடுத்தவர்களின் சமூகப் புரிதலையும், அது எவ்வளவு தூரம் வக்கிரமானதாயிருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ளமுடிகிறது.

மிகவும்புத்திசாலிகளாகத்தோற்றமளிக்கும் மதன், சுஜாதா போன்றவர்களின் விமரிசனங்களும், தொலைக்காட்சிகளில் பீஸ்பீஸாகப் பிய்த்து எறியப் படும்திரை விமரிசனங்களும் இப்படிப்பட்ட சமூக நோக்கிலான விமரிசனங்களைவழங்குவதில்லை.

சினிமாவின் திரையை விலக்கிக் காண்பிக்கிறது இந்நூல். மாற்று சினிமா, எதிர்சினிமா, இணை சினிமா, மூன்றாம் சினிமா என்றெல்லாம் பேசுபவர்கள் இந்நூல் வலியுறுத்தும் கண்ணோட்டத்தைக் கைவிட்டுச் செல்ல முடியாது; கூடக் கூட்டிக் கொண்டுதான் போக வேண்டியிருக்கும். வேறு வழியில்லை. 'தீக்கொழுந்து' கூட்டிக் கொண்டு போகிறது.

புதியதொரு பார்வையாளர் வட்டத்தையும், ரசனை முறையையும் உருவாக்கவேண்டியநிலையில்இருப்பதை தெளிவாக அறிந்து கொண்டு, நீலகிரி

www.padippakam.com

# மகாமகத்தை அம்பலப்படுத்தி ம.க.இ.க.வின் பொதுக்கூட்டம்

**"மகாமகம் - தமிழகத்தை குஜராத் ஆக்கும் பார்ப்பனச் சதியின் வெள்ளோட்டம்" என்ற முழக்கத்தின் கீழ் கடந்த மார்ச் 29-ஆம் தேதி மாலை குடந்தை நகரில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் காளியப்பன் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்:**

"இந்தப் பொதுக்கூட்டத்தை மகாமகம் நடப்பதற்கு முன்னதாகவே நடத்தியிருக்கலாமே எனப் பலர் கேட்டார்கள். நிச்சயம் காவல்துறை அனுமதித்திருக்காது. இந்தக் கூட்டத்தை மகாமகக் குளம் மேல் கரையில் நடத்தத்தான் அனுமதி கேட்டாம். காவல்துறை அனுமதி மறுத்தது. ஏனென்றால் "மகாமகம் நடந்த மார்ச் 6-ம் தேதியிலிருந்து மேலும் 48 நாட்களுக்கும் புனித நீராடலாமென சங்கராச்சாரி அறிவித்திருக்கிறார். எனவே வேறு இடத்தில் நடத்திக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டார்கள். அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் உரிமை சங்கராச்சாரியின் வாய்மொழி அறிவிப்பால் பறிக்கப்படுகிறது.

50 கோடி ரூபாய் மக்கள் பணத்தை எடுத்து சங்கராச்சாரி, ஆர்.எஸ்.எஸ். கையில் கொடுத்திருக்கிறார் ஜெயலலிதா. கும்பகோணத்தில் சுற்றியுள்ள பாழடைந்த இடிந்த கோயில்கள் எல்லாவற்றிலும் கும்பாபிஷேகம், யாகம், பூசை என்ற பெயரில் தமிழ்நாடு முழுவதிலிருந்தும் பார்ப்பனப் புரோகிதர்கள் வரவழைக்கப்பட்டு அவர்களுக்குக் கோடிக்கணக்கில் மக்கள் வரிப்பணம் வாரியிறைக்கப்பட்டுள்ளது.

தஞ்சை மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளராக இருந்த திரு. திருஞானம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. முனியப்பன் ஆகிய இருவரும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர். இருவரும் கோவில்களுக்குள் வரவேண்டியிருக்கும். அதனால் கோவில் தீட்டாகிவிடும் என்பதால் அவர்கள் இருவரும் சங்கராச்சாரி உத்தரவின் பேரில் மாற்றப்பட்டனர். ஆர்.எஸ்.எஸ். கும்பல் காவல்துறை ஒலிபெருக்கிகளையும் தங்கள் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியுள்ளது.

"இந்துக் கடவுளைத் திட்டுபவனைக் கொலை செய்ய வேண்டும். அதற்கு 3 ஆண்டுதான் தண்டனை. நம் கடவுளைக் காப்பாற்ற இதுகூடச் செய்யக்கூடாதா?" என்று பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

இப்படிப் பேசிக் கொண்டே, "பயங்கரவாதி ராவணனைக் கொன்ற ஸ்ரீராமன்" என்று நோட்டீஸ் கொடுக்கிறான். பச்சைப் பொய்களை, மதவெறி நஞ்சை நோட்டீசு அடித்தே கொடுக்கிறான். போலீசு என்ன செய்கிறது? "மகாமகம் முடியும் வரை பர்தா அணிந்து வெளியே போகாதீர்கள்" என்று முசுலீம் பெண்களை எச்சரிக்கிறது.

தமிழகத்தை குஜராத்தாக மாற்றுவதற்கு இந்த மகாமகம் ஒரு சோதனை ஓட்டம். இந்தச் சோதனை ஓட்டத்திலேயே அவன் காலை ஒடிக்கவில்லையென்றால், அப்புறம் தமிழகமும் அவனுக்குச் சோதனைச்சாலைதான்!"

இவ்வாறு தனது சிறப்புரையில் எச்சரித்தார் தோழர் காளியப்பன்.

மாவட்ட தேயிலைத் தோட்ட விவசாயிகளின் பிரச்சினைகளைக் கையிலெடுத்து விவசாயிகள் செய்த போராட்டங்களினால் அவர்களுக்கு உண்டான துன்பங்களைக் காண்பித்து, பின்னர் விவசாயிகளின் வாழ்க்கையில் இருக்கின்ற துன்பங்களைக் காண்பித்து, பின்னர் நீலகிரி மலை அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டது உள்ளிட்டு, காலங்காலமாக அவர்களின் உழைப்பு சுரண்டப்படுவதைக்காண்பித்து, பின்னர், தற்போதைய விலைவீழ்ச்சிக்கான உண்மையான காரணமான முதலாளித்துவச் சந்தை தந்த துன்பத்தைக் காண்பித்து, பிரச்சினையின் அடிஆழம் வரை சென்று திரும்பி, 'விழித்தெழுங்கள்' என்கிற அறைகூவலைச்சொல்லிபோராட்டம்என்பது துன்பமில்லை; போராட்டமே வாழ்க்கை, காரணம், போராட்டத்தில் தான் வாழ்வின் பிரச்சினைகளுக்கான தீர்வு இருக்கிறது என்பதை உணர்த்தும் 'தீக்கொழுந்து' விவரணப்படம் உருவானவிதம் இந்நூலில் இருக்கிறது.

செய்திப்படம், விவரணப் படம், ஆவணப்படம், குறும்படம் இன்னும் பல்வேறு பெயர்களில் இயங்கும் சினிமாவின் வகைகளைப் பரிசோதிப்பவர்களுக்கு 'தீக்கொழுந்து' ஒரு பாடநூல். ஒருமுறை பார்த்து அயர்ந்து போக வைப்பதில்லை இப்படம். மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டி பார்க்கப் பார்க்க படம் பார்வையாளனுக்கு உணர்த்தும்பாடங்கள் ஏராளம்.

விலைவீழ்ச்சிக்குக் காரணம் 'தரம்' என்று மோசடித்தனமாக வாதிடும் விக்ரம் கபூர் ஐ.ஏ.எஸ். - தனது எளிய கேள்விகளினால் தோலுரிக்கும் விவசாயிகள் கூறுவதைக் கேட்கும்போது, ஆளும் வர்க்கங்கள் அவ்வப்போது புலம்பும் சுற்றுச் சூழல், போலியோ, எய்ட்ஸ், உள்ளிட்ட நலத்திட்டங்கள் அனைத்தையுமே உடைத்துப் பார்க்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகிறது; பார்வையாளனை பிரச்சினைக்கான களத்தை நோக்கி விரட்டுகிறது. இது போன்று படமாக்க காமிராவைக் கையிலெடுக்கத் தூண்டுகிறது. தீக்கொழுந்து ஒரு குறும்படமல்ல. ஒரு தீவிர விவரணப் படம். தமிழில் இது முதல்படம்.

நாடு மறுகாலனியாதிக்கத்தில் சிக்கிக்கிடக்கிறது. மக்கள் அதை அனுமதித்துக் கொண்டிருக்கிறார்கள். மௌனம் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மௌனத்தை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது கலைகளும் இலக்கியங்களும்தான். அவ்வாறு கற்றுக் கொடுத்தவர்கள், கலைகளையும் இலக்கியங்களையும் கைப்பற்றி வைத்துக் கொண்டிருக்கிற பார்ப்பனர்களும், பார்ப்பனிய அடிமைகளும்தான். கலாச்சாரத் தளத்தில் வெற்றி கண்ட பார்ப்பனியம் இன்று அரசியல் அதிகாரம் நோக்கி வருகிறது. இச்சூழலில் ஆளும் வர்க்கங்கள், தங்களின் இருப்பை அசைக்க முடியாது என்கிற இறுமாப்பைத் தங்களது செய்தி ஊடகங்கள் மற்றும் கலை, இலக்கியங்களின் மூலமாகத்தான் வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள், நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கையை மேலும் மேலும் வளர்க்கும் வேலையைத்தான் இன்றைய ஊடகங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

இதை உடைத்தெறியத்தேவையான வெடிமருந்து இந்நூலில் இருக்கிறது. நேர்மையான விமரிசகர்கள் இதைப் பரிசோதனை செய்து பார்க்கட்டும். அப்பரிசோதனைதான், கலைகளையும், இலக்கியங்களையும் மக்களுக்கானதாக ஆக்குவதற்குத் துணை நிற்கும்.

பரப்பப்பட்டிருக்கிற பிற்போக்கு ரசனையிலிருந்து மக்களை மீட்டெடுக்கவும், உழைக்கும் மக்களின் பண்பாட்டை அவர்களுக்கு நினைவூட்டவும், நாள்தோறும் முன்னேறி வந்து கொண்டிருக்கிற சினிமா எனும் கலையை, அதன் கோட்பாடு, மொழி போன்ற பூச்சாண்டிகளையும் தாண்டி, நாம் பயன்படுத்த வேண்டும். நாம் பயன்படுத்துவோம். நம்மால் பயன்படுத்த முடியும் என்கிற நம்பிக்கையை ***"சினிமா: திரைவிலகும் போது"*** தருகிறது.

● குருசாமி மயில்வாகனன்

www.padippakam.com



பயாஃப்ராவை நோக்கி...

(நைஜீரிய நாவல்)



# பயாஃப்ராவை நோக்கி...

## (நைஜீரிய நாவல்)

எந்தப் பேச்சை ஆரம்பித்தாலும் குறுக்கே வந்துவிடுகிறது அந்தக் கதை. ஏதாவது ஒரு வேலையில் இறங்கினால் 'முதலில் என் துயரத்தை ஊர் முழுக்கச் சொல்லிவிட்டு வா' என்று கையைப் பிடித்து இழுக்கிறது இந்தக் கதை. ஓயாமல் கேட்கும் பெண்களின் அழுகுரலிலிருந்து என்னால் தப்ப முடியவில்லை, காரணம் தெரிந்து கொள்வதற்கு முன்பே துண்டாடப்பட்ட குழந்தைகளின் பிணங்களை என் கண்களிலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை. மனிதத் தன்மையற்ற இராணுவத்தின் ஊளைச் சத்தம் திடீர் திடீர் என என்னைச் சுற்றி வளைத்துவிடுகிறது.

பயாஃப்ராவை நோக்கி என்ற நாவலில் வரும் டெபி ஒகடெம்போவைப் போல நானும் ஒரு கணம் நினைக்கிறேன். ''உறங்கிக் கனவு கண்டு, கண்ட கனவிலேயே நான் காணாமல் போய்விட வேண்டும். ஆனால் அடுத்த நிமிடம் இந்த அநியாயங்களுக்கு சாட்சி சொல்ல நான் இருக்க வேண்டும். இந்தத் துயரங்களை மாற்ற நான் ஏதாவது செய்ய வேண்டும்'' என்று டெபியைப் போலவே படிப்பவர்களையும் பொறுப்பானவர்களாக்கிப் பேச வைத்து விடுகிறது 'பயாஃப்ராவை நோக்கி'' நாவல்.

கதை இதுதான். துயரத்தின் வடிநிலமான ஆப்பிரிக்கக் கண்டத்தில் நைஜீரியாவைக் காலனியாக வைத்திருந்த இங்கிலாந்து அங்கு தன்னுடைய வணிகச் சுரண்டலுக்கு ஏற்றவாறு ஒரு பொம்மை அரசை ஏற்படுத்த ஒரு போலி ஜனநாயகத் தேர்தலை நடத்துகிறது.

நைஜீரியாவின் மூன்று பெரும்பான்மை இனங்களான ஹவுஸர், இக்போ, யுரூபர் போன்ற இனங்களை தேர்தலுக்காக மோதவிட்டு அதில் அங்குள்ள எண்ணெய் வளத்தைச் சுரண்டிக் கொள்ளதனக்கு ஏற்றாற்போல் ஹவுஸர் இனத்தைச் சேர்ந்த மல்லம் நூரு கானோவை முதல் பிரதம மந்திரி ஆக்குகிறான் இங்கிலாந்து வைஸ்ராய் மெக் டொனால்டு. ஆட்சி அமைத்த உடனேயே குறுகிய காலத்தில் மந்திரி சபையிலுள்ள ஒடுமுகசாவுக்கும் டுரோசாரோவுக்கும் இடையில் ஊழல் செய்வதில் பங்குச் சண்டை ஏற்பட்டு அது நாட்டில் இனக்கலவரமாகி இரத்தக்களறி ஆகிறது.

நாட்டின் இந்த நிலைமைகளை மாற்ற இராணுவத்தின் உயர்பொறுப்பிலிருக்கும் பிரிகேடியர் ஆன்யிமர், அபுசி போன்றவர்கள் ஊழல் அரசியல்வாதிகளைக் கொலை செய்து தண்டித்து விட்டு நைஜீரியாவில் இராணுவ ஆட்சி அமுல்படுத்தி மக்களுக்குச் சேவைசெய்யலாம் என்று முடிவெடுப்பதுடன் ஊழலில்லாத தெருச்சண்டை இல்லாத இரத்த ஆறு ஓடாத ஒரு புதிய நைஜீரியாவை, சமூக அமைப்பை உருவாக்குவோம் அதை பயாஃப்ரா எனப் பெயரிட்டு அழைப்போம் என இலட்சியக் கனவு காண்கின்றனர். அப்படியே காரியத்தை முடித்து இராணுவ ஆட்சியை அமல்படுத்துகின்றனர்.

ஆனால் கடைசியில் இராணுவ ஆட்சியும் இங்கிலாந்து கையாட்களான மெக் டொனால்டு அவனது மகன் ஆலன்கிரே ஆகியோரது பிரித்தாளும் சூழ்ச்சியால் கிழக்கத்தியப் பிராந்தியத்தைத் தன்னாட்சி பெற்ற பயாஃப்ரா பகுதி என்று அபுசி அறிவித்துக் கொண்டை சண்டையிடுவதும் ஏற்கெனவே ஆட்சி அதிகாரமுள்ள நைஜீரியாவை மோஹோ என்ற ஹவுஸரின் இராணுவத் தளபதி இங்கிலாந்து உதவியுடன் கிழக்கத்தியப் பகுதியோடு இராணுவ நடவடிக்கைஎடுத்து ஏறத்தாழ ஒரு லட்சம் இக்போ இனத்தவர் கொல்லப்பட்டு நாடே இரத்தக்களறியாகிறது.

இங்கிலாந்து அரசியல்வாதிகளுடனும், பணமூட்டைகளுடனும் விமானத்தில் தப்பித்து ஓடுகிறான் அபுசி. இப்படி இலக்கற்று நடந்த இனச்சண்டை, உள்நாட்டுப் போர் இவற்றுக்கெல்லாம் காரணமானவர்களும், இவைகளுக்கு அடிப்படையான இங்கிலாந்தின் போலி ஜனநாயக சூழ்ச்சிகளும் பயாஃபரா என்ற இலட்சியக் கனவை அந்த் நாட்டு மக்களின் இரத்தத்திலேயே தோய்த்து அழிக்கும் அவலம்தான் முழுக்கதையும்.

நைஜீரியாவில் எந்த முகத்தைத் திருப்பினாலும் அதில் சொல்வதற்கு ஒருகதைஇருக்கிறது. இந்தக்கதையைப் படிக்கப் படிக்க நாமே கதாபாத்திரமாகிப் பேச ஆரம்பித்துவிடுகிறோம். கதைக்களம் நைஜீரியாதான் என்றபோதிலும் காலனியாதிக்க இங்கிலாந்தின் சூழ்ச்சிகளாலும் சுரண்டலாலும் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் கதை நம்முடையதாகவும் ஆகி விடுகிறது.

இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுத்தாகி விட்டது என்று வெள்ளைக்காரர்கள் அடித்த ஜோக்கிற்குக் காலம் பூராவும் கபடமாகச் சிரித்த காந்திபோல நைஜீரியாவிலும், 'சுதந்திர' அரசை நிறுவ முயற்சி எடுத்த இங்கிலாந்து ஜெனரல் மெக் டொனால்டின் சிரிப்பின் மூலமாக, அவன் வாயிலாகவே நோக்கம் புலப்படுகிறது: ''சுதந்திரம் அவர்களுக்கு ஆளும் அதிகாரத்தைத் தரும், வியாபாரத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லாமல்'' (நூல், பக்:14) இந்தியாவின் கடைசி இங்கிலாந்து கவர்னர் ஜெனரல் மவுண்ட்பேட்டன், மாமா நேருவை முதல் பிரதமராக்கியதும் இந்தவகையில்தான்.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் அருவருப்பானதேர்தல் என்பது எவ்வளவு கேலிக் கூத்தாகிறது என்பதை அனுபவத்தில் நாம் அறிவோம். நைஜீரியாவிலும் அப்படி

*பழங்குடி மக்கள் வாக்குரிமையை ஆபத்தாக நினைத்து ஓட்டுப்போட வர மறுக்கிறார்கள். எல்லோரும் வாக்குச் சாவடிக்கு வரவேண்டுமெனக் கட்டாயமாக வண்டியிலேற்றப்படுகிறார்கள். வாக்குரிமை ஒரு தண்டனை என்பதை அனுபவிப்பதற்கு முன்பே அறிய நேரும் விசித்திரம் இவ்வாறு அரங்கேறுகிறது.*



படிப்பகம்

www.padippakam.com





**ஆர்.எஸ்.எஸ்.பரிவாரத்தின ஆரிய பார்ப்பன சாம்ராஜ்யக் கனவைத்தகர்த்தெறிவோம்!**

*வெளியீடு:*

ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு.

பக்கங்கள் : 80
விலை: ரூ.10

பார்ப்பனமயமாக்கம் என்றால் என்ன? பாமர மக்களின் பக்தியில் பார்ப்பனப் பாசிசம் எவ்வாறு பதுங்கியிருக்கிறது? இந்துவெறிப் பாசிசத்தின் சித்தாந்தம் என்ன? செயல்திட்டங்கள் என்ன? தேர்தலில் பார்ப்பன ஜெயாவையும் பாரதிய ஜனதாவையும் தோற்கடித்து விட்டால், பார்ப்பனப் பாசிசம் ஒழிந்து விடுமா?பகிரங்க ஆயுதப் பயிற்சியோடு பாசிச குண்டர் படை மட்டுமின்றி, சாமியார்படை, கோயபல்சுபடை, 'சமூக சேவை'ப் படை கட்டிக் கொண்டு எதிரிகள் களத்தில் நிற்கும்போது, நாம் செய்ய வேண்டியது என்ன? அதற்கான செயல்திட்டங்கள் என்ன? - ஆகியவற்றைத்தொகுத்து விளக்கும்நூல்.

நூல் கிடைக்குமிடம்:

*இரா. சீனிவாசன்,*
*எண். 4, ஐந்தாவது தெரு,*
*செகந்நாதபுரம்,*
*சேத்துப்பட்டு,*
*சென்னை - 600 031.*

*புதியஜனநாயகத் தொழிலாளர்முன்னணி,*
*110, இரண்டாவதுதளம்,*
*63, என்.எஸ்.கே. சாலை,*
*கோடம்பாக்கம்,*
*சென்னை - 600 024.*


யொருகாட்சியை நாவல் விவரிக்கிறது. பழங்குடி மக்கள் வாக்குரிமையை ஆபத்தாக நினைத்து ஓட்டுப் போட வர மறுக்கிறார்கள். எல்லோரும் வாக்குச்சாவடிக்கு வரவேண்டுமெனக் கட்டாயமாக வண்டியிலேற்றப்படுகிறார்கள். ''தாங்கள் அனைவரும் ஏதோ ஒரு குற்றத்திற்கான தண்டனையாகப் பிடிக்கப் பட்டு விட்டதாக நினைத்து அந்தப் பெண்கள் கதறினார்கள்'' (பக்:29) வாக்குரிமை ஒரு தண்டனை என்பதை அனுபவிப்பதற்கு முன்பே அறிய நேரும் விசித்திரம் இவ்வாறு அரங்கேறுகிறது.

முதலாளித்துவ ஜனநாயகம் நாற ஆரம்பித்த உடனேயே நமது நாட்டிலும் சில படித்த பாமரர்கள் ''இராணுவ ஆட்சி கொண்டு வரணும் சார்'' என்று பேசுவதைப் பார்த்திருக்கிறோம். இராணுவ ஆட்சியில் என்ன நடக்கும்?

''எங்கள் குழந்தைகளை விட்டு விடச் சொல்லி அம்மா கெஞ்சினாங்க சரி விட்டு விடுகிறோம்னு சொல்லி கிட்டே எங்க கண்முன்னால் அம்மா... அப்பாவை வெட்டிட்டாங்க... குழந்தைங்க யாருன்னு உள்ளே வந்து அக்காவை இழுத்தாங்க... அக்கா வயத்துல குழந்தை இருக்கு... அதை வெளியே எடுத்து வெட்டி... அம்மா...'' அவன் மயங்கி விழுந்தான்.'' (பக்:124)

நடப்பது நைஜீரியாவிலா இல்லை குஜராத்திலா என்று நீங்கள் குழம்ப வேண்டாம். முதலாளித்துவ இராணுவமும் போலீசும், அதுவும் இனவெறி ஊட்டப்பட்ட இந்த கும்பல் தங்களது சக சிப்பாய்களைக் கூட விட்டு வைப்பதில்லை என்பதை மும்பை குஜராத் கலவரங்களின் போது பார்த்திருப்பீர்கள். களங்கள் வேறானால் என்ன கதை ஒன்றுதான். நைஜீரியாவின் அந்த முழுக் கதையையும் முன்னின்று சொல்லும் மேற்கத்திய கல்வி கற்ற டெபி என்ற இராணுவத்தில் பணியாற்றும் நபருக்கே அது நேர்ந்தபோது அதிர்ந்து போகிறாள்.

தன்னைச் சுற்றி வளைத்த இராணுவக் கும்பலிடம் அவள் மன்றாடுகிறாள். ''நான் நைஜீரிய இராணுவத்தைச் சேர்ந்தவள், பயாஃப்ரா இராணுவத்தைச் சேர்ந்தவள் அல்ல. என்னைப் பொறுத்தவரை நைஜீரியா ஒரே தேசம்தான்.'' (பக்:178) ஆனால் அரசு எந்திரங்களுக்கு மனிதக்காதுகள் ஏது?

''தன் மீது தலைவன் *பால்* படுப்பதையும், பிறகு ஒவ்வொருவனாகப் படுப்பதையும், தான் இரத்தம் கசிவதையும் அவள் கடைசியாக உணர்ந்தாள்... ஆண்களாக இருந்திருந்தால் கொன்றிருப்பார்கள். பெண்கள் என்பதால் இப்படி மானபங்கப்படுத்தி மெல்லச் சாக விட்டிருக்கிறார்கள்.'' (பக். 182)

தனது வெள்ளைக்காரக் காதலன் ஆலன் கிரே இங்கிலாந்து கைக்கூலி என்று தெரிந்தவுடன் அவனைத் துச்சமென ஒதுக்கித் தள்ளுகிறாள் டெபி.

''உன் மாதிரி ஒரு சுயநல வெள்ளைப் பிசாசுக்கு ஆப்பிரிக்கா ஒருபோதும் இனி மனைவியாக இருக்க முடியாது... மீண்டும் சந்திப்பதானால் வேறொரு சந்தர்ப்பத்தில் சம உரிமை உள்ளவர்களாகச் சந்திப்போம். (பக்:351) என்பதைப் படிக்கும்போது நாட்டுப்பற்றின் ஆழம் காதலைவிட உயர்வானது என்பதைப் படிப்பவர்களுக்குக் கற்றுத் தருகிறது.

உண்மையில், பயாஃப்ராவில் வெற்றி பெற்றவர்கள் ஹவுஸர்களோ, இக்போக்களோ இல்லை. இங்கிலாந்து முதலாளிகள் என்பதை நாவல் அனைவருக்குமான எச்சரிக்கையாக எடுத்துக் காட்டுகிறது. பட்டவர்த்தனமான உண்மையே நாவலின் இலக்கிய நயமாகி விடுகிறது. எந்தவிதமான மொழி அலங்காரமுமில்லாமல் உள்ளடக்கத்தின் தூண்டுதலே வாசகனின் உணர்வு நிலைகளை ஆட்கொண்டு விடுவது இந்நாவலின் தனிச்சிறப்பு.

பயாஃப்ராவின் உள்ளடக்கம் மட்டுமல்ல; அதைப் படிப்பவரின் ரசனை மட்டமும் ஒரு அடி முன்னேறித்தான் போகிறது. தமிழில் மொழியாக்கம் செய்த ஆசிரியரின் மொழிபெயர்ப்பில் உள்ள சில குறைகளையும், எழுத்துப் பிழைகளையும் சரி செய்து வெளியிட்டிருந்தால் படிக்க இன்னும் நன்றாக இருக்கும். இருப்பினும் ''அப்பம் வடை தயிர்சாதம்'' என்ற பாலகுமாரனின் படையல்களைக் கடைவிரிக்கும் புத்தகச் சூழலில் 'பயாஃப்ராவை நோக்கி...' நாவலை தேர்ந்தெடுத்த பதிப்பகத்தாருக்கு நன்றி சொல்லலாம்.

● **துரை. சண்முகம்**

**பயாஃப்ராவை நோக்கி**
**(நைஜீரிய நாவல்)**

*நூலாசிரியர்:*
**புச்சியமச்செட்டா**

பக்கங்கள்: 352
விலை: **ரூ.150**

*தமிழாக்கம்:*
**இரா. நடராசன்**

*வெளியீடு:*
**ஸ்நேகா,**
348, டி.டி.கே. சாலை, ராயப்பேட்டை,
சென்னை - 600 014.

*நூல்கிடைக்குமிடம்:*
**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
10, அவுலியாசாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 600 002.
தொலைபேசி: 28412367.



படிப்பகம்

www.padippakam.com



# பெயரெச்சம்

“பெயர்ல என்னங்க இருக்கு?” —என்று பொதுவாகச் சொல்வதுண்டு. ஆனால் என் பெயரைக் கேட்ட மாத்திரத்தில், ஏதோ அதற்குப்பின்னே பெரிய அபாயம் உள்ளதுபோல் சிலர் விசாரித்தபோது பயமாகிப்போனது என்றார் நண்பர் ஒருவர். அப்படிப் பெயரில் என்னதான் பிரச்சினை? மேற்கொண்டு அவரே நினைவுகூர்ந்தார்.

“அப்போது நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நேரம். வகுப்பறையில் ஆசிரியர் வரிசையாக வருகைப் பதிவேட்டின் பெயர்களைச் சொல்லிக் கொண்டு வந்தார். மணி... ராஜா... வெங்கடேஷ்.. ஸ்டாலின். என் பெயரை உச்சரித்ததும் ஒரு நிமிடம் மௌனமானார். ஸ்... டா... லி... ன் என்று தலையாட்டிக் கொண்டு மீண்டும் ஒருமுறை அழுத்திச் சொன்னார். தனது மூக்குக் கண்ணாடியைக் கழற்றிப் பொறுமையாக மேசை மீது வைத்தவர், “டேய் பயங்கரமான ஆளுப்பா. பக்கத்துல உள்ள பசங்க பாத்து நடந்துக்குங்கடா. இவுரு ஸ்டாலின். ஏதாவது ஏடாகூடமா நடந்தீங்க தலைவரு போட்டுத் தள்ளிடுவாரு” என்று நடித்துக் காண்பிக்க, வகுப்பறையில் உள்ள மாணவர் எல்லாம் குபீரென்று ஒட்டு மொத்தமாகச் சிரித்து விட்டனர்.

“ச்சே... எல்லாரும் கிண்டல் பண்றாங்க என்ன பேரு இது? அப்பா ஏன் தான் இந்த பேரு வச்சாரோ?” என்று பெயரின் மீது ஒரு வெறுப்பும் யார் என் பெயரைக் கேட்டாலும் சொல்வதற்கு கூடவே ஒரு பயமும் ஏற்பட்டது. ஏதாவது ஒரு முரடனுடைய பெயராக இருக்குமோ? அப்பா அவ்வளவாகப் படிக்காததால் கேட்ட மாத்திரத்திலேயே பிறர் பயப்படவேண்டும் என்று இப்படி ஒரு பெயர்வைத்திருப்பாரோ! பெயருக்குப் பின்னால் ஏதோ ஒரு புதிர் இருப்பது மாதிரி இப்படி ஒரு பெயரை ஏன் தான் வைத்தாரோ என்று கலக்கமானது.

மெல்லப் பள்ளிப் பருவம் கடந்து கல்லூரிக்குள் காலடி எடுத்து வைத்தேன். ஒருநாள் வகுப்பில் ஆங்கிலப் பேராசிரியர் என் பக்கம் கவனத்தைச் செலுத்திப் பேச ஆரம்பித்தார். “என்ன ஸ்டாலின்? உனக்கு... யார் பேரு வெச்சது? “எங்க அப்பாதான் சார் ஏன்?” ஒரு வித தயக்கத்துடன் ஆரம்பித்தேன். “இல்ல ஸ்டாலின்னு பேரு வெச்சிருக்கிறாரே ஒங்க அப்பா என்ன கம்யூனிஸ்டா?” “இல்ல சார்... ரயில்வே கலாசி.” “ஒருவேளை ஒனக்குத் தெரியலையோ என்னமோ?” “இல்ல சார் அவரு எந்த கட்சியும் கிடையாது ஏன் சார் கேக்குறீங்க?” “இல்லப்பா ஸ்டாலின்ங்குறது கம்யூனிஸ்ட் பேரு, இல்ல நீங்க கிறிஸ்டினா?” “இல்ல சார்.” “ஓ.கே. ஸ்டாலின் சும்மாதான் கேட்டேன்” என்று முடித்துக்கொண்டார்.

பேராசிரியர் இயல்பாகப் பேசினாலும் என் பெயரைச் சுற்றிச் சுற்றி நடந்த விசாரணையால் குழப்பம் கூடிப் போனது. ஏதோ ஒரு மறைபொருளைக் கண்டுபிடிக்கும் ஆர்வத்துடன் அவர் பல துணைக் கேள்விகளுடன் என் பெயர் பற்றி விசாரித்தது, பெயருக்குப் பின்னால் என்னதான் இருக்கிறது என்பதை நாமே ஆராய வேண்டும் என்ற எண்ணம் தீவிரமாக ஏற்பட்டது. இன்னும் இதை முடிவடையாத பெயரெச்சமாக விட்டுவிடக் கூடாது .எனத் தோன்றியது.

இவ்வளவு காலம் அவ்வப்போது வெளியில் நடந்ததை அப்பாவிடம் சொல்லும்போது அவரும் “போடா! சும்மா வெளயாட்டுக்குச் சொல்றாங்க” என்றுதான் சொல்லிவந்தார். இவ்வளவு பெரியவனாக வளர்ந்தபிறகும் அந்தப் பதில் போதுமானதாக இல்லை. பொறுமையாக , அப்பா உட்கார்ந்திருக்கும் நேரம் பார்த்து புதிருக்கு விடைகேட்பது போல வினவினேன்.

“ஏம்ப்பா என்னத்துக்கு எனக்கு ஸ்டாலின்னு பேரு வச்சீங்க?” “ஆமாண்டா, இன்னும் கல்யாணம் பண்ணி ஒரு புள்ள பெத்த பின்ன கேட்காம இப்பவாவது கேட்டியே. தம்பி, அரக்கோணத்துல எங்கூட வேலபாக்குறான் பாரு சாமிதுரை. அவனுக்கு புள்ள பொறந்தப்ப, பெரியார் அரக்கோணம் கூட்டத்துக்குவந்தாரு. அந்தப்புள்ளக்கி அவுரு வச்ச பேரு ஸ்டாலின். ரஷ்யாவோட ஜனாதிபதி பேருப்பா. ரொம்ப ஒசத்தியான கம்யூனிஸ்டு தலைவரு, நல்ல பேராச்சேன்னு உனக்கும் வச்சேன்...” அப்பா அந்த பெயருக்கு உரியவரை பலவாறு சிறப்பித்துப் பேசிக் கொண்டே போனார். இப்போது மனதில் பெயர் பற்றிய புதிர் ஆர்வமாக மாறி என்னைத் தூண்டியது.

இந்தச் சூழ்நிலையில் சென்னைக்கு வேலை தொடர்பாக சென்றபோது அண்ணாசாலையில் ஒரு நடைபாதைக் கடையில் ஸ்டாலின் என்ற தடித்த எழுத்தோடு ஒரு புத்தகம் என் கண்ணில்பட, மூடிக் கிடக்கும் கற்கோட்டையாய் அச்சுறுத்தும் மனதின் கேள்விகளுக்கு நடக்கும் வழியில் ஒரு திறவுகோல் கிடைத்த மாதிரி பெருமகிழ்ச்சியானது.

ரஷ்யாவில் ஒரு ஏழை செருப்பு தைக்கும் தொழிலாளி குடும்பத்தில் பிறந்து, பாதிரியாருக்குப் படிக்கப் போய் தன்நாட்டு ஏழை மக்கள் படும் துன்பத்தை மாற்றுவதற்காகப் படிப்பை விட்டு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து தொழிலாளர்களோடு இணைந்து போராடிச் சிறைபட்டு, தொழிலாளர்களின் ஆட்சி அதிகாரத்தை ஏற்படுத்தி அந்த நாட்டுக்கு அதிபராகி இரண்டாம் உலகப்போரில் ஜெர்மானிய நாஜி வெறியர்களைத் தோல்வியடையச் செய்து உலகைக் காத்ததுடன் தனது நாட்டிலும் உழைப்பவர்க்கான ஆட்சியதிகாரத்தைப் பாதுகாக்க இறுதிவரை போராடியவர் ஸ்டாலின் என்று படிக்கப் படிக்க ஸ்டாலின் என்ற பெயர்ச்சொல் வினைச் சொல்லாய் விரிந்துகொண்டே போனது.

அதிகம் படிக்காதவர் என்று நினைத்த என் அப்பா எவ்வளவு ஒரு அருமையான பெயரை எனக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என நினைக்க வியப்பு மேலிட்டது. எனக்கு நானே முதன்முறையாக இந்தப் பெயரைப் பற்றிப் பெருமையாக மனம் மகிழ்ந்த போதும் கூடவே திரும்பவும் அச்சமானது. இது பெயரைப் பற்றித் தெரிந்து கொண்டதால் தோன்றிய புதிய அச்சம். இந்த உயர்ந்த பெயருக்கேற்றமாதிரி நாம்வாழவேண்டுமே என்ற அச்சம்!”

● சுடர்விழி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/PMG (CCR)/239/03-05
www.padippakam.com

## என்னிடம் இருப்பது ஏராளம்



மழையில் சொட்டச் சொட்ட நனைந்த
ஒரு நாளின் மாலைப்பொழுது
ஒளியில் இட்டு நெய்தெடுத்த
ஒரு வாழ்க்கை

ஒருமித்த கூட்டுணர்வால்
உருவான நாங்கள்
அங்கே விளைந்து
பயிரான நான்

என்னிடமிருந்து உன்னால்
எதை எடுக்க முடியும்?
இந்த மாலைப்பொழுதை
எந்த இருட்டுச் சிறையில் பூட்ட முடியும்?

ஒருயிரைப் பிறிதோர் உயிரால்
மோதித் தேய்த்து
அழித்துவிட முடியுமோ உன்னால்?
எம்மிலிருந்து என்னைத்
தனியே பிரித்துவிட முடியுமோ
உன்னால்?

என்னிடம் ஏதுமில்லை
என்றாய் அல்லவா,
உன்னை வெல்லும் சக்தியே
அங்குதான் உள்ளது
என்னிடம் இருப்பது ஏராளம்
ஏதுமில்லை என்பதிலும் ஒன்றிருப்பது
உனக்குத் தெரியாது.

- பாஷ்
(சிறைக்கவிதை)

பாஷ்: நக்சல்பாரிக் கவிஞர்.
காலிஸ்தானி மதவெறியர்களை
உறுதியாக எதிர்த்து
நின்றார். அவர்களால் 1988-இல்
தளவாண்டிசேலம் என்ற
அவரது கிராமத்தில்
சுட்டுக்கொல்லப்பட்டார்.
அப்போது அவர் வயது 38.



படிப்பகம்